பக்கங்கள் : பதினாறு

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 தை 22 சனிக்கிழமை (04.02.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :69

## அரசு-புலிகள் பேச்சுக்கான திகதி ஏதும் இன்னமும் நிர்ணயிக்கப்படவில்லை

கொழும்பு, பெப்.4

அரசு - புலிகள் இடையே ஜெனீவாவில் நடைபெறவிருக்கும் பேச்சுக்கான திகதி தொடர்பாக இணக்கம் ஏதும் இன்னும் எட்டப்படவில்லை.

பெப்ரவரி 15, 16ஆம் திகதிகளில் இப்பேச்சுகளை நடத்த இணக்கம் காணப்பட்டிருப்பதாகத் தெரிவித்து நேற்று சில செய்தி ஊடகங்களில் வெளியான தகவல்கள் தவறானவை என விடுதலைப் புலிகளின் உயர்மட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

கடத்தப்பட்டுள்ள தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் எட்டுப்பணியாளர்கள் விடயத்தில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட முன்னர் பேச்சுக்கான திகதி குறித்து நிர்ணயம் செய்வதற்கு வாய்ப்பில்லை என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

"பேச்சுக்கு உத்தேசமாக மூன்று தொகுதித் திகதிகள் (பெப்ரவரி 15, 16 அல்லது பெப்ரவரி 21, 22 அல்லது பெப்ரவரி 22, 23 ஆகிய

(16 ஆம் பக்கத் தொடர்ச்சி)

## 2,042 கைதிகளுக்கு இன்று சுதந்திரம்

கொழும்பு, பெப். 4

சுதந்திரதினத்தை முன்னிட்டு இன்று 2,042 கைதிகள் சுதந்திரப் பறவைகள் ஆகின்றனர்.

சிறு, சிறு குற்றங்களுக்காகத் தண்டனை பெற்ற 2,042 கைதிகள் சுதந்திரதினத்தையொட்டி நாட்டின் 27 சிறைகளில் இருந்தும் இன்று விடுவிக்கப்படுகிறார்கள் எனச் சிறைச்சாலை ஆணையாளர் ரூமி மர்சூக் நேற்றுத் தெரிவித்தார்.

விடுதலையாகும் கைதிகளில் 57 பேர் பெண்களாவர். (ஐ-க)

### தமிழர் புனர்வாழ்வுக்கழகம் குற்றச்சாட்டு

# விடுவிக்கப்பட்ட பெண்கள் இருவரிடமும் பொலிஸார் இரவில் மிரட்டி வாக்குமூலம்!

### தனியாகத் தடுத்துவைத்திருந்து

கொழும்பு, பெப்ரவரி 4

**கருணா குழுவினர் எனக் கருதப்படுவோரால் கடத்தப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் முன்பள்ளி ஆசிரியைகள் இருவரும் நேற்று மட்டக்களப்பு நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் இருவரும் மட்டக்களப்பு பொலீஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் இரவு தடுத்து வைக்கப்பட்டிருந்த சமயம் இவர்கள் பொலீஸ் புலனாய்வாளர்களினால் மிரட்டப்பட்டனர் என்றும்- ஏற்கனவே இவர்களிடம் இருந்து பெறப்பட்ட வாக்குமூலங்கள் திருத்தப்பட்டு கையொப்பம் பெறப்பட்டது என்றும்- தமிழர் புனர்வாழ்வுக்கழக அதிகாரிகள் குற்றஞ்சாட்டுகின்றனர்.**

விடுவிக்கப்பட்ட இந்த இருவரையும் கொழும்புக்கு அழைத்துவருவதற்கான ஏற்பாடுகளை தமிழர் புனர்வாழ்வுக்கழக அதிகாரிகள் மேற்கொண்டிருந்தனர். கடத்தப்பட்ட ஏனைய எழுவர் பற்றி இதுவரை தகவல் எதுவும் இல்லை.

இரண்டு வெவ்வேறு சம்பவங்களில் கடந்த ஞாயிறன்றும், திங்களன்றும் இவர்கள் வெலிகந்தைப் பகுதியில் வைத்துக் கடத்தப்பட்டனர் என்பது தெரிந்ததே.

ஞாயிற்றுக்கிழமை ஐவரும், திங்கட்கிழமை ஐவரும் கடத்தப்பட்டனர். ஞாயிற்றுக்கிழமை கடத்தப்பட்டவர்களிலேயே இருவர் விடுவிக்கப்பட்டுள்ளனர். நேற்றையதினம் மேலும் ஒருவர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

(16 ஆம் பக்கத் தொடர்ச்சி)

## அம்பாறையில் ஹர்த்தால் அக்கரைப்பற்றில் சூடு!

கொழும்பு, பெப்.4


கடந்த திங்கட்கிழமை வெலிகந்த பகுதியில் வைத்துக் கடத்தப்பட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பணியாளர்களை உடனடியாக விடுதலை செய்யக்கோரி நேற்று அக்கரைப்பற்றுப் பகுதியில் ஹர்த்தால் அனுஷ்டித்தோர்மீது விசேட அதிரடிப்படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இத் தாக்குதலில் பொது மக்கள் சிலர் சிறுசிறு காயங்களுக்குள்ளாகினர்.

இச்சம்பவம் நேற்றுக்காலை 9.30 மணியளவில் அக்கரைப்பற்றுத் திருக்கோவில் பிரதான வீதியில் இடம்பெற்றது.

கடந்த திங்கட்கிழமை வெலிகந்தைப்

(16 ஆம் பக்கத் தொடர்ச்சி)

## செங்கடலில் பயணிகள் கப்பல் மூழ்கி ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் மரணம்!



டுபா, பெப்.4

செங்கடலில் பயணிகள் கப்பல் ஒன்று மூழ்கியதில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது. பல சடலங்கள் கடலில் மிதக்கின்றன என மீட்புப் பணியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அல் - சலாம் பொக்கசியோ - 98 என்ற கப்பல் நேற்றுமுன்தினம்

(16 ஆம் பக்கத் தொடர்ச்சி)

## ஒட்டுக் குழுக்களை விரட்டப் போவதாக பொங்கி எழும் மக்கள் படை எச்சரிக்கை!

யாழ்ப்பாணம் பெப். 4

துணை இராணுவ ஒட்டுக் 'குழுக்களை எமது மண்ணில் இருந்து அகற்றுவதற்கான நடவடிக்கைகளில் உடனடியாக ஈடுபடப் போவதாக யாழ்.மாவட்ட பொங்கி எழும் மக்கள் படை எச்சரித்திருக்கின்றது.

'பொங்கி எழும் மக்கள் படை - யாழ் மாவட்டம்' என்ற அடிக்குறிப்புடன் நேற்று ஊடகங்களுக்கு விடுக்கப்பட்ட ஓர் அறிக்கையில் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கின்றது.

இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தமிழ் மக்களது இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்துவதை அடிநாதமாகக் கொண்ட போர்நிறுத்த உடன்படிக்கையை முழுமையாக நிறைவேற்றுவதற்கான பேச்சுவார்த்தைகள் சர்வதேச அனுசரணையுடன் ஜெனீவா

(16 ஆம் பக்கத் தொடர்ச்சி)

## கடத்தப்பட்டோரில் மற்றொரு பெண்ணும் விடுதலை!

கொழும்பு,பெப்.4

கருணா குழுவினர் எனக் கருதப்படுவோரால் கடத்தப்பட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பணியாளர்களில் மற்றும் ஒரு பெண் விடுவிக்கப்பட்டிருக்கிறார் என்று தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நேற்றிரவு விடுத்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாமுனை வடக்கு பிராந்திய இணைப்பாளரான எஸ்.டூசினி என்ற யுவதியே நேற்று

(16 ஆம் பக்கத் தொடர்ச்சி)

**கருணா குழுவினர் எனச் சந்தேகிக்கப்படுவோரால் ஆள்சேர்க்கப்பட்ட அருள்ராஜ் என்ற 15 வயதுச் சிறுவனையே படத்தில் காண்கிறீர்கள்.**

**கருணா அணியில் சேர்க்கப்பட்ட இந்தச் சிறுவன் விடுமுறையில் விடப்பட்ட சமயம் பார்த்து தனது குடும்பத்தினருடன் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான ஆயித்திய மலைக்கு தப்பி வந்து சரணடைந்தான். கொக்கட்டிச் சோலையில் உள்ள 'சோலையகம்' பணிமனையில் சிறுவன் அருள்ராஜ் செய்தியாளர்களைச் சந்தித்தபோது எடுத்த படம்.**



## உள்ளூராட்சித் தேர்தல் பற்றி ஆராய தேர்தல் செயலகத்தில் நாளை மாநாடு

ஏறாவூர்.பெப்.4

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் தொடர்பான உயர்மட்ட மாநாடு நாளை ஞாயிற்றுக்கிழமை ராஜகிரிய தேர்தல்கள் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க தலைமையில் நடைபெறவுள்ள இம்மாநாட்டிற்கு நாட்டின் 22 தேர்தல் மாவட்டங்களையும் சேர்ந்த தெரிவத்தாட்சி அலுவலகங்கள் மற்றும் உதவித் தேர்தல் ஆணையாளர்கள் ஆகியோர் அழைக்கப்பட்டுள்ளனர்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான ஏற்பாடுகள், வேட்பு மனுக்களை ஏற்றுக் கொள்ளுதல் மற்றும் தபால்மூல வாக்களிப்பு போன்ற முக்கிய விடயங்கள் தொடர்பாக இம்மாநாட்டில் ஆராயப்படவுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை நடத்துவது தொடர்பான பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும்

(16 ஆம் பக்கத் தொடர்ச்சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கல்வியங்காடு சந்திப் பகுதியில் நகைக் கடை உடைத்து திருட்டு

வலி. கிழக்கு ஜன. 4

நல்லூர் பொதுச் சந்தைப் பகுதியில் அமைந்துள்ள தங்க நகைக் கடை ஒன்று உடைக்கப்பட்டு அங்கிருந்து பல லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளும் வெள்ளியினால் செய்யப்பட்ட ஆபரணங்களும் சூறையாடப்பட்டுள்ளன.

கல்வியங்காடு சந்தியில் - ஆடியபாதம் வீதியில் - அமைந்துள்ள தங்க நகைக் கடையிலேயே நேற்று முன்தினம் இரவு இந்தத் திருட்டு இடம் பெற்றுள்ளது.

இதே வேளை - அன்றைய தினம் இரவு பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள பிரபல வர்த்தக நிலையம் ஒன்றை உடைக்க திருடர்கள் முயன்றுள்ளனர்.

அந்தக் கடை அமைந்துள்ள கட்டடத்தின் மேல் மாடியில் வசிப்போர் விழித்தெழுந்து குரல் எழுப்பியதை அடுத்து திருடர்கள் தமது முயற்சியைக் கைவிட்டுத் தப்பி ஓடி விட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

நல்லூர் பொதுச் சந்தைப் பகுதியின் வர்த்தக சங்கத்தினர் முன்னர் இரவு நேரப் பாதுகாப்பு உத்தியோகத்தர்களை நியமித்திருந்தனர். இதனால் திருட்டுகள் குறைந்திருந்தன. ஆனால் அண்மையில் ஏற்பட்ட அசாதாரண சூழ் நிலைகாரணமாக ஊழியர்களின் பாதுகாப்புக் கருதி சேவை இடைநிறுத்தப்பட்டது. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தியே கடைகளில் திருட்டுச்சம்பவங்கள் மீண்டும் ஆரம்பமாகி உள்ளன என்று கூறப்படுகின்றது. (ஐ-180-190)

## மெய்வல்லுநர் போட்டி

யாழ்ப்பாணம், பெப்.4

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் மெய்வன்மைப் போட்டி நாளை மு.ப. 9.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் சு.புண்ணியசீலன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக வருகை தரு விரிவுரையாளரும் முன்னாள் யாழ். மாவட்ட உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளருமான க. நாகமணியும், சிறப்பு விருந்தினராக தெல்லிப்பழைக் கோட்ட உதவிக்கல்விப் பணிப்பாளர் ச.கைலாசநாதனும் கலந்துகொள்வர் (ஐ-204)

# நகரில் வாகனச் சோதனைகளை பொலீஸார் மீண்டும் ஆரம்பித்தனர்

யாழ்ப்பாணம், பெப்.4

யாழ். நகரப் பகுதியில் வாகன அனுமதிப் பத்திரச் சோதனை நடவடிக்கைகளைப் போக்குவரத்துப் பொலீஸார் மீண்டும் தீவிரப் படுத்தியுள்ளனர்.

நேற்றுக்காலை முதல் நண்பகல் வரை யாழ். நகரின் முக்கிய வீதிகளில் கடமையில் ஈடுபட்ட போக்குவரத்துப் பொலீஸார், வீதியால் சென்ற மோட்டார் சைக்கிள்களை வழி மறித்து வாகன மற்றும் சாரதி அனுமதிப் பத்திரங்களைச் சோதனையிட்டனர். 'ஹெல்மட்' இன்றி மோட்டார் சைக்கிள் ஓட்டியவர்களையும் 'ஹெல்மட்' அணியுமாறு எச்சரிக்கை செய்தனர்.

குடாநாட்டில் இராணுவம் மற்றும் பொலீஸாரை இலக்குவைத்து கடந்த சில வாரங்களுக்கு முன்னர் பரவலாக நடத்தப்பட்டு வந்த தாக்குதல்களையடுத்து, பொலீஸார் தமது சிவில் நடவடிக்கைகளை நிறுத்தியிருந்தனர். ரோந்து நடவடிக்கைகளையும் மட்டுப் படுத்தியிருந்தனர்.

இதன்பின்னர் விடுதலைப் புலிகளும் அரசும் ஜெனீவாவில் சமாதானப் பேச்சுகளை நடத்த இணக்கம் தெரிவித்ததையடுத்து குடாநாட்டில் படைத்தரப்பினர் மீதான தாக்குதல்கள் நின்றுபோயுள்ளன.

இதனையடுத்தே பொலீஸார் தமது சிவில் நடவடிக்கைகளை மெல்ல மெல்ல ஆரம்பித்துள்ளனர். பொலீஸார் வீதிகளில் வாகனச் சோதனைகளில் ஈடுபடும்வேளையில் படையினர் அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கி வருகின்றனர். (ஐ-8)

## வயோதிப மாதுவை தாக்கிவிட்டு நகை அபகரிப்பு

தனியாக இருந்த வயோதிபப் பெண்ணின் வீட்டினுள் நுழைந்த இனந்தெரியாத இருவர், அப்பெண்ணை அடித்துத்தாக்கிவிட்டு அவர் அணிந்திருந்த 10 பவுண் தங்க நகைகளை அபகரித்துச் சென்றனர்.

கொக்குவில் கிழக்கில் நேற்று பிற்பகல் 2 மணிக்கு இடம்பெற்ற இச்சம்பவத்தில் முத்துக்குமாரு இராசம்மா (வயது 88) என்ற வயோதிபப் பெண்ணே நகைகளைப் பறிகொடுத்தவராவார்.

வழமையாக உறவினர் வீடுகளில் நகைகளைப் பாதுகாப்பாக வைக்கும் இப்பெண், புதுமனை பிரவேச வைபவம் ஒன்றிற்குச் செல்வதற்காக நகைகளை வாங்கிவந்து புறப்பட ஆயத்தமாகிக் கொண்டிருந்த சமயமே இச்சம்பவம் இடம்பெற்றது.

அடிகாயத்திற்கு இலக்கான இந்த வயோதிபப்பெண் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஐ-15)

# சிறுவர் துஷ்பிரயோகம் குறித்து 2005இல் 999 சம்பவங்கள் பதிவு

யாழ்ப்பாணம், பெப்.4

குடாநாட்டில் கடந்தவருடம் 999 சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இந்த அதிர்ச்சித் தகவல் அரச சார் பற்ற நிறுவனங்களின் இணையம் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் வெளியாகியுள்ளது.

சிறுவர்களை வேலைக்கு அமர்த்தல், பாலியல் துஷ்பிரயோகம், பாடசாலை இடைவிலகல், சிறுவர்களைப் பராமரிப்பின்றிக் கைவிடல் போன்றவற்றின் மூலமே சிறுவர்கள் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குடாநாட்டிலுள்ள 14 பிரதேச செயலர் பிரிவுகளிலும் மொத்தம் 999 சிறுவர் துஷ்பிரயோகச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

பிரதேச செயலர் பிரிவுகளும் அவற்றில் இடம்பெற்ற துஷ்பிரயோகச் சம்பவங்களின் எண்ணிக்கையும் வருமாறு:-

✱ கோப்பாய் - 167, ✱ யாழ்ப்பாணம் - 127, ✱ சண்டிலிப்பாய் - 96, ✱ சாவகச்சேரி - 89, ✱ பருத்தித்துறை - 83, ✱ வேலணை - 77, ✱ நல்லூர் - 54, ✱ சங்கானை - 54, ✱ தெல்லிப்பழை - 48, ✱ உடுவில் - 45, ✱ ஊர்காவற்துறை - 32, ✱ காரைநகர் - 14, ✱ நெடுந்தீவு - 13, ✱ கரவெட்டி - 100. (ஐ-8)

## தென்பகுதி ஊடகவியலாளர் இன்று வருகை

யாழ்ப்பாணம், பெப்.4

தென்னிலங்கை ஊடகவியலாளர்கள் குழு இன்று வடபகுதிக்கு வருகிறது.

சுதந்திர ஊடக இயக்கம், இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம், ஊழியர் ஊடகத் தொழிற் சங்கச்சம்மேளனம், ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரம் ஆகியவற்றைப் பிரதிநிதித்துவப் படுத்தும் 25 ஊடகவியலாளர்கள் இக்குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

எதிர்வரும் 7 ஆம் திகதி வரை இவர்கள் இங்கு தங்கியிருப்பார்கள். இவர்களை யாழ். ஊடகவியலாளர்கள் சந்திக்கும் நிகழ்வு யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

ஊடகவியலாளர்களை இச்சந்திப்பில் பங்கேற்கும்படி ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மைய இணைப்பாளர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் அழைப்புவிடுத்துள்ளார்.

# தொண்டராசிரியர்களில் 150 பேருக்கு வன்னிப் பாடசாலைகளில் நியமனம்

**யாழ்ப்பாணம், பெப்.4**

**வன்னிப் பெருநிலப்பரப்பில் உள்ள பாடசாலைகளில் ஆரம்பக்கல்வி, கணிதம், தமிழ், விஞ்ஞானம் போன்ற பாடங்களுக்கு ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.**

**தொண்டர் ஆசிரியர்களாகப் பணியாற்றியோரிலிருந்து இவர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். இவர்களின் விவரங்கள் நேற்று வடக்கு - கிழக்கு மாகாண சபையினால் வெளியிடப்பட்டிருக்கின்றன. நியமனம் பெறும் ஆசிரியர்களினதும் பாடசாலைகளினதும் விவரம் வருமாறு:-**

### முல்லைத்தீவு

வல்லிபுரம் உதயச்செல்வி (குமுழமுனை ம.வி.), சிவகுரு கிருபா (குமுழமுனை ம.வி.), கார்த்திகேசு சுதாகரன் (வற்றாப்பளை ம.வி.), செந்திரிக்கா குகநாதன் (வற்றாப்பளை ம.வி.), சண்முகலிங்கம் பிரேமினி (வற்றாப்பளை ம.வி.), சுப்பிரமணியம் ஜெயமாலினி (அளம்பில் றோ.க.வி.), சின்னத்துரை சியாமளா (கேப்பாப்பிளவு அ.த.க.) அன்ரனி ஜெபமாலை அருள்மலராஜி (முல்லை. றோ.க.த.ம.பா.), சிவசிதம்பரம் பகீரதி (முள்ளியவளை அ.த.க.ம.பா), பாலச் சந்திரன் கவிதா (கலைமகள் வித்தி.), தர்சினி விஜயரத்தினம் (கலைமகள் வித்தி.), தர்மகுலசிங்கம் பிரதீபா (சிலாவத்தை இ.த.க. பாடசாலை), அமிர்தலிங்கம் அஜந்தன் (சிலாவத்தை இ.த.க.பா), பொன்னம்பலம் கதீஸன் (சிலாவத்தை இ.த.க.பா.), இந்திரகுமாரி தங்கராஜ் (சிலாவத்தை இ.த.க.பா).

விநாயகமூர்த்தி ஸ்ரீதரன் (தண்ணீரூற்று சி.த.க.பா.), சந்தனமலர் லோகீஸன் (தண்ணீரூற்று சி.த.க.பா.), தாட்சாயணி மணிவாசகன் (தண்ணீரூற்று சி.த.க.பா.), வசந்தராணி கந்தையா (தண்ணீரூற்று எச்.பி.ரி.எம்.பாடசாலை), பரமானந்தன் லோகீசன் (தண்ணீரூற்று எச்.பி.ரி.எம்.பாடசாலை), பிறேமா நடராஜ் (தண்ணிமுறிப்பு அ.த.க.பா.), திருப்பதி மகேந்திரன் (தண்ணிமுறிப்பு அ.த.க.பா.), சிதம்பரப்பிள்ளை இந்திராதேவி (வலையன்மடம் அ.த.க.பா.), துரைசிங்கம் மஞ்சுளா (வெட்டுவாய்க்கால் அ.த.க.பா.), சுப்பிரமணியம் ரமா (வெட்டுவாய்க்கால் அ.த.க.பா.), நடராஜ் ஸ்ரீதரன் (முள்ளிவாய்க்கால் கிழக்கு அ.த.க.பா.), நாகரத்தினம் யோகாம்பிகை (ஆறுமுகத்தான்குளம் அ.த.க.பா.), முருகன் ரஜனி (கொக்கிளாய் அ.த.க.பா.), கனகசபை ஜெகதீஸ்வரி (கொக்குத்தொடுவாய் அ.த.க. பா.), கைலாசபதி ரஜனி (கொக்குத்தொடுவாய் அ.த.க.பா.).

அருளானந்தம் றோசாஜினி (புதுக்குடியிருப்பு றோ.க.த.க.பா.), புண்ணியமூர்த்தி மஞ்சுளா (புதுக்குடியிருப்பு றோ.க.த.க.பா.), சுதாஜினி தணிகாசலம் ((புதுக்குடியிருப்பு றோ.க.த.க.பா.), சபாபதிப்பிள்ளை விஜயலட்சுமி (ஆனந்தபுரம் அ.த.க.பா.), மேரிஸ்டென அருள்தாஸ் (ஆனந்தபுரம் அ.த.க.பா.), ஏரம்பு விஜயா (ஸ்ரீசுப்பிரமணிய வித்தி.), சுகந்தினி சபாநாயகம் (ஸ்ரீசுப்பிரமணிய வித்தி.), தணிகாசலம் குறிஞ்சிக்குமரன் (ஸ்ரீசுப்பிரமணிய வித்தி.), குகேந்திரவாணர் மனோரஞ்சிதா (ஸ்ரீசுப்பிரமணிய வித்தி.), ஏரம்புமூர்த்தி பிரபாகரன் (சுதந்திரபுரம் அ.த.க.பா.), திருஞானசம்பந்தமூர்த்தி பொன்னம்பலம் (சுதந்திரபுரம் அ.த.க.பா.), ஜெயவதனி மகாதேவா (உடையார்கட்டு வித்தி.), ஜெயந்தினி பொன்னம்பலம் (விசுவமடு ம.வி.), நாகவதனி அருளம்பலம் (விசுவமடு ம.வி.).

மரியசெல்வம் மரியசந்திரக்லா (விசுவமடு ம.வி.), பாலகிருஷ்ணன் சந்திரவதனி (பாரதி வித்தி.), சுபோதினி குணசேகரம் (பாரதி வித்தி.), பத்மநாதன் கேதீஸ்வரன் (பாரதி வித்தி.), அமிர்தலிங்கம் சுதாஜினி (பாரதி வித்தி.), கனகசபை கௌசலா (கோம்பாவில் விக்னேஸ்வரா வித்தி.), ராஜநாயகம் அனுஷியா(கோம்பாவில் விக்னேஸ்வரா வித்தி.), கந்தையா மோகனராஜ் (கோம்பாவில் விக்னேஸ்வரா வித்தி.), கனகலிங்கம் சுமிதா (கைவேலி கணேசா வித்தி.), முத்துவேல் சசிகலா (புறாவில் த.வித்தி), நந்தகுமார் சுதாஜினி (புறாவில் த.வித்தி), தம்பிராஜா சாந்தகுமார் (தேராவில் த.வித்தி.), தாரணி தர்மலிங்கம் (மன்னாங்கண்டல் அ.த.க.பா.)

### கிளிநொச்சி

சூசைமுத்து பரம்சோதி (கிளி/மத்திய கல்.), வைத்திலிங்கம் வேணுகாணன் (வட்டக்கச்சி ம.வித்தி.), சிவகௌரி சிவப்பிரகாசம் (வட்டக்கச்சி ம.வித்தி.), செல்லையா தேவராணி (இராமநாதபுரம் ம.வித்தி), பகீரதன் மேரி ஜஸ்ரெலா (இராமநாதபுரம் மகா வித்தி.), மனோகரன் ஜெயகாந்தன் (அக்கராயன் மகா வித்தி.), சவரிமுத்து அமுதிகா (அக்கராயன் மகா வித்தி.), தவமகள் ராதா செல்லையா (கனகபுரம் மகா வித்தி.), மேரி அஞ்சலின் பசுபதி (கனகபுரம் மகா வித்தி.), மேரி கொலஸ்ரா அந்தோனிதாஸ் (கனகபுரம் மகா வித்தி.), லோகநாதன் மேரி ரோசலின் (புனித பற்றிமா றோ.க.வித்தி.), ரேணுகா யோகலிங்கம் (கிளி/மகா வித்தி.), லாவன்யா ஸ்ரீபன் (கிளி/மகா வித்தி.), நவனீதராசா வளர்மதி (கிளி/மகா வித்தி.), பிரசாந்தி குமாரலிங்கம் (கனகாம்பிகைக்குளம் அ.த.க.பா.).

சுதா வரதராசா (கனகாம்பிகைக்குளம் அ.த.க.பா.), வரதராசா வசந்தி (சிவநகர் அ.த.க.பா.), செந்தில்குமரன் மணி (புதுமுறிப்பு விக்னேஸ்வர வித்தி.), சிவபாலன் பிருந்தா (புனித அந்தோனியார் றோ.க.த.பா.), கறுப்பையா கமலாதேவி (பாரதி வித்தி.), முனியாண்டி மணி (ஊற்றுப்புலம் அ.த.க.பா.), நவரதி நடராசா (யூனியன்குளம் அ.த.க.), நாகமணி பிரபாகரன் (கனகபுரம் அ.த.க.பா.), புஸ்பஜெனோபாயாகூப் (செல்வநகர் அ.த.க.பா.) வேலுப்பிள்ளை சகுந்தலாதேவி (இந்து ஆரம்ப வித்தி.), இராசு சுதர்சினி (இந்து ஆரம்ப வித்தி.), கேமளா திருபுகழ்குமாரன் (இந்து ஆரம்ப வித்தி.), அனற் சுகந்தி டேவிட் (ஐயனார்புரம் அ.த.க. பா.), ஜெகதீஸ்வரி சுந்தரம் (ஐயனார்புரம் அ.த.க. பா.), குமாரசிங்கம் நவீஸ்வரி (கலவெட்டித்திடல் நாகேஸ்வர வித்தி.)

குலமணிதேவி கணபதிப்பிள்ளை (கண்டாவளை மகா வித்தி.), குருசாமி சந்திரவதனி (முரசுமோட்டை அ.த.க.பா.), கந்தவனம் கிரிசங்கர் (பரந்தன் அ.த.க.பா.), சண்முகநாதன் சஞ்ஜீவகி (கண்ணகை அம்மன் வித்தி.), விநாயகமூர்த்தி வேலானந்தம் (கண்ணகை அம்மன் வித்தி.), மாலா ரசிகரன் (நாகேந்திரா வித்தி), ரஜிதா தேவராசா (கல்மடுநகர் அ.த.க.பா.), [illegible] கணேசநாதன் [illegible] (கோவில்வயல் [illegible] அ.த.க.பா.), நவரத்தினம் சசிகலா (சோரன்பற்று கணேசா வித்தி.), ஆனந்தன் ஆனந்தரஞ்சன் (முழங்காவில் மகா வித்தி.), பரராஜசிங்கம் சசிதரன் (முழங்காவில் மகா வித்தி.), குவேந்திரன் இலட்சுமணன் (முழங்காவில் மகா வித்தி.), புனிதமலர் கனகரத்தினம் (நாச்சிக்குடா அ.த.க.பா.), விக்ரோறியா அருணாசலம் (நாச்சிக்குடா அ.த.க.பா.),

எட்வேட்சில்வா யறின் சோபாசினி (வேரவில் இந்து மகா வித்தி.), கபிரியேல் இராசமலர் (கிராஞ்சி அ.த.க.பா.), கௌசலா குணநாதன் (கிராஞ்சி அ.த.க.பா.), கலைவீர நளினி சோமசுந்தரம் (பல்லவராயன்கட்டு இ.த.க.பா.), ஜெயசித்திரா செபமாலை (வலைப்பாடு றோ.த.க.பா.), வைத்திலிங்கம் சுதாஸ்கரன் (ஞானிமடம், அ.த.க.பா.), சிவலோகநாதன் ஸ்ரீரமணி (ஞானிமடம், அ.த.க.பா.), ஜென்சி குயின்ரா டேவிட் (ஞானிமடம், அ.த.க.பா.), பிரகாஸ் சிவசக்தி (பரமன்கிராய் அ.த.க.பா.), கவிதா தியாகராஜா (சாமிபுலம் அ.த.க.பா.), கலைரசிராசா (தம்பிராசபுரம் அ.த.க.பா.), வேலுப்பிள்ளை நிர்மலன் (தம்பிராய் அ.த.க.பா.), பரமானந்தசிவம் தேவகி (ஜெயபுரம் அ.த.க.பா.), உதயகுமாரி சிவப்பிரகாசம் (கண்ணாவில் அ.த.க.பா.), கார்த்திகா கணபதிப்பிள்ளை (கண்ணாவில் அ.த.க.பா.).

### துணுக்காய்

கே.கமலசோதினி (பாலிநகர் ம.வித்தி), தர்மலா இளையதுரை (பாலிநகர் ம.வித்தி), எஸ்.தவச்செல்வம் (பாலிநகர் ம.வித்தி), ரஞ்ஜினி ஸ்ரீதரன் (பாலிநகர் ம.வித்தி), சுபாஜினி உதயகுமார் (பனங்காமம் பூவரசன்குளம் அ.த.க.பா.), நாகராஜ் விமலாம்பிகை (கோதிமூலை தமிழ் வித்தியாலயம்), கணபதிப்பிள்ளை டெல்ஸி (அம்பாள்புரம் த.வித்தி.), குணநிதி ராசதுரை (மல்லாவி ம.கல்.), விநாசினி முருகையா (யோகபுரம் மகா வித்தி.), நைதார் சகுந்தலா (பெரிய இத்திமடு அ.த.க.பா.), சுபாஜினி சிவகனகலிங்கம் (ஒட்டுசுட்டான் ம.வி.), ரவிச்சந்திரன் சசிகலா (மாங்குளம் வித்தி.) குணரட்ணம் சுகன்யா (கறிப்பட்ட முறிப்பு அ.த.பா.), சிவலட்சுமி சத்தியபவன் (ஒலுமடு த.வித்தி.), யசோதினி ரட்ணம் (முத்தையன்கட்டு ரைட்வேங் அ.த.க.பா.).

ரேணுகா கிருபாகரன் (முத்தையன்கட்டு ரைட்வேங் அ.த.க.பா.) அருந்தவலட்சுமி சிவபாதம் (முத்தையன்கட்டு ரைட்வேங் அ.த.க.பா.), விஸ்ணுலதன் தவலோசினி (முத்தையன்கட்டு ரைட்வேங் அ.த.க.பா.), ரமேஸ் ராஜேந்தினி (கருவேலங்கண்டல் அ.த.க.பா.), சுகந்தி விஜிதன் (முதலியார் மணங்குளம் அ.த.க.பா.), அழகையா மயூரதன் (கூளாமுறிப்பு அ.த.க.பா.), லோகேந்திரன் பத்மலோஜினி (கூளாமுறிப்பு அ.த.க.பா.), தமிழ்ச்செல்வி பரஞ்சோதி (முத்தையன்கட்டு லெவ்ற் வேங் அ.த.க.பா.), கருணாகரன் கிருஷ்ணகுமாரி (முத்தையன்கட்டு லெவ்ற் வேங் அ.த.க.பா.), நாகராஜா ஜெயமதி (முத்தையன்கட்டு லெவ்ற் வேங் அ.த.க.பா.), சுப்பிரமணியம் மணிமேகலா (முத்தையன்கட்டு லெவ்ற் வேங் அ.த.க.பா.), சுப்பிரமணியம் தவப்புதல்வி (புலுமைச்சிந்தகுளம் அ.த.க.பா.), தனுசியா சிவபாதசுந்தரம் (ஒட்டுசுட்டான் இ.அ.த.க. வித்தி.), கனகராசா பிரபாகரன் (பனிக்கன்குளம் அ.த.க.பா.), பத்மவதனி கடம்பநாதன் (பெரியபுளியங்குளம் அ.த.க.பா.), அஜந்தா மகேஸ்வரன் (திருமுறிகண்டி இ.வித்தி.), சுஜித்தா தாமோதரம்பிள்ளை (திருமுறிகண்டி இ.வித்தி.), சூசைப்பிள்ளை ஜெனாட் ரவீந்திரன் (திருமுறிகண்டி இ.வித்தி.).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# சுதந்திரத்தின் பெயரோடு கடந்து சென்ற வரலாறு

இலங்கையின் 58ஆவது சுதந்திர தினம் இன்று. தென்னிலங்கை இத்தினத்தை பெரும் விடுதலைத் திருநாளாகக் கொண்டாடுகின்றது.

ஆனால், வடக்கு - கிழக்கில், தமிழர் தாயகத்தில், நமது மக்கள் தங்களின் அடிமைசாசனம் எழுதப்பட்ட நாளாக - தங்களின் உரிமைகள் பறிக்கப்பட்ட தினமாக - இதை அனுஷ்டிக்கின்றனர். தமிழர் தாயகம் தன்னை அடிமை விலங்கு ஆக்கிரமித்த நாளாக இதைக் கொள்ளவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றது. அதுதான் இந்தத் தீவின் கடந்த ஆறு தசாப்த கால சரித்திரமாகும்.

வெவ்வேறான பண்பாடுகளோடு, வாழ்வியல் நிலப்பரப்புகளோடு, தனித்தனி மொழி, வாழ்க்கை முறை, வழக்காறுகள் போன்ற அடையாளங்களோடு இந்தத் தீவில் இரண்டு தனித்தனி புராதன அரசுகளை அமைத்து வாழ்ந்தவர்கள் தமிழர்களும், சிங்களவர்களும்.

இற்றைக்கு சரியாக ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் - 1505ஆம் ஆண்டில் - இலங்கைத் தீவில் முதல் அந்நிய ஆட்சியாளர்களான போர்த்துக்கேயர் காலடி எடுத்து வைத்தபோது இத்தீவு தமிழர்களுக்கும், சிங்களவர்களுக்கும் எனத் தனித்தனியான ஆட்சியமைப்போடுதான் - நிர்வாகக் கட்டமைப்போடுதான் - காணப்பட்டது.

இத்தீவைக் கைப்பற்றிய போர்த்துக்கேயரும் சரி, அவர்களின் பின்னர் வந்த ஒல்லாந்தரும் சரி, தமிழர் தாயகப் பிரதேசத்தை தனி இராச்சியமாகவே ஆண்டனர். அதன் மூலம் தமிழர் தாயகத்தின் பிரதேச ஒருமைப்பாட்டையும், இன அடையாளத்தையும் அவர்கள் உறுதிப்படுத்தினர்; ஏற்று அங்கீகரித்தனர்.

ஆனால், ஒல்லாந்தருக்குப் பின்னர் இலங்கைத் தீவைக் கைப்பற்றிய ஆங்கிலேயரோ - பிரிட்டிஷாரோ - இந்தத் தனித்துவ அடையாளத்தைப் புறம் ஒதுக்கி, தமது நிர்வாக வசதிக்காக தமிழ் இராச்சியத்தையும், சிங்கள இராச்சியத்தையும் ஒன்றாக்கி ஒற்றையாட்சி என்ற முறையைத் திணித்தனர்.

அதன் மூலம் - பிரிட்டிஷார் இந்த நாட்டைவிட்டு வெளியேறும்போது பெரும்பான்மையினராகிய சிங்களவர்களின் கைகளில் அடக்கப்படும் இனமாக சிறுபான்மையினரான தமிழரின் தலைவிதி ஒப்படைக்கப்பட்டது.

கிறிஸ்துவுக்கு முந்திய காலம்வரை தொன்மையான வேரோடல்களைக் கொண்ட - தனித்துவமானவையாக விளங்கிய - இரண்டு இனங்களின் வாழியல் நிலைமை இவ்வாறுதான் மோசமாக்கப்பட்டு, பேரினவாதம் சிறிய இனத்தின் மீது மேலாண்மை செய்வதற்கு வழி செய்யப்பட்டது. அதற்கு வழி வகுத்த தினமே இன்று அனுஷ்டிக்கப்படுகின்றது.

1948 பெப்ரவரி 4இல் இலங்கைத்தீவின் அதிகாரத்தை தென்னிலங்கைத் தலைவர்களிடம் ஒப்படைத்து பிரிட்டிஷார் புறப்பட்டதன் - 'சுதந்திரக் கையளிப்பின் - விளைவு எவ்வாறு அமைந்தது என்பதை புலிகளின் மதியுரைஞர் அன்டன் பாலசிங்கம் தமது'போரும் சமாதானமும்' என்ற நூலில் கனகச்சிதமாக - சுருங்கக்கூறி விளங்கவைக்கிறார். அந்த வாசகங்கள் ஊடாக நாம் அந்த நிகழ்வுப் போக்கைத் தரிசிக்கலாம்.

*''சிங்களப் பெரும்பான்மையினரிடம் அரசியல் அதிகாரம் கைமாறியதை அடுத்து சிங்களப் பேரினவாதம் மேலாண்மை பெற்றது. இதனால் தமிழர்களுக்கு எதிரான அரச அடக்குமுறை குரூரமான வன்முறை வடிவம் எடுத்தது. இந்த அரச அடக்குமுறையானது அரை நூற்றாண்டு காலத்திற்கு மேலான நீண்ட வரலாற்றைக் கொண்டது. இலங்கை சுதந்திரமடைந்ததை அடுத்து, மாறிமாறி ஆட்சி பீடம் ஏறிய சகல சிங்கள அரசுகளும் இந்த ஒடுக்குமுறைக் கொள்கையையே கடைப்பிடித்தன. இந்த ஒடுக்குமுறைக் கொள்கையில் தமிழின ஒழிப்புத் திட்டமும் அடங்கியுள்ளது. அதாவது, தமிழரின் தேசியவாழ்விற்கு ஆதாரமான, அத்தியாவசிய அடித்தளங்களைப் படிப்படியாகத் தகர்த்துவிடும் நாசகாரத் திட்டமாகவும் இந்த ஒடுக்குமுறை அமையப்பெற்றது. ஒன்றுபட்ட ஒரு தேசிய இனக்கட்டமைப்பாக தமிழ் மக்கள் தழைத்து நிற்பதற்கு என்னென்ன அவசியமோ அவற்றையெல்லாம் பல்வேறு மட்டங்களில் தாக்கியழிப்பதை இவ்வொடுக்குமுறை இலக்காகக் கொண்டது. எனவே, இந்த இனவழிப்பு அடக்குமுறை பல்முனைத் தாக்குதலாக வடிவெடுத்தது. தமிழரின் இருப்புக்கே ஆதாரமான மொழி உரிமை முதலில் பறித்தெடுக்கப்பட்டது. அதனையடுத்து கல்வி உரிமைக்கும், வேலைவாய்ப்பு உரிமைக்கும் ஆப்பு வைக்கப்பட்டது. அவர்களுடைய பாரம்பரிய நிலங்கள் மீதான சொத்துரிமையையும் இழக்கச் செய்தது. அவர்களது சமய, பண்பாட்டு வாழ்விற்கும் ஊறு விளைத்தது. இறுதியாக தமிழர்களது உயிர்வாழும் உரிமைக்கே பங்கம் ஏற்படுத்தும் வகையில் ஒடுக்குமுறையை ஏவிவிட்டது. தமிழ் மக்கள் ஓர் இனமாக ஒருங்கிணைந்து வாழ்வதற்கு, ஓர் இனமாகத் தம்மை அடையாளப்படுத்துவதற்கும் அவசியமான அடித்தளத்தையே அரச ஒடுக்குமுறை தாக்கியது. இத்தமிழின ஒழிப்புத்திட்டத்தின் முக்கிய அங்கமாக சிங்கள அரசால் திட்டமிட்டு செயல்படுத்தப்பட்ட இனக்கலவரங்கள் காலத்திற்குக் காலம் தலைதூக்கின. இதன் விளைவாகப் பெருந்தொகையான் தமிழ் மக்கள் கொன்றொழிக்கப்பட்டார்கள். பெருந்தொகைத் தமிழ்ச் சொத்துகள் நிர்மூலமாக்கப்பட்டன. நாட்டுக்குச் சுதந்திரம் கிடைத்தவுடன் ஸ்ரீலங்கா நாடாளுமன்றம் பெரும்பான்மைக் கொடுங்கோன்மையின் கருவியாகியது. அங்கு இனவாதம் அரசோச்சியது. சிறுபான்மை இனங்களுக்கு எதிரான அடக்குமுறைச் சட்டங்கள் அங்கு யாக்கப்பட்டன. கொடிய சிங்கள இனவாதத் தாக்குதலில் மலையகத் தோட்டத் தொழிலாளர்களே முதல் பலியாகி வீழ்ந்தார்கள். இந்தத் தீவின் சுபீட்சத்துக்காக ஒரு நூற்றாண்டுக்கு மேலாகப் பாடுபட்ட பத்து லட்சம் தமிழ் மக்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டது. இலங்கை அரசின் வரலாற்றில் மிகவும் அநீதியாகக் கருதப்படும் குடியுரிமைச் சட்டம் அந்தக் கொடுமையைப் புரிந்தது. இதன் மூலம், மலையகத் தமிழ் மக்களது அடிப்படை மனித உரிமை பறிக்கப்பட்டது. நாடற்றோர் என்ற இழிநிலைக்கு இவர்கள் தரம் இறக்கப்பட்டார்கள். அரசியலில் பங்கெடுக்கும் உரிமை பறிக்கப்பட்ட நிலையில், பெருந்தொகைத் தமிழ்த் தொழிலாளர்களுக்கு அரச நாடாளுமன்றக்கதவுகள் மூடப்பட்டன......''*

- இப்படி விளக்குகிறார் மதியுரைஞர்.

இத்தகைய நிலையை ஏற்படுத்திய தினத்தை சுதந்திர தினமாகத் தமிழ் மக்கள் கொள்ளமுடியுமா? உலகம் பதில் சொல்ல வேண்டும்.

# 25 வருட பழைய பஸ்களே சேவையில் புதியன கேட்டால் தருவதற்குப் பின்னடிப்பு

## போக்குவரத்துச் சபையின் யாழ். சாலை வட்டாரம் விசனம்

யாழ்ப்பாணம்,பெப்.4

குடாநாட்டில் சேவையில் ஈடுபடுத்தப்படும் பஸ்கள் சுமார் 25 வருடங்களுக்கும் மேல் பழைமை வாய்ந்தவை. புதிய பஸ்களை வழங்குவதற்கு இலங்கைப் போக்குவரத்துச் சபை பின்னடிக்கிறது.

- இவ்வாறு இலங்கைப் போக்குவரத்துச் சபையின் யாழ். சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதுதொடர்பாக அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்ததாவது:-

குடாநாட்டில் மக்களின் தேவைக்கேற்ப பஸ்கள் இல்லை. யாழ். சாலைக்குச் சொந்தமான பஸ்களில் ஒன்பது பஸ்கள் படையினரின் தேவைகளுக்காக எடுத்துச்செல்லப்பட்டுள்ளன.

சுமார் 25 வருடங்கள் பழைமையான பஸ்களே இப்போது சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன.

போதிய எண்ணிக்கையில் பஸ்கள் இல்லாத காரணத்தினால் மக்களுக்கான சேவையினைத் திருப்திகரமாக மேற்கொள்ள முடியவில்லை. போக்குவரத்துச் சேவையில் ஈடுபடமுடியாது எனக் கைவிடப்பட்ட பஸ்களையும் பஸ் பற்றாக்குறை காரணமாக மறுசீரமைப்புச் செய்து சேவையில் ஈடுபடுத்த வேண்டியுள்ளது. இதனால், மக்களுக்கு மட்டுமன்றி போக்குவரத்துச சபை ஊழியர்களுக்கும் சிரமங்கள் ஏற்படுகின்றன.

பல தடவைகள் போக்குவரத்துச் சபையிடம் கோரிக்கை விடுத்தும் புதிய பஸ்களை வழங்க உரிய நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை - இவ்வாறு அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.(ஓ-7)

# சூழலுக்கு ஒவ்வாத கட்டுமரங்கள் தொண்டு நிறுவன உதவி நிராகரிப்பு

கரவெட்டி,பெப்.4

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிப்புற்ற கடற்றொழிலாளர்களுக்கு தொண்டு நிறுவனமொன்று வழங்கிய பிளாஸ்ரிக் கட்டுமரங்களை வடமராட்சி வடக்குக் கடற்றொழிலாளர்கள் நிராகரித்தனர் என்று கூறப்படுகிறது.

குறிப்பிட்ட நிறுவனத்தால் வலி. வடக்கிற்கு 100 பிளாஸ்ரிக் கட்டுமரங்களும் வடமராட்சி கிழக்கிற்கு 100 பிளாஸ்ரிக் கட்டுமரங்களும் வடமராட்சி வடக்கிற்கு 50 பிளாஸ்ரிக் கட்டுமரங்களும் வழங்கப்படத் தீர்மானிக்கப்பட்டிருந்தன.

ஆனால், அந்த பிளாஸ்ரிக் கட்டுமரங்கள் பாரம் குறைந்தவை என்றும் - அவை வடமராட்சிக் கடல் சூழலுக்கு ஏற்றவை அல்ல எனவுமம் காரணங்காட்டி, கடற்றொழிலாளர்கள் அவற்றை நிராகரித்துள்ளனர்.

இதன் காரணமாக வடமராட்சி வடக்கு, வடமராட்சி கிழக்கு, வலிகாமம் போன்ற கடற்றொழிலாளர் வசிக்கும் இடங்களில் மேற்படி கட்டுமரங்கள் வைக்கப்பட்டுள்ளன.

இதற்கு மாற்றீடாக வேறு கட்டுமரங்களை குறிப்பிட்ட தொண்டு நிறுவனம் வழங்குவதற்கான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்று கூறப்படுகின்றது. (ஓ-70)

# வறிய மாணவர் விவரம் சேகரிப்பு

யாழ். மாவட்டத்திலுள்ள சகல பிரதேச செயலகப் பிரிவுகளிலும் பாடசாலைகளுக்குச் செல்லும் வறிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களின் விவரங்கள் கிராம அலுவலர்களினால் திரட்டப்படுகின்றது.

வடக்கு - கிழக்கு மாகாண சமூக நலத்துறைத் திணைக்களத்தின் பணிப்பாளரின் பணிப்பிற்கிணங்க பிரதேச செயலக மட்டத்தில் விவரங்கள் திரட்டப்படுகின்றன. கிராம அலுவலர்கள் மூலம் வறிய மாணவர்களின் விவரங்கள் திரட்டப்படுகின்றன.

வறிய மாணவர்களின் கல்வித் தேவையினை பூர்த்திசெய்வதற்கே விவரங்கள் திரட்டப்படுகின்றன. இவற்றின் அடிப்படையில் பாடசாலை மாணவருக்கு கல்வி உபகரணம், மாதாந்த உதவிப் பணம், சைக்கிள் ஆகியன வழங்கப்படவுள்ளன.

பாடசாலைகளுக்கு மாணவர்கள் ஒழுங்காகச் சென்று கல்வி கற்பதை ஊக்குவிப்பதற்கே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ஓ-175)

# அறுவடை ஆரம்பம்

வலி.மேற்கு,பெப்.4

வலி.மேற்குப் பிரதேசத்திலுள்ள விவசாயிகள் நெல் அறுவடையைத் தற்போது ஆரம்பித்துள்ளனர்.

அராலி, சுழிபுரம், வட்டுக்கோட்டை, சங்கானை ஆகிய இடங்களில் நெல் அறுவடையினை விவசாயிகள் ஆரம்பித்துள்ளனர். நெற்கதிர் வரும் வேளையில் போதிய தண்ணீர் இல்லாமையினால் நெல் விளைச்சலில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர். இந்த ஆண்டுக்கான பெரும்போக நெற்செய்கையில் தாம் ஏமாற்றம் அடைந்துள்ளனர் என்று விவசாயிகள் மேலும் தெரிவித்தனர். (ஓ-175)

# சுழிபுரம் கடலில் வலைகள் திருட்டு

யாழ்ப்பாணம்,பெப்.4

சுழிபுரம் கடற்பரப்பில் கடற்றொழிலாளர்கள் விரிந்த வலைகள் திருடப்பட்டுள்ளன என்று யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சம்மேளனத்திடம் முறையிடப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு வழமை போன்று கடற்பரப்பில் வலைகளை விரித்து விட்டு மீனவர்கள் திரும்பியுள்ளனர். பின்னர் குறித்த இடத்திற்கு மீனவர்கள் சென்று பார்த்தபோது வலைகள் காணாமற்போயிருந்தன.

இது குறித்து மீனவர்கள் கடற்றொழிலாளர் சம்மேளனத்தில் முறையிட்டுள்ளனர்.

**உதயவாக்கு**

எந்த ஒரு விடயத்தையும் தீர ஆராயாமல் எவர் மீதும் குற்றம் சுமத்தாதே.
- *வேதாகமத்திலிருந்து.*

**நாளை**

தை 23
ஞாயிற்றுக்கிழமை
05.02.2006
திதி: அட்டமி
முழுவதும்
நட்சத்திரம் : பரணி
பின்னிரவு: 01.11 வரை
சுபநேரம் : 09.35-11.05
ராகுகாலம் : 05.05 - 06.35
(யாவும் பழைய நேரப்படி)

# தொண்டர் ஆசிரியர்கள் நியமனத்தில் பாதிக்கப்பட்டோர் முறையிடலாம்

தகுதியிருந்தும் தமக்கு நியமனம் கிடைக்கவில்லை என்று கருதும் தொண்டர் ஆசிரியர்கள் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்துடன் தொடர்பு கொள்ளும்படி சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவம் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

குடாநாட்டில் பணியாற்றிய தொண்டர் ஆசிரியர்களில் நியமனம் வழங்கப்பட்டவர்களின் பெயர், விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. இப்பட்டியலில் தகுதியிருந்தும் தமக்கு நியமனம் வழங்கப்படவில்லை என்று கருதும் தொண்டர் ஆசிரியர்கள் கடிதங்கள் மூலம் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்துடன் தொடர்புகொள்ளவும் என்று அவர் கேட்டுள்ளார்.

இதேவேளை, நேற்று வெளியிடப்பட்டுள்ள தொண்டர் ஆசிரியர் நியமனப் பட்டியலில் உள்ளவர்களுக்கு நியமனக் கடிதங்கள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் த.மகாசிவம் மேலும் தெரிவித்தார். (ஓ-13)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**உடன் தேவை**

ஒப்புபெற்ற ஆங்கில மருந்தாளர் (Pharmacist) உடன் தேவை.

தொடர்பு: தொ.பேசி.இல.077-3288795

(46341)(26.34.45)



The Director, Course Director and Staff of the IIS Cordially Invite Patrons, Friends and Well wishers to the 10th Year of the

Institute Day

Celebration

at the Jubilee Hall St.John's College, Jaffna on Sunday the 5th February 2006

Institute of Informatics Studies
# 100, Clock Tower Road, Jaffna.


## பிரதிப்பரீட்சை ஆணையாளர் யாழ். வந்தார்

அச்சுவேலி, பெப்.04

பிரதிப்பரீட்சை ஆணையாளர் ஆ.சிவலிங்கம் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்து ஜி.சீ.ஈ.சாதாரணப்பரீட்சை விடைத்தாள் மதிப்பிடும் பணிகளை பார்வையிட்டதுடன் மதிப்பீட்டாளர்களுக்கு ஆலோசனைகளையும் வழங்கினார்.

ஜி.சீ.ஈ.சாதாரண தர பரீட்சையின் விடைத்தாள்களை மதிப்பிடுதலின் 2 ஆம் கட்டப்பணிகள் 28 ஆம் திகதி சனிக்கிழமை முதல் யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் ஆரம்பமாகி நடைபெற்று வருவது தெரிந்ததே.

இந்த நிலையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பிரதிப் பரீட்சை ஆணையாளர் ஆ.சிவலிங்கம் விடைத்தாள்கள் மதிப்பீட்டுப் பணி நடைபெறும் நிலையத்திற்கு விஜயம் செய்து விடைத்தாள் மதிப்பீட்டு பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் குழுக்கள் ஒவ்வொன்றினதும் செயற்பாடுகளை அவதானித்ததுடன் ஆலோசனைகளையும் வழங்கினார். (எ-11)

## அராலி கிழக்குப் பாடசாலையில் குடிதண்ணீர் இன்றி மாணவர் அவதி

வலி.மேற்கு, பெப்.4

அராலி கிழக்கு அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் கல்வி கற்கும் சுமார் 300 மாணவர்கள் குடிதண்ணீர் இன்றி அவதிப் படுகின்றனர் என்று கூறப்படுகிறது.

வலி.மேற்குப் பிரதேச சபையின் குடிதண்ணீர் விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் குழாய் நீரை பாடசாலைக்கு அருகாமையிலுள்ள மக்கள் பாவனைக்கு எடுத்துச் செல்கின்றனர். இதனாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. பாடசாலையைச் சுற்றிப் பாதுகாப்பு வேலி அமைக்கப்படவில்லை. இதனால் பொது மக்கள் பாடசாலைக்குள் சென்று தண்ணீரை முழுமையாக எடுத்துச் செல்கின்றனர்.

இதேவேளை, இப் பாடசாலைக்கு தூர இடங்களில் இருந்தே அதிக எண்ணிக்கையிலான மாணவர்கள் கல்விகற்க வருகின்றனர். நீண்டதூரம் பயணித்து பாடசாலைக்கு வந்து சேரும் மாணவர்கள் தாகம் தீர்க்க குடிதண்ணீர் இன்றி கஷ்ரப்படுகின்றனர் என்று கூறப்படுகின்றது. மாணவர்களின் குடிதண்ணீர் பிரச்சினை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மாணவர்களின் பெற்றோர்கள் வேண்டுகோள் விடுத்து வருகின்றனர். (ஒ-175)

## பாவனையாளர் ஒழுங்கமைப்பு

வலி.மேற்கு, பெப்.4

வலி.மேற்குப் பிரதேச மட்டத்திலான பாவனையாளர் ஒழுங்கமைப்பு இம்மாத நடுப்பகுதியில் ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற்கான நடவடிக்கைகளை பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ் மேற்கொண்டுள்ளார்.

வலி.மேற்குப் பிரிவிலுள்ள 25 கிராம அலுவலர் பிரிவுகளிலுமிருந்து 50 பேர் தெரிவு செய்யப்பட்டு 15பேர் கொண்ட நிர்வாக அமைப்பு செயற்படவுள்ளது. (ஒ-175)


**திருமண வாழ்த்து**



இன்று (04-02-2006) சனிக்கிழமை பிரான்ஸில் திருமண பந்தத்தில் இணையும்

ரமேஸ் (டென்மார்க்) — சுகிஜா (பிரான்ஸ்)

தம்பதிகளை இறைவன் துணையுடன் சகல செளபாக்கியங்களும் பெற்று, பல்லாண்டுகாலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
தவராசா குடும்பம், குலவீரசிங்கம் குடும்பம், ஜெயவீரசிங்கம் குடும்பம்,
குணரத்தினசிங்கம் குடும்பம், இராசரத்தினம் குடும்பம் (அனுசியா), தங்கராணி குடும்பம்.

துன்னாலை மேற்கு வாய்க்கால், கரவெட்டி. (46342) (24.26.16)

தகவல்: கு.குணம் (மாமா).



**7ம் ஆண்டு நினைவஞ்சலி** — **1ம் ஆண்டு நினைவஞ்சலி**





கிறிஸ்ரியன் பேரின்பநாயகம் வைரமுத்து — திருமதி.கிறிஸ்ரின் சுகிர்தம் வைரமுத்து

மறைவு:15.02.1999 — மறைவு:04.02.2005

*பாசமுடன் எம்மை வளர்த்துக்*
*கல்வியெனும் அறிவூட்டி*
*பார்புகழ வைத்த தெய்வங்களே,*
*நேசமுடன் ஊர் உயர உறங்காது உழைத்தவர்களே,*
*வாசமுள்ள மலரது போல் மணம் பரப்பி*
*நின்ற வேளை - எம்மை வாடவைத்து*
*வானுலக்ம் சென்று ஏழு ஆண்டுகளும், ஓர் ஆண்டும் ஆனதுவே!*
*கலையாத நினைவுகளுடன்*
*உங்கள் ஆத்மா சாந்தியடைய*
*ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

**அன்பு மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் மற்றும் உறவினர்கள்**

**ஐக்கிய இராச்சியம் – அவுஸ்ரேலியா – இலங்கை**


## விவசாய சம்மேளன பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், பெப்.4

வட்டுக்கோட்டை, சங்கரத்தை விவசாய சம்மேளனத்தின் வருடாந்தப் பொதுச் சபைக் கூட்டம் எதிர் வரும் 25ஆம் திகதி வட்டு.மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள பிரேரணைகள் தற்போது ஏற்றுக் கொள்ளப்படுவதாக சம்மேளனத்தின் செயலாளர் அறிவித்துள்ளார். (எ-13)

## யாழ்-பலாலி வீதி புனரமைப்பு பணிகள்

அரியாலை, பெப்.4

யாழ்-பலாலி வீதி புனரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யாழ்.ஆரியகுளம் சந்திக்கு அண்மையில் இருந்து மேற்படி வீதியை தார் ஊற்றி புனரமைக்கும் பணிகள் கடந்த சில தினங்களாக இடம்பெற்று வருகின்றன. (எ-17)


**UNIT**
**Ultimate Offer**

Printer/Scanner/Table/USB Flash/
TV Tuner/Home Theater Woofer/UPS with Screen Filter,
Dust Cover, Mouse Pad & CD Cleaner
Are Totally Free

Offer Products

இன்னும் 2-தினங்களுக்கு மட்டுமே

IBM World Leading Branded Systems @ Offer Price

புதிய P4 கணனிகள் 3 வருட முழு உத்தரவாதத்துடன் கொழும்பை ஒத்த விலைக்கே

Attractive Woofers & Home Theatres 10% Discount



சகல கணனிசார் உதிரிகளும் சலுகை விலையில்

தாயக மின்சார நிலைமைகளுக்கேற்ப வடிவமைக்கப்பட்டவை

இது எங்கள் மொபைல் சர்விஸ் நிமுடன் இணைக்கப்பட்டது.

An Indian Qualified Engineer's Workshop

**Possible which Impossible**

347, K.K.S. Road, Manohara Theatre Junction, Jaffna.
T.P: 021- 4590720 / 0773134737



**31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்**

*தாய்மடியில்* 14 - 08 - 1926



*இறை அடியில்* 05 - 01 - 2006

**அமரர் சரவணமுத்து தயானந்தம்**

எமது குடும்ப ஒளி விளக்காய் எமது அன்பிற்கும் மதிப்பிற்கும் உரியவராய் திகழ்ந்த அமரர் சரவணமுத்து தயானந்தம் அவர்கள் கடந்த மாதம் 05-01-2006இல் இறைஅடிசேர்ந்ததை அறிந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், மரணச்சடங்கில் நேரடியாகக் கலந்து சகல உதவிகளையும் வழங்கியவர்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன், இன்று (04-02-2006) சனிக்கிழமை காலை எமது இல்லத்தில் 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் நடைபெறவுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

சிங்கம் ஒழுங்கை,
உடுவில். (46339)(26.34.45) குடும்பத்தினர்.



Restricted 15 Members only in a batch

50% Concession only for this batches

MCSE, CCNA, CCNP, CCIE மற்றும் A+ பரீட்சைகளுக்கான இலவச ஒழுங்கமைப்பு

**Hardware & Networking**
பயிற்சிகளுக்கு பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட செய்முறை பயிற்சிக்கூடம்.

100% உள்நாட்டிலோ / வெளிநாட்டிலோ வேலைவாய்ப்பு ஒழுங்குகள்

Valuable course materiel Free

100% Practical oriented field training centre

An Indian Engineers study centre

பயிற்சிகள் பற்றிய விபரங்களுக்கு தொடர்பு

Near Jaffna Hindu College,
Opp Lane to PandiKottu Pillayar Kovil,
K.K.S. Road, Opp Lane to Velankanni Church,
Kasthuriyar Road,
Jaffna.

**UNIT Education**
16/1, Killnar Lane,
Jaffna.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்ட விதிமுறைகளைப் புறந்தள்ளி

# கொழும்பு பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவுக்கு வடக்கில் கைதான இளைஞர்கள் அனுப்பிவைப்பு

## இராணுவம் மீது மனித உரிமைகள் ஆணைக்குழு சீற்றம்

கொழும்பு,பெப்.4

யாழ்ப்பாணத்தில் கைதுசெய்யப்படும் தமிழ் இளைஞர்களை, இலங்கை இராணுவத்தினர், எவ்வித சட்ட விதிமுறைகளையும், நீதி நடைமுறைகளையும் அனுசரிக்காமல் விசாரணைக்காக கொழும்பிலுள்ள பயங்கரவாத புலனாய்வுப் பிரிவுக்கு அனுப்புவது அவர்களின் மனித அடிப்படை உரிமைகளை அப்பட்டமாக மீறும் செயலாகும் என்று யாழ்ப்பாணத்திலுள்ள மனித உரிமைகள் ஆணையகம் குற்றஞ்சாட்டியுள்ளது.

இலங்கை இராணுவத்தினரால் கைதான ஐந்து தமிழ் இளைஞர்கள் கடந்த 45 நாள்களாக காணாமற்போனோர் வரிசையில் இடம்பெற்றிருந்தார்கள். ஆனால், இவர்கள் புலன் விசாரணைக்காக கொழும்பிலுள்ள பயங்கரவாத புலனாய்வுப் பிரிவுக்கு இப்பொழுது அனுப்பிவைக்கப்பட்டிருக்கிறார்கள் என யாழ்ப்பாண பொலீஸ் மூலம் தெரிய வந்திருக்கிறது.

கைதடி, நுணாவிலைச் சேர்ந்த முருகதாஸ் தீபரூபன் (வயது-18), இரத்தினம் ஆனந்தராஜா (வயது-33) ஆகிய இருவரும் டிசெம்பர் மாத நடுப் பகுதியில் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டிருந்தனர். ஆனால், கடந்த புதன்கிழமை தான் இவர்கள் விசாரணைக்காக கொழும்புக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று தகவல் தரப்பட்டிருக்கிறது.

இவர்கள் கைதானது தொடர்பாகவோ, தடுத்துவைக்கப்பட்டிருப்பது பற்றியோ, விசாரணைக்காக கொழும்புக்கு அனுப்பப்பட்டமை பற்றியோ வழமையான நீதி பரிபாலன நடைமுறைப் பிரகாரம் எதுவும், யாருக்கும் தெரிவிக்கப்படவில்லை. இச்செயல் அவர்களின் அடிப்படை மனித உரிமைகளை மீறும் பாரிய குற்றமாகும் என்றும் மனித உரிமைகள் ஆணையகம் மேலும் தெரிவித்திருக்கிறது.

பலாலி ஆசிரிய கலாசாலை மாணவன் பி. கமலக்கண்ணன் உட்பட மேலும் இருவர் விசாரணைக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றனர் என்றும் தெரிய வந்துள்ளது. (க)

# விமானப்படை அதிகாரி ஒருவரின் இரகசிய உக்ரைன் பயணம்

## விசாரணைக்கு அரசு உத்தரவாம்

கொழும்பு,பெப்.4

அரசின் பாதுகாப்புச் செயலாளருக்குத் தெரிவிக்காமல் விமானப் படையின் உயர் அதிகாரி ஒருவர் இரகசியமாக உக்ரைன் நாட்டிற்கு பயணம் மேற்கொண்டார் எனக் கூறப்படுவது குறித்து அரசு விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கனடாவுக்குச் செல்கிறார் எனக் கூறிய இந்த உயர்அதிகாரி எதற்காக உக்ரைன் சென்றார் என்பது குறித்து விமானப் படையினருக்கும் கேள்வி எழுந்துள்ளது.

இவரின் பயணம் குறித்து உக்ரைனில் விவரங்கள் திரட்டப்பட்டு வருகின்றன என அரசுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சர்ச்சைக்குரிய விமானப்படை அதிகாரி குறித்து இதற்கு முன்னரும் முன்னைய அரசின் காலத்தில் பல்வேறு தகவல்கள் கிடைத்துள்ளன எனவும் அந்தத் தகவல்களும் விரைவில் வெளியாகும் எனவும் விமானப்படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (க)

# எஸ்.பியைச் சிறையில் வைத்திருப்பதன் மூலம் அரசியல் கைதை அங்கீகரிக்கிறார் மஹிந்த

## அதனைக் கண்டிக்கிறார் ஐ.தே.க. தலைவர் ரணில்

கொழும்பு,பெப்.4

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவரது பெயரைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டும் என்றால் - அவரது மதிப்பை உயர்த்திக்கொள்ள வேண்டும் என்றால் - எஸ்.பி திஸநாயக்கவை சிறையில் அடைத்ததன் மூலம் உலக நாடுகள் மத்தியில் இலங்கைக்கு ஏற்பட்டிருக்கும் அபகீர்த்தியை இல்லாதொழிக்க வேண்டும் என்றால் - சிறைவாசம் அனுபவிக்கும் எஸ்.பி.திஸநாயக்கவை உடனடியாக விடுவிக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஒரு கொலையாளிக்கு - கொள்ளைக்காரனுக்கு வழங்கப்படும் தண்டனை நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்துக்காக எஸ்.பிக்கு வழங்கப்பட்டுள்ளது. அவர் அனுபவித்த தண்டனைபோதும். இப்போதாவது அவரை விடுதலை செய்யுங்கள். அவரை விடுதலை செய்யும்வரை எமது சத்தியாக்கிரகப் போராட்டம் தொடரும்.

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூறினார்.

சிறைவாசம் அனுபவிக்கும் ஐ.தே.கவின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸநாயக்கவை விடுதலை செய்யுமாறு கோரி ஐ.தே.க நேற்றுமுன்தினம் கொழும்பு விகாரமஹாதேவி பூங்காவின் முன்பாகப் போராட்டம் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது.

இச்சத்தியாக்கிரகப் போராட்டத்தை நடத்துவதற்கு சில மணி நேரங்களுக்குமுன் கொழும்பு நகர சபை வளாகத்தில் கூட்டம் ஒன்று இடம்பெற்றது. அந்தக் கூட்டத்தில் உரையாற்றும்போது, ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு கூறினார். அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

எஸ்.பி.திஸநாயக்க செய்த குற்றம் நீதிமன்றத்தை அவமதித்தது. அந்தக் குற்றத்திற்கு அவர் அனுபவித்துவரும் தண்டனை அதிகம்.

உலக நாடுகளில் நீதிமன்ற அவமதிப்புக் குற்றங்களுக்கு குறிப்பிட்ட தண்டனைகள் உள்ளன. அவை எஸ்.பிக்கு வழங்கியுள்ள தண்டனைகள் போல் பாரதூரமானவை அல்ல. ஆனால், இலங்கையில் நீதிமன்ற அவமதிப்புக் குற்றங்களுக்கு என்ன தண்டனை என்று சட்டத்திலில்லை. இந்த நிலையில் எஸ்.பிக்கு வழங்கப்பட்டிருக்கும் தண்டனை மிகவும் அதிகம். உடனடியாக அவர் விடுதலை செய்யப்படவேண்டும்.

- இவ்வாறு அவர் கூறினார். (எ-க)

# பெரும் போகத்துக்கான உரத்தை பெற்று விநியோகிக்க ஏற்பாடு

## கமநல உதவி ஆணையாளர் தகவல்

யாழ்ப்பாணம்,பெப்.4

இந்த ஆண்டுக்கான பெரும் போகச் செய்கைக்கான உரத்தை விநியோகம் செய்வதற்கு உரிய ஏற்பாடுகள் இடம்பெற்று வருவதாக யாழ்.மாவட்ட கமநலசேவை உதவிப்பணிப்பாளர் கே.சுந்தரேசன் தெரிவித்தார்.

8ஆயிரம் ஹெக்ரேயர் நிலப் பரப்புக்குத் தேவையான அளவு உரத்தை யாழ்.மாவட்டத்துக்கு எடுத்துவருவதற்கு ஏற்பாடுகள் இடம்பெற்றுவருகின்றன.

உரத்தைப் பெற்றுக்கொள்ள விரும்பும் விவசாயிகள் தமது விவசாய சம்மேளனங்களூடாக தம்முடன் தொடர்புகொள்ளமுடியும் என்றும் - அவர் கூறினார்.

இதுவரை விவசாய சம்மேளனங்களில் அங்கத்தவர்களாக இணைந்துகொள்ளாதவர்கள் தம்மை அங்கத்தவர்களாக இணைத்துக்கொள்ளவேண்டும் என்றும் - கூறப்பட்டது. (எ-12-14)

# அச்சுவேலியில் ஒன்றரைக்கோடி ரூபா செலவில் இராஜமாணிக்கம் கல்யாண மண்டபம்

அச்சுவேலி,பெப்.4

அச்சுவேலியில் நவீன வசதிகளைக் கொண்டதாக புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கல்யாண மண்டபம் எதிர்வரும் 11ஆம் திகதி சனிக்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளது.

அச்சுவேலி வீடியோ கலாமினியின் உரிமையாளர் எம். சிவமூர்த்தி தமது தாய், தந்தையரின் நினைவாக இந்தக் கல்யாண மண்டபத்தை நிர்மாணித்ததுடன், அதற்கு ''இராஜ மாணிக்கம் கல்யாண மண்டபம்'' என்றும் பெயர் சூட்டியுள்ளார்.

101 அடி நீளமும், 51 அடி அகலமும் கொண்ட இந்த மண்டபம் குளிரூட்டப்பட்ட மண்டபமாக சுமார் ஒன்றரைக் கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

அச்சுவேலியில் பொது நிகழ்களை நடத்துவதற்கு மண்டபம் இல்லாமல் இருந்து வந்த குறையை இராஜமாணிக்கம் கல்யாண மண்டபம் நிறுவப்பட்டமை மூலம் நிறைவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (எ-11)

# புனர்வாழ்வுக் கழக ஊழியர்கள் கடத்தல்: ஐ.நா. சபை கடும் கண்டனம் தெரிவிப்பு

கொழும்பு,பெப்.4

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பணியாளர்கள் இனந்தெரியாதவர்களால் கடத்தப்பட்டமைக்கு ஐக்கிய நாடுகள் சபை கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

சபையின் இலங்கை மனிதாபிமான இணைப்பாளர் அலுவலகத்தினால் வெளியிடப்பட்டுள்ள கண்டன அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் மனிதநேயப் பணியாளர்கள் தமது நேரம், சக்தி, திறமை, வாழ்வு என்பவற்றை நிவாரணப் பணிகளுக்காக அர்ப்பணித்துள்ளார்கள். அவர்கள் மதிப்பளிக்கவும் பாதுகாக்கப்படவும் வேண்டியவர்கள்.

தமிழர் புனர்வாழ்வுக்கழகம், விடுதலைப் புலிகளின் உத்தியோகபூர்வமற்ற அமைப்பாக உள்ளதால் இப்பணியாளர்களின் கடத்தலுடன் புலிகளுக்கு எதிரான தமிழ், சிங்களக் குழுக்கள் தொடர்புபட்டிருக்க வாய்ப்புள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக்கழகம் ஓர் அரசசார்பற்ற நிறுவனமாக இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அத்துடன், தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஐக்கிய நாடுகள் சபை உட்பட சர்வதேச மனிதாபிமான நிறுவனங்களால் அங்கீகரிக்கப்பட்ட அமைப்பாகும் - என்று அதில் உள்ளது.

கடத்தப்பட்டுள்ள நிவாரணப் பணியாளர்களின் விடுதலைக்கு உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை அரசை ஐக்கிய நாடுகள் சபை வலியுறுத்தியுள்ளது - என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-202)

# வசதி குறைந்த பாஷையூர் மக்களுக்கு தையல் இயந்திரம்,சைக்கிள்கள்

## சுதந்திரதினத்தை முன்னிட்டு படையினர் அன்பளிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.4

யாழ்.பாஷையூர் பகுதியைச் சேர்ந்த 7 குடும்ப அங்கத்தவர்களுக்கு அப்பகுதியில் நிலைகொண்டுள்ள படையினர் தையல் இயந்திரங்கள்,சைக்கிள்கள் என்பவற்றை அன்பளிப்பாக வழங்கினர்.

இதனை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வு ஒன்று நேற்று முற்பகல் 9 மணியளவில் பாஷையூர் உயர் பாதுகாப்பு வலயப் பகுதியில் உள்ள திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

பாஷையூர் படைமுகாம் இராணுவப் பொறுப்பதிகாரி கேணல் தந்திரிவத்தவின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் 512 ஆவது படைப்பிரிவைச் சேர்ந்த கேணல் கொடிப்பிலி மற்றும் பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய பங்குத்தந்தை அருட்திரு. ஸ்ரெலின், பாஷையூர் கிராம சேவகர், பாஷையூர் கடற்றொழிலாளர் சங்க உறுப்பினர் ஆகியோர் கலந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு அன்பளிப்புப் பொருள்களை வழங்கினர்.

இலங்கையின் சுதந்திர தினத்தை முன்னிட்டும் மக்களுக்கும் படையினருக்கும் இடையில் நல்லுறவை வளர்க்கவுமே இந் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டதாக நிகழ்வில் உரை நிகழ்த்திய படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் வைத்து கணவரை இழந்த மூன்று பெண்களுக்கு தையல் இந்திரங்களும் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் நான்கு குடும்பங்களுக்கு சைக்கிள்களும், பாலர் பாடசாலை சிறார்களுக்கு கல்வி உபகரணங்களும் விளையாட்டுப் பொருள்களும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் அப்பகுதி படை அதிகாரிகள், படையினர் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (எ-12-190)

உள்ளூராட்சித் தேர்தல் கடமைக்கு முன்னோடியாக

# குடாநாட்டுத் திணைக்களங்களில் புதிதாக கடமையேற்றோரின் விவரங்கள் சேகரிப்பு

ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் யாழ். மாவட்டத்திலுள்ள அரச திணைக்களங்கள் மற்றும் பாடசாலைகளுக்கு இடமாற்றம் பெற்று வந்துள்ள, இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள ஊழியர்களின் பெயர், பதவி மற்றும் சம்பள விவரங்களைப் பூரணப்படுத்தி தமக்கு அனுப்பிவைக்குமாறு யாழ். தெரிவத்தாட்சி அலுவலரும் யாழ். மாவட்ட அரச அதிபருமான க.கணேஸ் திணைக்களத் தலைவர்களிடம் கோரியுள்ளார்.

யாழ். மாவட்டத்தில் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் தேர்தல் கடமைபுரிய நியமனம் செய்யப்படவுள்ள அரச ஊழியர்களின் பெயர், விவரங்கள் ஏற்கனவே திணைக்களத் தலைவர்களால் ஜனாதிபதித் தேர்தலின் போது திரட்டப்பட்டுள்ளது என்றும் -

புதிதாகக் கடமையேற்றுள்ளவர்கள் மற்றும் இடமாற்றத்தில் வேறு திணைக்களங்களுக்குச் சென்றுள்ளவர்களின் விவரங்களே தமக்குத் தேவைப்படுவதாகவும் -

இவ்வாறு பட்டியல் அனுப்பும்போது சிற்றூழியர்களின் விவரங்கள் அவசியமல்ல என்றும் - இதுவிடயமாக அரச அதிபரால் அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-51)



பாஷையூரில் நேற்று படையினர் அன்பளிப்புப் பொருள்களை வழங்கிய நிகழ்வில் எடுக்கப்பட்ட படங்கள் இவை. விழா மேடையில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் 512 ஆவது படைப்பிரிவைச் சேர்ந்த கேணல் கொடிப்பிலி உரைநிகழ்த்துவதையும் தையல் இயந்திரம், சைக்கிள் என்பன வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:பரதன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதன்முறையாக தமிழ்மொழி விளக்கத்துடன் ஒருவாரகால முழுநேர

# Computer Hardware Engineering Course

உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களைப்பெற, சுயதொழில் ஆரம்பிப்பதற்கு மற்றும் தரம்வாய்ந்த சான்றிதழைப் பெற

உங்கள் கணனிகளை நீங்களே அமைத்துக்கொள்வதற்கான 100% பயிற்சி நெறி

◇Assembling ◇Upgrading ◇Troubleshooting ◇Fault Finding ◇Repairing ◇Servicing ◇Software Installation ◇Configuring ◇Introduction to Networking

**Course Contents**

- கணனி தொடர்பான அறிமுகம்
- Operating System - Windows XP & DOS
- Internet & e-mail
- கம்யூட்டரின் பாகங்களும் அவற்றின் விளக்கங்களும்
- Mother Board, Processor, Ram தொடர்பான விரிவான விளக்கம்
- கம்யூட்டரை அசெம்பிள் செய்தல்
- அசெம்பிளிங் முடிந்தவுடன் என்ன செய்வது என்பது தொடர்பான விளக்கம் (BIOS Setup)
- Hard Disk ஐ முறைப்படுத்தல்
- Software, Operating System இன்ஸ்ரோல் செய்தல்
- கம்யூட்டரில் ஏற்படும் பழுதுகளை சரிபார்த்தல்.

Course Fee :- 2000/=
Free Study Pack & Drivers CD
வகுப்புக்கள் ஆரம்பம்:-
06/02/2006 :- 08.30-4.00

**Hard ware பயிற்சி**

- ❖ கணனிப் பாகங்களை இனம்காணும் முறை
- ❖ Assembling
- ❖ BIOS Configurations (முறைப்படுத்தல்)
- ❖ Hard Disk முறைப்படுத்தல் (Partition & Formatting)
- ❖ Network தொடர்பான அறிமுகம்
- ❖ Troubule Shooting / Maintenance.

**Software பயிற்சி**

- ❖ Operating System நிறுவும் முறை (Windows 98 / Windows XP)
- ❖ Software Install செய்யும் முறை
- ❖ Driver Installation செய்யும் முறை (Sound Card,Modam,VGA,TV Card,Printer)
- ❖ Troubule Shooting (File updating, Copying)

நன்மைகள்

- ❖ பாடநெறியின் இறுதியில் கம்யூட்டர் காட்வெயார் சம்பந்தமான பூரண அறிவைப் பெற்றுக்கொள்வதற்கான உத்தரவாதம்.
- ❖ PI முதல் P4 வரையிலான கம்யூட்டர்களில் பூரண செய்முறைப் பயிற்சி.
- ❖ எமது ஆய்வுகூடத்தில் கம்யூட்டரின் உட்தொழில்நுட்பம் பற்றி பூரண அறிமுகம் செய்வதால் கம்யூட்டர் பற்றிய முன்னறிவு அவசியமில்லை.

கொழும்பிலிருந்து வருகைதரும் விரிவுரையாளரால் வகுப்புக்கள் நடாத்தப்படும்

**COMPUTER EXPRESS**
Institute of Information Technology
No 15, Sirampiyadi lane, Jaffna.
Telephone :- 021-2228250, 0777-222422

05ம் திகதி ஏனைய அனைத்து கணனிக்கற்கைநெறிகளிற்கான புதிய பிரிவுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.



## தரிகை அறிவித்தல்

தடைப்பட்டிருந்த வகுப்புகள் யாவும் மீள ஆரம்பமாகியுள்ளன. வழமையான நேரப்படி வகுப்புகள் நடைபெறும்.

**அழகுக்கலை, மனையியல் புதிய பிரிவுகள்**

குறுகியகால
புதிய பயிற்சிப் பிரிவுகள் ஆரம்பமாகின்றன.
(தையல், ஐசிங், Hair Style, பெயின்ரிங் உட்பட 10 பயிற்சிகள்)
எமது அலுவலகங்களில் நேரடியாக விண்ணப்பிக்கலாம்.

செங்குந்தா வீதி, கல்வியங்காடு. ம.ம.வி.வீதி, நெல்லியடி.

(46272)(42-32-16-19)



## நாவலர் வெளியீடு

**தரம் 5** புலமைப்பரிசில் வகுப்பும் பயிற்சிப் பரீட்சையும்

பிரபல ஆசிரியர் - **ரொனி ராஜன்**

- ★ பரீட்சை ஞாயிறு தோறும் காலை 8.30, 10.30, பி.ப. 2, 4 மணி ஆகிய நான்கு நேரங்களில் நடைபெறும்.
- ★ பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் மாணவர்களும் வினாத்தாள் தேவைப்படும் நிறுவனங்களும் தொடர்புகொள்ளவும்.
- ★ பரீட்சைக்குப் பின் வினாத்தாள்கள் விடைகளுடன் பிரபல புத்தகசாலைகளில் பெற்றுக் கொள்ளலாம்.

**நாவலர் இன்ஸ்ரிரியூட்**
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
Phone No.: 8068, 0777 243527.


## ஊடகவியலாளர் தாக்கப்பட்டார்

தேசிய பாடசாலைகளில் முதலாம் தர வகுப்புக்குத் தமது பிள்ளைகளைச் சேர்க்க அனுமதி மறுக்கப்பட்டமையைக் கண்டித்து, கடந்த புதனன்று பத்தரமுல்ல இசுறுபாயவில் அமைந்துள்ள கல்வியமைச்சுக் கட்டத்துக்கு முன்பாக பெற்றோர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டத்தின்போது செய்தி சேகரிக்கச் சென்ற எம்.ரி.வி. செய்தியாளர் ஒருவர் அங்கிருந்த பாதுகாவலர்களால் தாக்கப்பட்டிருக்கின்றார். அவரது வீடியோ கமராவையும் அடித்து உடைத்துள்ளனர்.

எம்.ரி.வி. நிறுவனத்தின் கொழும்பு பிராந்திய செய்தியாளரான இமான் கந்து ஆராய்ச்சி என்பவரே தாக்கப்பட்டவராவார்.

இச்சம்பவம் தொடர்பாக தங்களுக்கு முறைப்பாடு கிடைத்திருப்பதாக தலங்கம பொலீஸார் தெரிவித்திருக்கின்றனர்.

இது தொடர்பான முறையான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு ஊடகவியலாளர் அமைப்புகள் வேண்டுகோள் விடுத்துள்ளன. (க)

## ஒத்திவைப்பு

யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் எதிர்வரும் 11ஆம் திகதி நடைபெறவிருந்த பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டமும், சேவைநலன் பாராட்டு விழாவும் தவிர்க்கமுடியாத காரணத்தால் எதிர்வரும் 18ஆம் திகதி சனிக்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளன என்று பாடசாலையின் பழைய மாணவர் சங்கத் தலைவர் அறிவித்துள்ளார். (எ-202)


# IMMEDIATE VACANCY

solidar
An INGO consortium including NPA, SAH and ASB

Solidar is a consortium of organizations of 12 European countries that supports a broad portfolio of projects. The Solidar network in Srilanka comprises of three international NGOs - Arbeiter Samariter Bund (ASB), Norwegian People's Aid (NPA) and swiss Labour Assistance (SAH).

Under the Village Rehabilitation and Development Physical Infrastructure Program, Solidar will be implementing the construction of more than 1000 permanent houses for Tsunami Affected families in Vadamarachchi East.

## Architect / Architectural Draftsperson

Solidar under the planning and developing programme have several interesting building projects. Our motto is to create awareness about Architecture and Built environment through the projects. Emphasis is given to architectural forms, and function. We are looking for experienced and qualified personnel as all the projects are done by the in - house architectural team.

If you are hard working, flexible, creative, interested in design, art and architecture, then you are encouraged to apply.

You should be able to communicate in English language and should be computer literate.

Successful candidates will be a part of a challenging professional architectural team.

***Qualifications:***

**Architect**
- A degree in architecture with a minimum of 1-3 years experience.
- CAD experience in AutoCad and or ArchiCad.

**Draftsperson**
- A Diploma in Draftsmanship with minimum 2 years of experience as a draftsperson
- Or a NDT or NCT with minimum 2 years of drafting experience
- Or a background in architectural drafting with minimum 3 years experience.
- CAD experience in AutoCad and or ArchiCad.

Interested candidates must send their applications to reach us on or before 10 February 2006 by post or E-mail.

**Solidar is an equal opportunity employer**

Solodar, No.156 Jaffna Road, Paranthan
e-mail: asbadmin@sltnet.lk

Norwegian People's Aid   ASB Arbeiter-Samariter-Bund Deutschland e.V.   Swiss Labour Assistance SAH



## தச்சுவேலை பயிற்சியாளர் தேவை

காங்கேசன்துறை வீதியில் மக்லோயிட் வைத்தியசாலை வளவினுள் இயங்கி வரும் நம்பிக்கை இல்லம் ஆண்பிள்ளைகளுக்கு தச்சுவேலை பயிற்றுவிக்கும் ஆசிரியர் தேவை. வேதனம் - நேர்முகப் பரீட்சையின்போது தீர்மானிக்கப்படும்.

தமது கைப்பட தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் பத்திரத்தை பெப்ரவரி 18ஆம் திகதிக்கு முன் பின்வரும் விலாசத்துக்கு அனுப்பவும்.

**திரு.T.வோட்சன்,**
நம்பிக்கை இல்லம்,
மக்லோயிட் வைத்தியசாலை,
இணுவில்.

(46300)(32-16-19)



புதிய பிரிவுகள் ஆரம்பம்

## CIMA

**Foundation & Managerial Level**
ஆரம்பம் - 04-02-2006 11.30 a.m.

## aat (SriLanka)

**Medium - Tamil & English**
ஆரம்பம் - 04-02-2006 Foundation 8.30 a.m.
Intermediate & Final 10.30 a.m.

Further Details
**Director**
**Jaffna College Undergraduate Dept**
464, Hospital Road,
Jaffna.

(சி/47641)(32.17.19)


## ஈரவிழிகளுடன் ஓராண்டு நினைவில்

தோற்றம் 10 - 04 - 1951



மறைவு 01 - 02 - 2005

**அமரர் கனகரட்ணம் சபாரட்ணம்**
(யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி விஞ்ஞானப்பிரிவு சிரேஷ்ட ஆசிரியரும் பகுதித்தலைவரும்)
திதி: 04.02.2006

அப்பா! ஓராண்டென்ன ஓராயிரம் ஆண்டுகள் ஓடி மறைந்தாலும்
ஈரவிழிகளும் இதயத்து வேதனையும் மாறிடுமா?
அன்பாய் ஆதரவாய் அரவணைத்து
இன்பமாய் நாம் வாழ எமைக்காத்து என்றுமே உழைத்தீர்கள்!
அப்பா! உங்கள் நினைவுகளுடன் கனத்த இதயத்துடன்
காலத்தைக் கடத்துகிறோம்.
ஆத்மசாந்திக்காய் ஆண்டவனை இறைஞ்சுகின்றோம்.

...டுவில் வடக்கு, சாவகச்சேரி.

உங்கள் பிரிவால் துயருறும்:
-குடும்பத்தினர்.

(46323)(32-16-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாவட்ட உதவி ஆணையாளர் அலுவலகம் ஒட்டுசுட்டானில்

ஒட்டுசுட்டான்,பெப்.4

மாவட்ட உதவி ஆணையாளர் அலுவலகம் ஒட்டுசுட்டானில் அமைக்கப்படுகிறது.

அலுவலகத்திற்கான கட்டடப் பணிகள் பூர்த்தியடையும் நிலையில் உள்ளன. அலுவலகத் திறப்புவிழா இம்மாதத்திற்குள் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(த-341)

# படைகளின் கெடுபிடியைக் கண்டித்து முழங்காவிலில் தீப்பந்தப் பேரணி!

வெள்ளாங்குளம்,பெப்.4

வடக்கு - கிழக்கு மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளமையைக் கண்டித்தும் அரச படைகளாலும் ஒட்டுக் குழுக்களாலும் மேற்கொள்ளப்படும் படுகொலைகளை நிறுத்துமாறும் சமாதானப் பேச்சுகளை விரைவில் ஆரம்பிக்குமாறும்கோரி கடந்த 30 ஆம் திகதி முழங்காவிலில் தீப்பந்த ஊர்வலம் நடத்தப்பட்டது.

முழங்காவில் துயிலும் இல்லத்தில் இருந்து ஆரம்பமான இந்த ஊர்வலம் மாவீரர் கலையரங்கைச் சென்றடைந்தது.

அங்கு அரங்க நிகழ்வுகள் இடம்பெற்றன.

நிகழ்வில் பொதுச்சுடரினை முழங்காவில் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர், மாதர் சங்கத் தலைவி, முழங்காவில் கிராம அலுவலர், கரியாலை - நாகபடுவான் கிராம அலுவலர், முழங்காவில் பிரதேச ஊரக வளர்ச்சித் தலைவர் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து ஆசிரியர் சசிகரன், நாச்சிக்குடா கிராம அலுவலர் ஆகியோரது சிறப்புரைகள் இடம்பெற்றன.

இந்தத் தீப்பந்த ஊர்வலத்தில் முழங்காவில் - நாச்சிக்குடா வர்த்தகர்கள், கமக்காரர் அமைப்பினர், மாதர் சங்கத்தினர், ஊரக வளர்ச்சிப் பேரவையினர், கிராம அபிவிருத்திச் சங்கத்தினர், சமூக பொருளாதார அபிவிருத்திக் குழுப் பிரதிநிதிகள் உட்படப் பல அமைப்புகளைச் சேர்ந்த பெருந்திரளானோர் கலந்துகொண்டனர்.

ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்கள் தீப்பந்தங்களுடன் சுலோக அட்டைகளைத் தாங்கிச் சென்றதுடன் உணர்வெழுச்சியுடன் பல்வேறு கோஷங்களையும் எழுப்பினர்.

(த-415-203)

*தீப்பந்த ஊர்வலத்தின் போது எடுக்கப்பட்ட படங்கள். (படங்கள்: வெள்ளாங்குளம் செய்தியாளர்)*





## மாணவர்களிடம் சேமிப்புப் பழக்கத்தை ஏற்படுத்த கிராமிய வங்கி நடவடிக்கை

பரந்தன்,பெப்.4

மாணவர்களிடையே சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் முகமாக கிராமிய அபிவிருத்தி வங்கியினர் பாடசாலை தோறும் கிளைகளை அமைத்து தமது செயற்பாடுகளை விரிவாக்கம் செய்து வருகின்றனர்.

கிளிநொச்சி வன்னிச் செய்திகள் முல்

இதனடிப்படையில் அண்மையில் கண்டாவளை மகாவித்தியாலயத்தில் விரிவாக்கல் கிளை ஒன்று திறந்து வைக்கப்பட்டது.

இந்தக் கிளையின் பெயர்ப்பலகையைக் கண்டாவளைப் பிரதேச இணைப்பாளர் காசிநாதன் திரைநீக்கம் செய்துவைத்தார்.

விரிவாக்கல் கிளைக் கட்டடத்தை கண்டாவளை மகாவித்தியாலய முதல்வர் சி.சிறிதரன் நாடாவெட்டித் திறந்துவைத்தார்.

இதனையடுத்து வங்கிச் செயற்பாடுகள் ஆரம்பமாகின. தொடர்ந்து கருத்துரைகளைக் கிராமிய அபிவிருத்தி வங்கிப் பொறுப்பாளர் தவக்குமார், தமிழீழ வைப்பகப் பொது மேலாளர் பாலகிருஷ்ணன் உட்படப் பலர் நிகழ்த்தினர். தொடர்ந்து பாடசாலை மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

(த-352-203)

## 'நிகொட்' நிறுவன நிதியுதவியுடன் வவுனியாவில் கலாசார மண்டபம்

பரந்தன்,பெப்.4

வவுனியாவில் சகல வசதிகளும் கொண்ட கலாசார மண்டபம் ஒன்று அமைக்கப்படவுள்ளது. இதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

'நிகொட்' நிறுவனத்தின் நிதி உதவியுடன் 39 மில்லியன் ரூபா செலவில் இந்த மண்டபம் அமைக்கப்படவுள்ளது.

இந்த மண்டபம் அமைக்கும் பணி அடுத்த வருடம் நிறைவுறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா குடியிருப்பு கல்யாண மண்டபத்தில் இராணுவத்தினர் தொட[illegible] நிலை கொண்டிருப்பதால் பொதுநிகழ்வுக[illegible]ரிய முறையில் நடத்த முடியாதநிலை ஏற்[illegible]ருந்ததாகவும் -

புதிதாக இந்த மண்டபம் அமைக்கப்பட்ட பின்னர் பொது நிகழ்வுகளை நடத்துவதில் இருந்த நெருக்கடிகள் குறையுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-352-203)

## உடற்பயிற்சிப் போட்டியில் வேரவில் இந்து ம.வி. முதலிடம்

முழங்காவில்,பெப்.4

கிளிநொச்சி கல்வி வலயத்தின் பூநகரிக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற உடற்பயிற்சிப் போட்டியில் வேரவில் இந்து மகாவித்தியாலயம் ஆண்கள் பிரிவில் முதலிடத்தைப் பெற்றது.

பூநகரி விக்னேஸ்வரா விததியாலயத்தில் கோட்டக்கல்வி அலுவலர் தி.கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இந்தப் போட்டியில் ஆண்கள் பிரிவில் வேரவில் இந்து மகாவித்தியாலயம் முதலாமிடத்தையும் பூநகரி நல்லூர் மகாவித்தியாலயம் இரண்டாமிடத்தையும் பூநகரி விக்னேஸ்வரா வித்தியாலயம் மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டன.

(த-323-203)



புதுக்குடியிருப்பு ஒஸ்கா சின்னப்பூக்கள் முன்பள்ளியின் மாணவர்களை பாடசாலைக்கு வழியனுப்பும் வைபவம் அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் கௌரவிக்கப்பட்ட மாணவர்களைப் படத்தில் காணலாம். *(படம்: புதுக்குடியிருப்புச் செய்தியாளர்)*

# வன்னியில் பின்தங்கிய பாடசாலைகளில் கணித, விஞ்ஞான பாடங்களுக்கு ஆசிரியர்

### தமிழீழ கல்விக்கழகம் நியமித்தது

கிளிநொச்சி,பெப்.4

வன்னிப் பெருநிலப்பரப்பில் ஆசிரியர் பற்றாக்குறை கடுமையாக நிலவுகின்ற பின்தங்கிய பகுதிகளின் பாடசாலைகளுக்கு கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களைக் கற்பிப்பதற்கு தமிழீழ கல்விக் கழகம் ஆசிரியர்களைப் பணிக்கு அமர்த்தியுள்ளது.

இதற்கான நேர்முகப் பரீட்சை கடந்த மாதம் நடைபெற்றது. பங்குபற்றியோர்களில் தெரிவுசெய்யப்பட்டவர்களின் விவரம் வருமாறு:-

**கணிதம்**

வேதமணி நித்தியகீர்த்தி (புலோலி தெற்கு), நமசிவாயம் கிருஸ்ணபவானந்தன் (கறுக்காய்த்தீவு - பூநகரி), சந்திரரவி செந்தாமரைச்செல்வன் (உழவனூர் - தருமபுரம்), கிருஸ்ணபிள்ளை முகுந்தன் (கிளிவெட்டி- அல்வாய்மேற்கு), கணேசு உமாப்பிரியா (ஜின்னா வீதி - யாழ்ப்பாணம்), ஐயப்பா அபையசீலன் (புத்தூர் கிழக்கு - புத்தூர்), கந்தசாமி அமிர்தாஸ் (உதயநகர் கிழக்கு- கிளிநொச்சி), சின்னத்தம்பி சிவகுகன் (7ஆம் வட்டாரம் - சிவநகர்), விசயரத்தினம் பகீரதன் (குஞ்சுக்குளம் - வன்னேரிக்குளம்), அருணாசலம் கோணேஸ்வரன் (பல்லவராயன்கட்டு - பூநகரி), சண்முகம் தவராசா (பெரிய பண்டிவிரிச்சான் - மடு), குணபாலசிங்கம் மதிவதனன் (உசன் - மிருசுவில்), வரதராஜா மதிமாறன் (பொன்னாலை தெற்கு - சுழிபுரம்), முத்தையா ஜெயக்குமார் (இரணைப்பாலை ஆனந்தபுரம் - புதுக்குடியிருப்பு), சூ.ஜேம்ஸ் ஜெயச்சந்திரன் (இந்திரன் கடையடி- புதுமுறிப்பு), செல்வக்குமார் சுதர்சன் (புன்னை நீராவி -- விசுவமடு), திருமதி நலந்தினி குபேந்திரன் (சுகாதார சேவை நடுவப்பணியகம் - கிளிநொச்சி), செல்வராசா முகுந்தன் கொத்தம்பியகுளம் - துணுக்காய்), சாரதகலா ஜெயதீசன் (செல்வாரிப்பிட்டி - கண்டாவளை).

**விஞ்ஞானம்**

அகிலயூ[illegible] லிங்கம் (மாந்தை கிழக்கு பிர[illegible] - பாண்டியன்குளம்), ராதிகா சிவசுப்பிரமணியம் (விசுவமடு மேற்கு), அந்தோனிப்பிள்ளை அமலதாஸ் (கொழும்புத்துறை - யாழ்ப்பாணம்), திருமதி சிறிதர்க்கா ரவிச்சந்திரன் (6ஆம் யூனிற் - இராமநாதபுரம்), சியாமினி சிவலிங்கம் (விசுவமடு), திருமதி சுடர்விழி சிவராசா (விசுவமடு), செபமாலை விமலகாந்தன் (புன்னை நீராவி- விசுவமடு), சாய்மீரா சச்சிதானந்தசிவம் (புன்னை நீராவி - விசுவமடு), சிவஞானம் பிரசாந் (யோகபுரம் - மல்லாவி), சிறிஸ்கந்தராசா சிறிகாந் (இடைக்காலக் குடியிருப்பு மருதங்கேணி வடக்கு - தாளையடி), தமிழழகி நகுலேஸ்வரன் (கட்சன் வீதி - வட்டக்கச்சி), உமாசேகர் (பண்ணை - முழங்காவில்), நயனி சிவலிங்கம் (நிலாவில் - அல்வாய் வடமேற்கு), திருமதி சியாமளா பாலகிருஸ்ணன் (A.K.R. பாம் உருத்திரபுரம் வீதி - கரடிப்போக்கு), கணபதிப்பிள்ளை குலமணிதேவி (பன்றிசுட்டான் - கண்டாவளை), சிவபாலன் சுதாகர் (உதயநகர் கிழக்கு - கிளிநொச்சி), ஞானகணேசன் ஜெயகௌரி (புன்னை நீராவி நலன்புரி நிலையம் - தருமபுரம்). (த-202)

## பண்டிதர் பரந்தாமனின் நூல் வெளியீடு இன்று

கிளிநொச்சி,பெப்.4

பண்டிதர் வீ.பரந்தாமனின் 'திருக்குறளிற் செந்தமிழாட்சி' நூல் வெளியீடு இன்று மாலை 4 மணிக்கு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

(த-203)

## தரம் ஒன்று மாணவரை வரவேற்பு நிகழ்வு

புதுக்குடியிருப்பு,பெப்.4

முல்லைத்தீவு வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் தரம் ஒன்று மாணவர்களை வரவேற்கும் நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற்றன.

புதுக்குடியிருப்பு சிறிசுப்பிரமணிய வித்தியாசாலை, வேணாவில் முருகானந்த வித்தியாலயம், கொக்கிளாய் அ.த.க.பாடசாலை, உடையார்கட்டு மகாவித்தியாலயம் போன்ற பல்வேறு பாடசாலைகளிலும் வரவேற்பு நிகழ்வுகள் நடைபெற்றன.

நிகழ்வுகளில் மாணவர்கள் மாலைகள் அணிவித்து வரவேற்கப்பட்டனர். தொடர்ந்து கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன.

(த-353-202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் III போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், பெப்.-

இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் III வகுப்பிற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு கல்வியமைச்சின் செயலாளர் ஆரியரத்ன ஹேவகே விண்ணப்பம் கோரியுள்ளார்.

இதற்கான திறந்த போட்டிப்பரீட்சை இரு கட்டங்களாக நடத்தப்படும். பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக இவ்விரண்டு பரீட்சையிலும் கூடிய புள்ளிகளைப் பெறும் பரீட்சார்த்திகள் நியமிக்கப்படுவார்கள்.

விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் 17 ஆம் திகதிக்கு முன்னர் 'பரீட்சை ஆணையாளர்நாயகம், இலங்கை பரீட்சைத் திணைக்களம், பெலவத்த , பத்தரமுல்ல' எனும் விலாசத்திற்கு அனுப்பவேண்டும். என்றும்- விண்ணப்பதாரி பல்கலைக்கழகப் பட்டதாரியாக இருப்பதுடன் 27.02.2006 அன்று 22-32 வயதுக்கிடைப்பட்டவராக இருத்தல் வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பொது ஊழியர் II, விஷேட ஊழியர் 365 பேரும் தெரிவு செய்யப்படவுள்ளனர். பொது ஊழியருக்கு விண்ணப்பிப்போர் 1 ஏபி, 1சி பாடசாலையில் 3 வருடங்கள் அதிபராகக் கட்டாயம் சேவையாற்றியிருத்தல் வேண்டும் முதலாம் பரீட்சையில் சித்திபெற்றால் மட்டுமே 2 ஆம் பரீட்சைக்குத் தோற்ற முடியுமெனவும் கூறப்பட்டுள்ளது.

(த-84)

## உலக வங்கி உதவியுடன் இவ்வருடமும் வேலைத்திட்டம்

தென்மராட்சி, பெப். 4

உலக வங்கியின் உதவியுடன் யாழ் மாவட்டத்தில் இவ்வருடமும் உலக உணவுத் திட்டத்தின் கீழ் வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இத்திட்டத்தில் இவ்வருடம் மேற்கொள்ள உத் தேசித்துள்ள வேலை களுக்கானதிட்ட முன்மொழிவுகள் யாழ். மாவட்டபுனர் வாழ்வு புனரமைப்பு நல்லிணக்கச் செயலகத்தினால் கோரப்பட்டுள்ளன.

புதிய வேலைகள் தொடர்பான மதிப்பீட்டுத் திட்டங்களுக் குத் தேவைப்படும் அளவுதாள்களுடன் அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி சபைகளால் வைக்கப்படும் வேலைகளின் முன்மொழி வுகள் உதவி உள்ளூராட்சி ஆணையாளர் ஊடாக அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது.

(த-117)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 21 . 10 . 1954

உதிர்வு 22 . 12 . 2005



அமரர் கிருஷ்ணன் நவரெட்ணம்

(தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, கச்சேரி, யாழ்ப்பாணம்.)

யாழ்.மாவட்ட சமாதான நீதிவான் அவர்கள்

கடந்த 22.12.2005 அன்று காலமாகிய எமது குடும்பத் தலைவர் கிருஷ்ணன் நவரெட்ணம் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (04.02.2006) சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அந்த நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

தகவல்:

மனைவி, தாய், சகோதரர்கள், பெறாமகன், மக்கள், பேரப்பிள்ளைகள்.

நிரந்தர முகவரி:
இல. 432/2, மடம் வீதி,
யாழ்ப்பாணம். (46218)

# வரணி மகாவித்தியாலய பொன்விழா நிகழ்வுகள்

தென்மராட்சி, பெப்.4

வரணி மகாவித்தியாலயத்தின் 50ஆவது ஆண்டு நிறைவுவிழாவும் பரிசில் நாள் விழாவும் எதிர்வரும் 7ஆம் திகதி காலை 9 மணிக்கு நடைபெறும்.

வித்தியாலயத்தில் சிறுவர் பாதுகாப்பு நிதிய நிறுவத்தினரால் புனரமைக்கப்பட்ட இருமாடிக் கட்டடமும் , வித்தியாலய பெயர் வளைவும் அன்றைய தினம் திறந்து வைக்கப்படவுள்ளன. வித்தியாலய 50ஆவது ஆண்டு நிறைவையொட்டிய பொன்விழா மலர் வெளியீடு நடை பெறும்.

வித்தியாலய அதிபர் செ. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுகளுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகமும், சிறப்பு விருந்தினராக சிறுவர் பாதுகாப்பு நிதிய நிறுவன கல்விக்கான நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் அ.பேரின்பநாதனும், கௌரவ விருந்தினராக சாவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலர் நா. சத்தியநாதனும் கலந்துகொள்வர்.

பொன்விழா மலரை இளைப்பாறிய உதவிக்கல்விப் பணிப்பாளர் இ.சின்னத்தம்பி வெளியிட, மலரின் ஆய்வுரையை யாழ். தேசிய கல்வியியல் கல்லூரி விரிவுரையாளர் சத்தியேந்திரம்பிள்ளை நிகழ்த்துவார்.

(த-170)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

எம் விழிநீர் துடைக்க நீ வந்து பிற மீண்டும்




திருமதி

தருமகுலசிங்கம் சற்குணாதேவி

திதி: பூர்வபக்க ஸப்தமி

சற்குணங்களும் சாலப்பெற்ற சற்குணாதேவியே!
ஆயிரம் உறவுகள் இருந்தென்ன
அவையெல்லாம் ஆகுமா உனைப்போல
ஆனதம்மா ஒருவருடம் அதையுந்தான்
நம்பமுடியவில்லை!
வெம்புகின்றோம் வெதும்புகின்றோம்
வெயில்பட்ட புழுப்போல
நீ வந்து பிறவாயோ எமை அணைத்து காத்துநிற்க
நீசெய்த தியாகங்கள் ஒன்றல்ல ஓராயிரம்
அவையெல்லாம் மறந்திட்டால் நாமெல்லாம் மனிதரன்றோ?

நீமறந்து போனது ஞாயமோ
இல்லையம்மா
நான மறந்து போக
யோகம்தான் இல்லையம்மா
கணவர்

கணவர், பிள்ளைகள்,
தாய், சகோதர சகோதரிகள்.
தாதாவளை, காரணவாய் தெற்கு,
கரவெட்டி.
தொ.பே.இல. 0776914104.

(46281)


## தமிழீழ வைப்பகம்

## பணிநிலை வேண்டுகை

தமிழீழ வைப்பகத்தினால் கீழ்க்காட்டப்படும் பணிநிலைக்குத் தகுதி யானவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

01. பணிநிலை :- **அலுவலர் (பயிலுநர்)**
தகைமைகள் :- ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் தொழில் நிர்வாகமாணி (BBA) / வணிகமாணி (B.Com.)/ விஞ்ஞானமாணி (B.Sc.) பட்டதாரியாக இருத்தல் வேண்டும்.
அல்லது
ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றில் உயர் தேசியக் கணக்கியல் டிப்ளோமா சான்றிதழைப் (HNDA) பெற்றிருத்தல் வேண்டும்.
அல்லது
ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனம் ஒன்றின் வங்கியியல் டிப்ளோமா கற்கைநெறியை (Di-ploma in Banking) நிறைவு செய்தவராக இருத்தல் வேண்டும்.

மாதாந்த ஊதிய அளவுத் திட்டம் :- **4,500+6,000**
அகவை எல்லை :- **32 வருடங்களுக்கு மேற்படாதவராக இருக்க வேண்டும்.**

மேற்காட்டப்பட்ட பணிநிலைக்குத் தகுதியானவர்கள் தம்மால் தயாரிக்கப்பட்ட சுயவிளக்கங்களுடனும் கீழ்க்காட்டப்படும் ஆவணங்களுடனும் திருநகர், கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழீழ வைப்பக, நடுவப் பணியக, மனிதவளப் பகுதிக்கு 27/02/2006ஆம் நாள் திங்கட்கிழமை காலை 10 மணிக்கு நேரில் வருகைதருமாறு வேண்டப்படுகின்றனர்.

01. கல்வித் தகைமையை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்
02. ஏனைய தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்
03. ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்கள்
04. நற்சாட்சிப் பத்திரங்கள்

**மனிதவள மேலாளர்,
மனிதவளப் பகுதி,
நடுவப்பணியகம்,
தமிழீழ வைப்பகம்.**

(சி/47579) (24)

## தமிழீழ வைப்பகம்

## பணிநிலை வேண்டுகை

தமிழீழ வைப்பகத்தினால் கீழ்க்காட்டப்படும் பணிநிலைக்குத் தகுதி யானவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

பணிநிலை :- **உத்தியோக உதவியாளர் தரம் - 03**
தகைமைகள் :- க.பொ.த. (சாதாரண தர) தேர்வில் கணிதம் 42/கணிதம்II, தமிழ் உட்பட 05 திறமைச் சித்தியுடன் குறைந்தது 06 பாடங்களில் ஒரே அமர்வில் தேர்ச்சி பெற்றிருப்பதுடன், க.பொ.த. (உயர்தர) தேர்வில் ஒரே அமர்வில் 03 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்கவேண்டும்.

மாதாந்த ஊதிய அளவுத் திட்டம் :- **3,670 - 5,070 / 70x20 + 6,000**

அகவை எல்லை :- **19-25 ஆண்டுகள்**

வேண்டுகைகள் யாவும் உரிய படிவத்தில் நிறைவுசெய்யப்பட்டுக் கடித உறையின் இடப்பக்க மேல்மூலையில் **"ஆட்சேர்ப்புக்கான வேண்டுகை - உத்தியோக உதவியாளர் தரம் - 03"** எனக் குறிப்பிட்டு 2006/02/20 ஆம் நாளன்று அல்லது அதற்கு முன்பாகக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைத்தல் வேண்டும். வேண்டுகைப் படிவங்களையும் மேலதிக விளக்கங்களையும் தமிழீழ வைப்பகத்தின் எல்லாக் கிளைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

**மனிதவள [illegible]மலாளர்,
மனிதவளப் பகுதி,
நடுவப்பணியகம்,
தமிழீழ வைப்பகம்.**

குறிப்பு:
* முழுமையாக நிறைவுசெய்யப்படாத, சான்றிதழ்கள் இணைக்கப்படாத வேண்டுகைகள் நிராகரிக்கப்படும்.
* நிறைவுசெய்யப்பட்ட வேண்டுகைகளைப் பதிவுத்தபாலில் (மனிதவள மேலாளர், மனிதவளப் பகுதி, நடுவப் பணியகம், தமிழீழ வைப்பகம், திருநகர், கிளிநொச்சி எனும் முகவரிக்கு) நேரடியாகவோ அல்லது தமிழீழ வைப்பகக் கிளைகளினூடாகவோ அனுப்பிவைக்கலாம்.

(சி/47580)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 50 ஆண்டுகளுக்கு மேலாகப் பெற்ற அனுபவம் தமிழருக்கு இன்று உரைப்பது என்ன?



இலங்கைக்கு விடுதலை கிடைத்ததாகச் சொல்லப்படுகிறது. அவ்வாறு சொல்லப்படும் இவ்விடுதலை இத்தீவிற்குக் கிடைத்து 58 ஆண்டுகள் ஆகின்றன. இதன் விளைவு என்ன? சிங்களப் பேரினவாதம் அனைத்திலும் தலைவிரித்துத் தாண்டவம் ஆட இந்நாட்டின் மூத்தகுடியாம் தமிழ்க்குடி மக்களுக்கோ அடிமை விலங்கு பூட்டப்பட்டு நாளும்பொழுதும் அழிந்துகொண்டிருக்கிறார்கள். வெறும் அழிவு அல்ல; பேரழிவு என்றே கூறலாம்.

இலங்கைக்கு விடுதலை கிடைத்ததாகச் சொல்வது எம்மை நாமே ஏமாற்றுகின்ற கூற்றாகும். இதனைத்தான் அமரர் ஜி.ஜி. பொன்னம்பலம் வெள்ளையன் வெளியேறிவிட்டான். அதற்குப்பதில் இன்னுமொரு கறுப்பனின் ஆட்சி தலைதூக்கியுள்ளது. ஆபத்துகள் பல சூழ உள்ளன என்று கூறினார்.

### 1920 ஆம் ஆண்டிலேயே தமிழரை அழித்தொழிக்க திட்டம் தீட்டப்பட்டது

1948இல் இலங்கைக்கு விடுதலை கிடைத்ததை அடுத்துத்தான் தமிழ் மக்களுக்கு இன்னல்கள் ஏற்பட்டிருப்பதாக எம்முள் பலர் கருதுகிறோம். கடந்த 57 ஆண்டுகள் நாம் பெற்ற கசப்பான அனுபவம் இவ்விதம் எம்மைச் சிந்திக்கவைக்கிறது. ஆனால், வரலாற்று உணர்வோடு கடந்த கால நிகழ்ச்சிகளை நாம் உன்னிப்பாகக் கவனிப்போமாயின் 1920களின் தொடக்கத்திலேயே ஈழத்தமிழினத்தைப் படிப்படியாக அழித்தொழிக்க பல சட்டதிட்டங்களைச் சிங்களவர் தீட்டியதற்குச் சான்றுகள் பல உண்டு. 1915ஆம் ஆண்டு சிங்கள, முஸ்லிம் மக்களிடையே இனக்கலவரம் ஏற்பட்டபோது மார்ஷல் சட்டத்தைப் பிரகடனம் செய்து சிங்கள இனத்தைக் கூண்டோடு அழிக்கும் முயற்சிகளில் அரசு ஈடுபட்டபோது முதலாம் உலகப் போர் நடைபெற்ற வேளையில் தம் உயிரைத் துச்சமென மதித்து நீர்மூழ்கிக் கப்பலில் லண்டன் சென்று சிங்களவருக்காகக் குரல் எழுப்பி வெற்றி வாகைசூடி திரும்பியவேளையில் கொழும்பு துறைமுகத்தில் டி.எஸ்.சேனநாயக்க, ஏ.இ.குணசிங்க, எவ்.ஆர்.சேனநாயக்க, வரண் ஜெயதிலக்க போன்ற பெரும் தலைவர்கள் இராமநாதனை தேரில் ஏற்றி தாம் குதிரைகளாக மாறி அவரது "சுகஸ்தான்" இல்லத்திற்கு இழுத்து வந்த காட்சி வரலாற்றில் தனி இடம் பிடித்த நிகழ்ச்சியாகும். "In the dire hour of our need a valiant son of the North came to our rescue, of not for him we will not be among the living" (மிகவும் நெருக்கடியான காலகட்டத்தில் வடக்கு தந்த மாவீரன் எம்மைக் காக்க முன்வந்திராவிடின் நாம் வாழ்விழந்தவர்களாகவே விளங்கியிருப்போம்) என்று சிங்கள - பௌத்த மதத்தின் காவலன் அனக்கரிக் தர்மபால கூறிய கூற்று இங்கு நினைவு கொள்ளத்தக்கது.

எனினும் காலப்போக்கில் சிங்களவரிடையே விரும்பத்தக்கதாக மனமாற்றம் ஏற்பட்டிருப்பதைக் கவனித்த சேர் பொன்.இராமநாதன் சிறிது காலம் ஒதுங்கியிருந்தார். எனினும், அவரின் அருமைத் தம்பி சேர் பொன். அருணாசலம் இலங்கைத் தேசிய காங்கிரஸின் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டபோது தம் அண்ணாவின் வாழ்த்துதலைப் பெற வந்தபோது அவரின் அண்ணா பின்வரும் அறிவுரையை வழங்கினார். "Go ahead but take care. You will presently meet with a storm, which will hurl you off the chair" (முன்னேறு. ஆனால், கவனமாக இரு விரைவில் வீச இருக்கும் புயல் உன்னையே உன் நாற்காலியிலிருந்து தூக்கி எறியக் கூடும். (சட்டமன்றப் பதிவேடு தொகுதி 3, 1928, பக்கம்: 1431) சேர் பொன். இராமநாதன் எச்சரித்தபடி இலங்கைத் தேசிய காங்கிரஸில் இருந்து மிகக் குறுகிய காலகட்டத்தில் அருணாசலம் வெளியேறும் நிலை ஏற்பட்டது. இலங்கையின் மேல்மாகாணத் தொகுதியை அருணாசலம் அவர்களுக்கு வழங்குவதாக உறுதியளித்த சிங்களத் தலைமைப்பீடம் தன் வாக்குறுதியை மீறிய நிலையில் இனிமேல் சிங்களத் தலைமைப் பீடத்தை நம்பமுடியாது எனக் குமுறினார்.

## இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்ததாகக் கூறுவது வெறும் ஏமாற்றுக் கூற்றே

தமிழ் மண்ணில் அரசின் ஆதரவோடு சிங்களக் குடியேற்றத்தை ஏற்படுத்த நடைபெறும் சதி முயற்சி அம்பாறையில் டி.எஸ். சேனநாயக்க காலத்தில் தான் தொடங்கியதென்று பலர் கருதுகின்றனர். ஆனால், 1917 ஆம் ஆண்டிலேயே தமிழர் பெரும்பான்மையாக வதியும் வாழ்வகத்தை மெல்ல மெல்லக் கைப்பற்றி அவர்களை அவர்களிடத்திலேயே சிறுபான்மையாக்கி பிரதிநிதித்துவத்தைக் குறைக்கவேண்டும் என்ற சதித்திட்டம் சிங்களத் தலைவர்களின் மூளையில் உருவாகிவிட்டதென்று கூறின் அது தவறாகாது. எடுத்துக்காட்டாக நாச்சடுவத்திட்டம் (NACHCHADUWA SCHEME) முற்றாக சிங்களவனுக்குக் கொடுத்த நிகழ்ச்சி சான்றாக விளங்குகின்றது. இதை இராமநாதன் உட்பட அன்றைய சட்டசபையில் அங்கம் வகித்த பல தமிழ்த் தலைவர்கள் எதிர்த்தனர்.

சேர் பொன்.இராமநாதன் அவர்கள் தமிழனிற்குப் பேரழிவை ஏற்படுத்தும் டொனமூர் சட்டத்தைக் கடுமையாக எதிர்த்தார். போதிய பாதுகாப்பற்ற நிலையில் டொனமூர் சட்டத்தை நாம் ஏற்போமாயின் அது தமிழனிற்கு மரண ஓலையாக மாறும் என எச்சரித்தார். "Donoghmore means Tamils no more" என்பது அவரின் ஆவதறிந்த முழக்கம். எனக்கு வயது போய்விட்டது. நடக்கிறது நடக்கட்டும் என சாய்மனைக் கதிரையில் நான் ஓய்வெடுக்கமுடியும். ஆனால், நான் அப்படி வளர்க்கப்பட்டவனல்ல. எம் இனத்தின் அழிவைத் தடுக்க என் இறுதி மூச்சுள்ள வரை போராடுவேன் என முழங்கினார்.

### ஏமாந்த வரலாறு

சுருக்கக் கூறின் பெப்ரவரி மாதம் 4ஆம் நாளாகிய இன்றைய தினத்தை விடுதலை பெற்ற நாளாக சிங்களவர் கொண்டாட உள்ளனர். ஆனால், ஈழத்தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் இது ஒரு கரிநாள் - துயர் தோய்ந்த நாள். நாம் இந்நாட்டின் விடுதலைக்காகப் பட்டபாட்டினைப் பொருட்படுத்தாது எம்மைத் தூக்கி எறிந்த நாளாக நாம் இதனைக் கருதுகின்றோம். 58 ஆண்டுகளாகத் தொடர்ச்சியாக ஏமாற்றப்பட்ட நாம் இனிமேல் சிங்களத் தலைமைப்பீடம் எம்மை ஏமாற்றாது என்று நம்புவதற்கு நாம் ஆயத்தம் இல்லை. 1948இல் இலங்கைக்கு விடுதலை கிடைக்கின்ற வேளையில் சிங்களத் தலைமைப் பீடத்தைத் தமிழர் தலைமைப்பீடம் நம்பத்தயங்கியது. ஆனால், அரசியல் சாணக்கியனாக விளங்கிய டி.எஸ். சேனநாயக்கா எம்மை அடிமைப்படுத்தியும் வெள்ளையனுக்கோ நீங்கள் ஒத்துழைப்பு வழங்கப்போகிறார்கள். நாங்கள் உங்களைக் கைவிடமாட்டோம் என்று டி.எஸ்.சேனநாயக்கா கூற்றை நம்பிய தமிழர்கள் பலர் அவருக்கு ஒத்துழைப்பு வழங்கி நாம் ஏமாந்த வரலாற்றினை எளிதில் மறப்பதற்கில்லை. தந்தை செல்வா போன்ற தலைவர்கள் தொலைநோக்குச் சிந்தனையுடன் ஆவது அறியும் ஆற்றலுடன் டி.எஸ்.சேனநாயக்கா விரித்த வலையில் விழமறுத்தது உண்மை.

### இப்பொழுது மஹிந்த ராஜபக்ஷ வலை வீசுகின்றார்

இப்பொழுது எங்கள் மஹிந்த ராஜபக்ஷ, தமிழ் மக்களை நோக்கி "என்னை நம்புங்கள் எனக்கு ஒரு வாய்ப்பளியுங்கள்" என்று கெஞ்சுகின்றார். தமிழர் ஒரு தேசிய இனம் என்பதையே தமிழரின் தாயகக் கோட்பாட்டினையோ தமிழர் தன் உரிமை நிலைநாட்டலையோ (சுயநிர்ணயக் கோட்பாட்டினையோ) ஏற்க மறுக்கும் ஒருவரை நாம் எப்படி நம்புவது. வெறிகொண்ட ஜே.வி.பியினரும் ஹெல உறுமயவினரும் இவரைச் சிறைப்பிடித்து வைத்திருக்கின்றனர். இவற்றில் இருந்து இவர் தன்னை விடுவிக்க முடியுமா என்பது மிகப்பெரியகேள்வி.

இவர் அமைதி பற்றி அடிக்கடி பேசுகிறார். பிரபாகரன் அவர்களுடன் நேரில் பேசவும் விருப்பம் தெரிவித்துள்ளார். ஆனால், மேற்குறித்த தமிழரின் அடிப்படைக் கோட்பாட்டினை ஏற்க மறுக்கும் இவருடன் பேசுவதில் பயன் என்ன? அமைதி காணவேண்டும் எனக் கூறும் இவர், போருக்கு ஆயத்தங்களைச் செய்கின்றார் என்பதற்குச் சான்றுகள் பல உண்டு. விடுதலைப் புலிகளிடம் தரைப்படை உண்டு. கடற்படை உண்டு. காவற்படை உண்டு. இவை அனைத்திற்கும் மேலாக வான்படையும் உண்டு. புலிகளின் வான்படையை எப்படி நாம் முறியடிக்கலாம் என்று சிங்களப் படைக்கு அறிவுரை கூற இந்தியாவின் வான்படைத் தளபதி கடந்த வாரம் இங்கு வந்து சென்றுள்ளார் என நாம் ஊகிப்போமாயின் அதில் தவறு இருப்பதாக எவரும் கூறமுடியாது.

ஈழத்தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் கடந்தகால கசப்பான அனுபவங்களைக் கொண்டு சில சலுகைகளையோ சில உரிமைகளையோ பெற்று நாம் வாழப்போவதில்லை. சலுகைகளை நாம் கெஞ்சிப் பெறுகிறோம். உரிமைகளைக் கேட்டுப் பெறுகின்றோம். ஆனால், விடுதலையை எவரும் எமக்குப் தரப்போவதில்லை. அதை நாமே நிலைநாட்டிக்கொள்கிறோம். விடுதலையை எவரும் வெள்ளித் தட்டத்தில் வைத்து தரப் போவதில்லை என்பது தந்தை செல்வாவின் தாரக மந்திரம் ஆகும். விடுதலையைப் பெறுவது என்பது வில்லங்கமான காரியம் தான். ஆனால், இதைப் பெறாவிட்டால் நாம் அழிந்துபோவோம். இதுவும் தந்தை செல்வாவின் கூற்றாகும்.

சிறிய பாதுகாப்பைப் பெறுவதற்கு அடிப்படை விடுதலையையோ பாதுகாப்பையோ பெறுவதற்கு தகுதியுடையவர்கள் அல்லர் நாம். ஆகவேதான், தொடர்ச்சியாக ஏமாற்றப்பட்ட நாம் இனிமேல் தற்காலிக பாதுகாப்பிற்காக அடிப்படை விடுதலையை நாம் விட்டுக்கொடுப்போமாயின் விடுதலையையோ பாதுகாப்பையோ பெறுவதற்குத் தகுதியற்றவர்களாகிவிடுவோம்.

எனவே, கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக நாம் பெற்ற கசப்பான அனுபவம் எமக்கு உணர்த்தி நிற்கின்ற பாடம் கெஞ்சிப் பெறும் சலுகைகளை விடுத்து கேட்டுப் பெறும் உரிமைகளை மறந்து நாம் முழுமை பெற்ற விடுதலைக்காகப் போராடினால் தான் நாம் விரும்பும் விடுதலையும் பாதுகாப்பும் கிடைக்கும்.

**மா.க.ஈழவேந்தன்**

# வல்வெட்டித்துறை மீனவருக்கு ரூ.27 லட்சம் பெறுமதியான படகு

## கடற்றொழில் அமைச்சு வழங்கியது

யாழ்ப்பாணம்,பெப்.4

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட எட்டு மாவட்டங்களைச் சேர்ந்த கடற்றொழிலாளர்களுக்கு கடற்றொழில் நீரியல் வள அமைச்சினால் மீன்பிடிப் படகுகள் கையளிக்கும் ஆரம்ப வைபவம் கடந்த வாரம் காலியில் நடைபெற்றது.

மேற்படி மாவட்டங்களில் இருந்தும் குலுக்கல் மூலம் தெரிவுசெய்யப்பட்ட தலா ஒவ்வொரு மீனவர்களுக்கே இவ்வாறு மீன்பிடிப் படகுகள் வழங்கப்பட்டன.

படகுகள் கையளிக்கும் வைபவம் கடந்த மாதம் 27ஆம் திகதி சனிக்கிழமை காலி மாவட்டம் உணவட்டுன பிரதேசத்தில் உள்ள படகுத் தொழிற்சாலையில் நடைபெற்றது.

யாழ். மாவட்டத்தில் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த சி.கணேசலிங்கம் என்பவருக்கு இந்த வைபவத்தில் வைத்து மீன்பிடிப் படகு கையளிக்கப்பட்டது.

எட்டு மாவட்டத்திற்கும் ஒவ்வொரு படகு வீதம் எட்டு கடற்றொழிலாளர்களுக்கான படகினைக் கடற்றொழில் நீரியல் வள அமைச்சர் சிறில் பீலிஸ் பெரேரா கையளித்தார்.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் க.தர்மலிங்கமும் கலந்து கொண்டார்.

இந்த வைபவத்தில் கையளிக்கப்பட்ட ஒரு படகின் பெறுமதி சுமார் 27 லட்சம் ரூபா எனத் தெரிவிக்கப்பட்டது. படகுடன் 7 லட்சம் ரூபா பெறுமதியான மீன்பிடி வலைகளும் வழங்கப்பட்டன.

தெரிவுசெய்யப்பட்ட ஏனையவர்களுக்கான மீன்பிடிப் படகுகளின் கட்டுமானப் பணிகள் பூர்த்தியானதும் விரைவில் அவர்களுக்கும் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(எ-7)



மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைக்கு வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்ட அம்புலன்ஸ் வாகனத்தை யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் மேற்படி வைத்தியசாலைத் தலைவர் வி.வேலுப்பிள்ளையிடம் கையளிப்பதைப் படத்தில் காணலாம். இந்த நிகழ்வில் கலந்துகொண்ட வைத்தியசாலையின் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் எஸ்.தியாகலிங்கம், ஏ.கிருஷ்ணமூர்த்தி, ஜே.தில்லையம்பலவாணர் மற்றும் யாழ். கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர்கள் கு.சிவலிங்கம், எஸ்.கனகசபாபதி ஆகியோரும் படத்தில் உள்ளனர்.

(படம்: குருநகர் செய்தியாளர்)

# ஜி.சீ.ஈ. உயர்தர மாணவரிடையில் பொதுஅறிவுப் போட்டிக்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம்,பெப்.4

யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியின் வெளிச்ச வீட்டுப் பாடசாலை அலகின் ஏற்பாட்டில் யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளின் ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்பு மாணவர்களிடையில் பொது அறிவுப்போட்டி நடத்தப்படவுள்ளது.

மாணவர்களின் ஆங்கிலமொழிமூல வாசிப்புப் பழக்கத்தையும் தேடிக்கற்றலையும் ஊக்கப்படுத்தும் முகமாக நடத்தப்படவுள்ள இந்தப் போட்டி எதிர்வரும் 7ஆம் திகதி பிற்பகல் ஒரு மணிக்கு வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

எழுத்து மூலமான இப்போட்டியில் வல[illegible]யத்தின் 26 பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் தோற்றவுள்ளனர்.

வெற்றிபெறும் மாணவர்களுக்கான பரிசில்களும் சான்றிதழ்களும் கோட்ட மட்டங்களில் தேசிய 1 ஏபி, 1சி தரப் பாடசாலைகள் என்ற ரீதியில் வழங்கப்படும் என்று வைத்தீஸ்வராக் கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார்.

மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்றும் -

அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாதோர் வெளிச்ச வீட்டுப் பாடசாலை அலகுடன் தொடர்பு கொள்ளலாம் என்றும்- கல் லூரி அதிபர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை பத்திரிகை ஆசிரியர்கள் சங்கம்

### இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்துடன் இணைந்து
### சிறந்த பத்திரிகையாளர்களுக்கான விருது வழங்கல் 2005

இலங்கை பத்திரிகை ஆசிரியர்கள் சங்கம் இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்துடன் இணைந்து, கீழ்க்குறிப்பிட்டுள்ள விருதுகளை வழங்குவதற்காக 2005 ம் ஆண்டில் எழுத்து ஊடகத்துறையில் செயலாற்றியவர்களிடமிருந்து விண்ணப்ப பதிவுகளைக் கோர விரும்புகிறது. ஆண்டு தோறும் நிகழும் இவ்விருது வழங்கலின் பிரதான நோக்கமானது, குறிப்பிட்ட ஆண்டில் மிகச் சிறப்பெய்தியவர்களுக்கு விருதுகள் வழங்கி அவர்களின் தொழிற் பண்பை அங்கீகரித்தலாகும். இலங்கையில் மும்மொழிகளிலும், வெளியிடப்படும் செய்தித் தாள்கள் சார்ந்த சுதந்திரமான எழுத்தாளர் உட்பட பத்திரிகையாளர் இத்திட்டத்தில் பங்கு பற்றலாம். பத்திரிகையாசிரியர் சங்கத்தினதும், பத்தரிகை ஸ்தாபகத்தினதும் சார்பில் ஊடகங்களின் சுதந்திரமான நடுவர்கள் குழுவொன்று விருது பெறுபவர்களைத் தெரிவு செய்யும். 2006 ஜுலை மாதத்தில் நடைபெறும் விழாவொன்றில் பின்வரும் பெருமைமிக்க விருதுகள் வழங்கப்படும்.

### விருதுகளின் விபரப் பட்டியல்

**விண்ணப்பத்தின் படி:**

- ஆண்டின் சிறந்த பத்திரிகையாளருக்கான மெர்வின் டி சில்வா ஞாபகார்த்த விருது
- ஆண்டின் சிறந்த விழுவிருப்பு செய்திக்கான (தனித்துவ செய்தி) டி பி தனபால விருது
- ஆண்டின் சிறந்த சூழல் செய்தி நிருபர்
- ஆண்டின் சிறந்த சமுக அபிவிருத்தி செய்தியாளருக்கான சுப்ரமணியம் செட்டியார் விருது
- ஆண்டின் சிறந்த விளையாட்டுதுறைச் செய்தியாளருக்கான விருது
- ஆண்டின் சிறந்த இளம் செய்தியாளருக்கான (30 வயதிற்கு கீழ்ப்பட்ட) டென்சில் பீரிஸ் விருது
- ஆண்டின் சிறந்த பத்திரிகைதுறை படப்பிடிப்பாளர்
- ஆண்டின் சிறந்த பத்திரிகை வடிவமைப்புக்கான விருது
- நெருக்கடிச் சூழலில் செய்தித் தேடலுக்கான பேராசிரியர் க. கைலாசபதி நினைவு விருது
- ஆண்டின் சிறந்த பத்திரிகையாளர் - சிங்களம், தமிழ், ஆங்கிலம்
- ஆண்டின் சிறந்த வர்த்தக செய்தியாளர் - சிங்களம், தமிழ், ஆங்கிலம்
- உப்பாலி விஜேவர்தன விருது ஆண்டின் சிறந்த விவரணக் கட்டுரையாளர் - சிங்களம், தமிழ், ஆங்கிலம்
- ஆண்டின் சிறந்த கருத்துப்பட ஓவியர் விருது
- பி. ஏ. சிரிவர்தன விருது - ஆண்டின் சிறந்த பந்தி எழுத்தாளர் - சிங்களம், தமிழ், ஆங்கிலம்

**நியமன ரீதியான விழாக்குழுவினரால் பரிந்துரைக்கப்படும் தேர்வுகள்:**

- டீ ஆர் விஜேவர்தன விருது - பொதுமக்களின் வாசகர்களது பாராட்டைப் பெற்ற தகவலுக்கானது
- சேப்பால குணசேன விருது - இலங்கையில் பத்திரிகை சுதந்திரத்தை நிலைநாட்டுவதற்கரிய கொண்டுக்காக வழங்கப்படுவது
- இத்துறையில் நீண்ட காலமாக பிரபல்யம் பெற்று ஆற்றிய பாராட்டத்தக்க சிறப்பு சேவைக்கான விருது

விருதுக்காக ஒன்றுக்கு மேற்பட்ட ஊடகவியலாளர்களால் எழுதப்பட்ட கட்டுரைகள் அல்லது செய்தி அறிக்கைகள் பதியப்படலாம். அவ்வாறு செய்யுமிடத்து அவர்கள் யாவரினதும் பெயர்களும் பதியப்படல் வேண்டும்.

**விண்ணப்ப பதிவுகள் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும் அல்லது முற்பகல் 10 மணியிலிருந்து பிற்பகல் 6 மணிவரை நேரில் கொடுக்கப்படலாம்.**

**தலைவர்**
பத்திரிகையியல் விருது வழங்கல் குழு.
இலங்கை பத்திரிகை ஸ்தாபனம், மே/பா
65/5 வோர்ட் பிலேஸ், கொழும்பு 7.

விண்ணப்பத்தின் விடயங்கள் 2005 ஆம் ஆண்டு தை மாதம் 1ம் திகதியிலிருந்து மார்கழி மாதம் 31ம் திகதிக்குட்பட்டதாயிருத்தல் வேண்டும்.

**விண்ணப்பப் பதிவுகள் முடிவுறும் திகதி 2006 பெப் 28**

நடைமுறை: விண்ணப்பப் படிவங்களையும், விதிமுறைகள் அடங்கிய வெளியீட்டையும், கொழும்பு 7, 65/5 வோர்ட் பிலேஸ், முகவரியிலுள்ள இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தில் இலவசமாக பெற்றுக் கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு: குமாரி வெலிவத்த, இலங்கை பத்திரிகை நிறுவகம் தொபே: 5353635

TEGOSL | EXCELLENCE IN JOURNALISM AWARDS 2004 | இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் Sri Lanka Press Institute



## முதலாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 19 - 01 - 1951



உதிர்வு 17 - 01 - 2005

### அமரர் நவரட்ணம் மனோகாந்தா

*எங்கள் அன்புக் குலதெய்வமே*
*ஆண்டு ஒன்று சென்றாலும்*
*ஆறவில்லை எங்கள் துயரம்*
*உங்கள் அன்பும் உருவமும்*
*எங்கள் மனதில் என்றும்*
*வாழ்ந்து கொண்டு இருக்கும்*

உங்கள் ஆத்மா சாந்தி பெற்று அமைதிபெற இறைவனை வேண்டுகின்றோம்.

புளியடிச் சந்தைவீதி,
மானிப்பாய் தெற்கு.

உங்கள் பிரிவால் வாடும்:
**மனைவி, பிள்ளைகள், தாய், சகோதரர்கள்.**

(46301)(26.15.34)


## மருந்துக் கலவையாளர் பயிற்சிநெறி திங்களன்று

குருநகர்,பெப்.4

மருத்துக் கலவையாளர் பயிற்சிநெறியின் ஆரம்ப நிகழ்வு நாளை மறுதினம் திங்கட் கிழமை யாழ். பண்ணையில் அமைந்துள்ள யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்தின் யாழ்.பிராந்திய பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தலைமையில் அன்று முற்பகல் 9.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ள இந்த நிகழ்வில் வடக்கு - கிழக்கு மாகாண சுகாதாரசேவைகள் பணிப்பாளர் டாக்டர் எஸ்.குமாரவேற்பிள்ளை பிரதம விருந்தினராகவும்-

வடக்கு- கிழக்கு மாகாண சுகாதாரசேவைப் பிரதி மாகாணப் பணிப்பாளர் (நிர்வாகம்) ஆர். இரவீந்திரன் கௌரவவிருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இப் பயிற்சி நெறியில் யாழ்.மாவட்டத்திலிருந்து 27பேரும், கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து 2பேரும், வன்னி மாவட்டத்திலிருந்து 3பேரும், மன்னார் மாவட்டத்திலிருந்து 4பேரும், திருகோணமலை மாவட்டத்திலிருந்து 3பேருமாக மொத்தம் 39பேர் கலந்துகொள்ளத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ஈ-51)


## குடும்பப் புனர்வாழ்வு நிலையம்
## FAMILY REHABILITATION CENTRE

பதவி வெற்றிடம் : பிராந்திய இணைப்பாளர்
Regional Co-ordinator
கல்வித்தகைமை : பட்டதாரி அல்லது நிர்வாகம் /முகாமைத்துவம் / களமேற்பார்வையில் 10 வருட அனுபவம்.
வயது : 45 – 55
கடமையாற்றும் பிரதேசங்கள : மன்னார் , வவுனியா , யாழ்ப்பாணம் , அனுராதபுரம்.
வேறு தகைமை : தமிழ் , ஆங்கிலம் , சிங்களம் ஆகிய மூன்று மொழிகளிலும் தேர்ச்சி பெற்றிருத்தல்
சம்பளம : ரூபா 30,000/=
சேவைக்காலம : ஒப்பந்த அடிப்படையில் ஒருவருடம் . தேவையேற்படின் நீடிக்கப்படலாம்.
விண்ணப்பங்கள் யாவும் , சான்றிதழ் பிரதிகளுடனும் , மூன்று உறவல்லாத நடுவர்களின் பெயர் விபரத்துடன் 15.02.2006 க்கு முன்னர் கீழ்வரும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.:

**Chairman SMC / Projects Co – ordinator,**
**Family Rehabilitation Centre,**
**73, Gregory's Road, Colombo – 07.**



## பொன்விழா நாளில் வாழ்த்துகின்றோம்

"கடவுள் இணைத்ததை மனிதர் பிரிக்கா திருக்கட்டும்."
(மத்தேயு 19:6)

திருமண ஆண்டு 04 . 02 . 1956




ஜூபிலி ஆண்டு 04 . 02 . 2006

### யாக்கோப்பு ஞானசீலன்
### திருமதி மெற்றிலடா ஞானசீலன்

*திருமண வாழ்வில் 50 ஆம் ஆண்டு*
*விழாவைக் கொண்டாடும் எம்*
*அன்புப் பெற்றோரை சிறப்புடன்*
*வாழ வாழ்த்துகிறோம்.*

புங்குடு தீவு,
2 ஆம் வட்டாரம்.

வாழ்த்துபவர்கள்:
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

(46265)



## தேவை

**1) பிராந்திய முகாமையாளர்**
**2) விற்பனைப் பிரதிநிதிகள்**

*நுகர்வோர் உணவுப் பொருள்களை சந்தைப்படுத்தும் முன்னணி நிறுவனம் ஒன்றிற்கு முன் அனுபவம் உள்ள வடபிராந்திய முகாமையாளரும் விற்பனைப் பிரதிநிதிகளும் தேவை. உயர்ந்த சம்பளமும் மேலதிகமான ஊக்குவிப்புப் பணமும் வழங்கப்படும். விண்ணப்பங்களை ஒரு வார காலத்தினுள் அனுப்பிவைக்கவும்.*

**விளம்பர இல. 2799,**
**மே/பா, உதயன்,**
**யாழ்ப்பாணம்.**

(46314)(26.15.34)



## மரண அறிவித்தல்

### திருமதி வள்ளியம்மாள் தங்கராசா
(அராலி வடக்கு, வட்டுக்கோட்டை.)



குலனையூரைப் பிறப்பிடமாகவும் அராலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வள்ளியம்மாள் தங்கராசா அவர்கள் 30.01.2006 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - லட்சுமிப்பிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும் கணபதிப்பிள்ளை - சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் தங்கராசாவின் (ஓய்வுபெற்ற சிரேஷ்ட சிறைச்சாலை உத்தியோகத்தர்) அன்பு மனைவியும் பரமசிவராசா (லண்டன்), காலஞ்சென்ற கங்காதரன் , கிருபா (அராலிவடக்கு), தவராசா(லண்டன்), சிறிகரன் (தகவல் தொழில்நுட்பப்பூங்கா உத்தியோகத்தர்), நிர்மலா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும் சுகுணா(லண்டன்), பேரின்பநாதன் (அராலி வடக்கு), விஜயமாலா (லண்டன்),ஜெயந்தினி (முழியாமடு விவேகானந்தா வித்தியாலய ஆசிரியர்), குலராசா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியும் பவித்திரா, சுவித்திரா(லண்டன்), பகிகரன் (யாழ்ப்பாணக் கல்லூரி, AL 2006 கணிதப்பிரிவு), மயூரதி, சஜிதா (யா/அராலி இந்துக் கல்லூரி மாணவிகள்), திவ்வியா, ரதி, சேது (லண்டன்), பிரதீப், பிரியா, பிரதாப் (பிரான்ஸ்), பவித்திரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் தெய்வநாயகியின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்றவர்களான நாகரட்ணம்,சின்னராசா ஆகியோரின் மைத்துனியும் குலரட்ணத்தின் உடன் பிறவாச் சகோதரியும் ஆவார் .

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.02.2006) சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் அராலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை.

(4 6219)
(18 - 12-45)

தகவல்:
**தங்கராசா (கணவர்), பிள்ளைகள், மருமக்கள்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித நேயப் பணிப்பாளர்கள் கடத்தப்படுவதை எவ்வகையிலும் நியாயப்படுத்திவிட முடியாது!

## யாழ். அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம்,பெப்.4

மக்களுக்காக இரவு, பகல் என்று பாராது அர்ப்பணிப்புடன் சேவையாற்றுபவர்கள் மனிதநேயப் பணியாளர்கள். இவர்களே மக்களோடு மக்களாக நின்று மக்கள் பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பவர்களும் கூட. இவ்வாறு உயரிய பணியாற்றும் மனித நேயப் பணியாளர்கள் கடத்தப்படுவது கண்டிக்கப்படவேண்டியதும் எவ்வகையிலும் நியாயப்படுத்த முடியாததுமாகும்.

- இவ்வாறு தெரிவித்துள்ளது யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம்.

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் பணியாளர்கள் கடத்தப்பட்டதைக் கண்டித்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கை வருமாறு:-

ஈழத்தமிழர்கள் 1956ஆம் ஆண்டு இனக் கலவரம் தொடக்கம் பல இயற்கைப் பேரழிவுகள் மற்றும் ஆழிப் பேரலைப் பேரவலங்களால் சின்னாபின்னமாகி நிற்கிறார்கள்.

மக்களின் அடித்தளக் கட்டுமானங்கள் அதிர்வுக்கு உட்பட்டு "குடும்பம்" எனும் ஆணிவேர் ஆட்டங்கண்டு நிற்கிறது. ஆரோக்கியமான தேசத்தைக் கட்டியெழுப்புவதற்குப் பலகோடி பணமும் பல லட்சம் மனிதர்களும் தேவை. தேச வளத்தைக் கட்டியெழுப்ப பலர் ஒன்றிணைந்து செயலாற்ற வேண்டும். இதற்கான பெரும் முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும். பெரும் இலக்கை அடைவதற்காக அர்ப்பணிப்புடன் உழைத்தாகவேண்டும்.

நாமெல்லோரும் தேசத்தின் மீது பற்றும் மக்கள் மீது பிரியமும் கொண்டவர்களாக இருக்கவேண்டும். நலிந்து, நொந்து வேதனைக்குள் ஆட்பட்டிருக்கும் எம்மிடம்தான் அன்பு செலுத்தும் பண்பும், அணைத்து ஆறுதல் சொல்லும் பண்பும் இருக்கவேண்டும். பரஸ்பரம் புரிந்துகொண்டு செயற்படும் வலுவுள்ளவர்களாக இருந்து அழிவில் இருந்து மீளும் வழியைக் கண்டாகவேண்டும்.

ஆனால், இன்று எம்மத்தியில் எது நடக்கிறது? புரிந்துகொள்ளவே முடியவில்லை! தினமும் சாவுச் செய்திகளையும் படங்களையுமே காணமுடிகிறது. 'சா விளையும்' பூமியாக மாறிவிட்ட தேசத்தையா நாம் அடைய நினைத்தோம். செத்தது யார்? காணாமல் போனது யார்? சித்திரவதைப்பட்டது யார்? இடம்பெயர்ந்தது யார்? அழுது கண்ணீர் சிந்தியது யார்? ஒரு தமிழன், தெரிந்தவன், உறவுக்காரன், ஊரவன், எம் தேசத்தவன். ஏன் இவையெல்லாம் நடக்கின்றன? இதனால் எமது சமூகம் எதை அடைந்துவிடப்போகிறது? நாம் எல்லோருமே சற்று நிதானித்துச் சிந்தித்துச் செயற்படவேண்டும்.

**கையறு நிலையில் நாம்**

ஓர் ஆரோக்கியமான சமூக உருவாக்கத்திற்கு 'உயிரைச் சிதைப்பது' உதவுமா என்பதைச் சிந்தித்தாகவேண்டும். பயப்பீதியை ஏற்படுத்தி மனவடுவை உருவாக்குவதால் பண்பு நிறைந்த சமூகம் சிதைவடைவது தான் நடக்கும். வேண்டாத பல பண்புகள் நம் மத்தியில் வேகமாக வளர்ச்சியடைந்து வருவது கவலை தருகிறது. நாம் ஒவ்வொருவரும் தனித் தீவுகளாகிக் கையறு நிலையில் இருக்கிறோம்.

களவு, பழிவாங்கல், அச்சுறுத்தல், ஆள் கடத்தல் இத்தனையும் பார்த்து மௌனியாகி இருப்பதைத் தவிர வேறெதையும் செய்ய முடியவில்லையே? நமக்குள் இருப்பதை நாமே தீர்த்தாக வேண்டும். எதிரியிடம் இருந்து எம்மை மீட்பதற்கு முன் 'நாம் நம்மை மீட்பது' முக்கியம். ஒவ்வொரு தனி மனிதனிடமும் உருக்கமாய் வேண்டுவது, நல்லதொரு சமூக உருவாக்கத்திற்காக உழைத்திடுங்கள். மனித மாண்பை மதித்திடுங்கள்!

அண்மைக் காலங்களில் நடந்த பல சம்பவங்களில் நூற்றுக்கணக்கான எம்மவர்கள் மாண்டுபோயினர். மேலும் பலரைக் காணவில்லை. இவற்றிற்கெல்லாம் 'சமாதானப் பேச்சுகள்' தீர்வாக அமையப்போகிறது என்று ஏங்கி நிற்பவர்கள் நாங்கள். 'இயல்பு நிலை' தோன்ற வேண்டுமென்று நெஞ்சார வேண்டியவர்கள். அதற்கான வாய்ப்புகள் கைகூடியுள்ளதே என்று 'பெருமூச்சு' விடாதவர்களே இருக்கமுடியாது. அதற்கெல்லாம் இடிவிழுந்தால் போல் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் மனிதநேயப் பணியாளர்களின் கடத்தல் சம்பவச் செய்தி எமக்குக் கிடைக்கிறது.

ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளில் தான் மனிதநேயப் பணியாளர்களுக்கு அச்சுறுத்தல் நிலவுகிறது என்று கேள்விப்பட்டிருக்கிறோம்; வாசித்திருக்கிறோம். அதே போன்றதான நிலை எமது பிரதேசத்திலும் காணப்படுவது மனதைப் பிழிகிறது. மக்கள் பணியாளர்கள் எப்போதும் 'கண்மணிகளைப் போல்' பாதுகாக்கப்பட வேண்டியவர்கள். அவர்களுக்கு எந்த ஆபத்தும் ஏற்பட்டுவிடக்கூடாது. அவர்களுக்கு ஏற்படுகின்ற ஆபத்து நலிந்து, நொந்து போயுள்ள மக்களுக்கான ஆபத்து. இந்த ஆபத்தை, மனித நேயமற்ற செயலைக் கண்டித்தாக வேண்டும். அதேவேளை, மனித நேயப் பணியாளர்களை விடுவித்தாகவும் வேண்டும்.

### மனிதநேயப் பணியாளரின் பாதுகாப்பும் கேள்விக்குறி

மனிதநேயப் பணியாளர்கள் பத்துப் பேரின் விடுதலையில் தான் எமது மக்களின் சமூகப் பொருளாதார மீள் உருவாக்கல் பணிகள் தங்கியுள்ளன. எமது பிரதேசத்தின் புனர்வாழ்வுச் செயற்றிட்டங்களின் அநேகமானவை மனிதநேய அமைப்புகளின் செயல் திட்டங்களிலேயே தங்கியுள்ளன. அரசினால் மேற்கொள்ளப்படும் புனர்வாழ்வுச் செயற்றிட்டங்களுக்கும் அதிகமாக மனித நேய அமைப்புகளின் செயற்றிட்டங்களே காணப்படுகின்றன.

இவ்வாறான பணிகளில் ஈடுபடும் அமைப்புகளும் பணியாளர்களும் அதிர்ச்சிக்கு உள்ளாகியுள்ளார்கள். பயத்தில் உறைந்துபோயுள்ளார்கள். தமது பணிகளை எவ்வாறு தொடர்வது என்று சிந்திக்கிறார்கள். என்றுமில்லாதவாறு மனித நேயப் பணியாளர்களின் பாதுகாப்பு கேள்விக்குள்ளாகியிருக்கிறது.

மக்கள் பணி செய்பவனுக்குரிய பாதுகாப்பை, புறச்சூழலை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது ஒவ்வொருவரினதும் கடமை. அதனைச் சரிவரச் செய்தாக வேண்டும். தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணியாளர்களைக் கடத்தியவர்கள் அவர்களை விடுவித்து மனிதநேயப் பணிக்கு உதவிடவேண்டுமென்று விநயமாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

எதிர்காலச் சந்ததியின் வளமான வாழ்வுக்காக நாம் மீள உயிர்த்தாக வேண்டும். இந்த மீள் உயிர்ப்பு நடப்பதற்காக வேதனை மிகுந்த கண்டிப்புக்குரிய கடத்தல் நடவடிக்கையைக் கைவிடவேண்டுமென்று சம்பந்தப்பட்டவர்களைக் கேட்டுக்கொள்கின்றோம்.

சர்வதேசத்திடமும் இலங்கை அரசாங்கத்திடமும் மனித நேயப் பணியாளர்களை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை உடன் எடுக்கவேண்டுமென்று மக்கள் சார்பாகவும் சிவில் சமூக அமைப்புகள் சார்பாகவும் பகிரங்கவேண்டுகோளை விடுக்கின்றோம் - என்று அதில் உள்ளது. (எ)




வடமராட்சி லயன்ஸ் கழகம் நீரிழிவு நோய்க்கான இலவச இரத்தப் பரிசோதனை நிலையம் ஒன்றைப் பருத்தித்துறையில் அண்மையில் திறந்து வைத்தது.

இதுவில் லயன்ஸ்கழகத்தைச் சேர்ந்த டாக்டர் வி.யோகேஸ்வரன் நோயாளி ஒருவருக்கு இரத்தப் பரிசோதனை செய்வதைப் படத்தில் காணலாம். ஏனைய லயன்ஸ் கழக அங்கத்தவர்களும் அருகில் காணப்படுகின்றனர்.

(படம்: வடமராட்சிச் செய்தியாளர்)

# இன்றைய சூழலில் திணைக்கள அ.அட்டை வைத்திருப்பது அவசியம் என அறிவுறுத்து

## நல்லூர் கோட்ட அதிபர் கூட்டத்தில் கல்விப் பணிப்பாளர்

யாழ்ப்பாணத்தில் இன்று நிலவும் சூழ்நிலையில் ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் கல்வி சாரா ஊழியர்கள் அனைவரும் திணைக்கள அடையாள அட்டை வைத்திருக்கவேண்டியது மிகவும் அவசியம்.

யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் தி.செல்வரத்தினம், நல்லூர் கோட்ட அதிபர்கள் கலந்துகொண்ட கூட்டத்தில் இதனைத் தெரிவித்தார்.

நல்லூர்க் கல்விக் கோட்ட அதிபர்கள் கூட்டம் அண்மையில் யாழ். இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நல்லூர்க் கோட்டக் கல்விப் பணிப்பாளர் கே.வி.குணசேகரம் தலைமையில் நடைபெற்றது.

திணைக்களத் தேவைகளைப் பொறுத்து ஆசிரியர்கள் கல்வித் திணைக்களத்துக்கு வருவதைத் தவிர்த்துக்கொள்ளவேண்டும். ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்கள் தொடர்பான விடயங்களை அதிபர்களே செய்து கொடுக்கவேண்டும் என்று யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் தமது உரையில் மேலும் தெரிவித்தார். (எ-51)

# அரியாலையில் புதிதாகக் குடியமர்வோரின் விவரங்கள் படையினரால் சேகரிப்பு

கொழும்புத்துறை,பெப்.4

அரியாலை, கொழும்புத்துறைப் பகுதிகளில் புதிதாகக் குடியமர்வோர் பிறருடன் சேர்ந்து வசிப்போர் கல்விக்காகத் தங்கியிருப்போர் போன்றோரின் தகவல்களைப் படையினர் திரட்டி வருகின்றனர்.

வாரந்தோறும் கிராம அலுவலர்களிடம் சென்று பாதுகாப்புப் படையினர் இவ்வாறான தகவல்களைச் சேகரித்து வருகின்றனர்.

உயர்பாதுகாப்பு வலயத்தை அண்டிய கிராம அலுவலர் பிரிவுகளில் வசிக்கும் புதியவர்களின் விவரங்களைச் சேகரிப்பதனால் இப்பகுதிகளுக்கு மக்கள் வர அச்சம் தெரிவிக்கின்றனர். (எ-30)

# சாவகச்சேரி ஆஸ்பத்திரி வளாகத்தில் உள்ள படையினரை அகற்றக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.4

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையின் வளாகத்தில் நிலைகொண்டுள்ள படையினரை அங்கிருந்து அகற்ற நடவடிக்கை எடுக்குமாறு சாவகச்சேரி மாவட்ட வைத்திய அதிகாரி யாழ். அரச அதிபரை மகஜர் மூலம் கோரியுள்ளார்.

இந்த மகஜரில் அவர் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:-

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையின் சுற்றுப்புறத்திலும் வாயிலிலும் வைத்தியசாலையின் உட்புறச்சுவர் அருகிலும் இராணுவத்தினர் தங்கி நிற்பதனைத் தங்களது கவனத்துக்குக் கொண்டுவருகின்றேன்.

இதனால் நோயாளர்களும் மாவட்ட வைத்தியசாலையில் சேவைபுரியும் ஊழியர்களும் ஆஸ்பத்திரிக்கு வருவதில் பயப்படுகின்றனர். இந்தச் செயற்பாட்டினால் நாளாந்தக் கடமைகளை நிறைவேற்றிக்கொள்வதில் மிகுந்த அசௌகரியத்தை அனுபவிக்க வேண்டியுள்ளது.

எனவே, இதுவிடயத்தை விரைவில் இலங்கை இராணுவத்தின் தலைமைப் பீடத்திற்கு எடுத்துக்கூறி சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையின் சுற்றாடலில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினரை அங்கிருந்து அப்புறப்படுத்த விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம் - என்று அதில் உள்ளது. (எ-51)



வலிகாமம் வடக்கு, தெல்லிப்பழைப் பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த மூத்த ஓய்வூதியர்கள் மூவர் அண்மையில் கேடயங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். தெல்லிப்பழைப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற இது தொடர்பான நிகழ்வில் ஓய்வூதியர் சங்கத் தலைவர் உரை நிகழ்த்துவதையும் கௌரவிப்புப் பெற்ற ஓய்வூதியர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்: நேசன்)

# திருமறைக் கலாமன்ற கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,பெப்.4

திருமறைக் கலாமன்றத்தினரால் ஆரம்பிக்கப்பட்டுள்ள 'கலைத்தூது' அழகியல் கல்லூரிக்கு இரண்டாவது தொகுதி மாணவர்களை இணைத்துக்கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கான விண்ணப்பப்படிவங்களை மன்றத்தின் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். எதிர்வரும் 11ஆம் திகதி 'கலைத்தூது' அழகியல் விரிவுரைகள் வைபவ ரீதியாக ஆரம்பிக்கப்படவுள்ளன. (த-190)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள **Westing House - Large Size** குளிர் சாதனப்பெட்டி விற்பனைச்குண்டு. தொடர்பு: **T.P 222 5492, 222 6333** (அலுவலக நாள்களில்) (467 )

40....**xxxx** தொடர் இலக்கமுடைய நல்ல நிலையில் உள்ள கொழும்பு - யாழ்ப்பாணம் ஓடுகின்ற 350 கண்டர் வாகனம் (மர பொடியுடன் கூடியது) விற்பனைக்குண்டு. தொடர்பு: கரன், 89, சீனிவாசகம் வீதி, கொட்டடி. **T.P. 0777448091** (46310)

நெல்குற்றும் ஆலைக்குரிய அவியல் தொட்டி புதியது விற்பனைக்கு உண்டு. அத்துடன் அச்சகத்திற்குத் தேவையான புத்தகங்கள் பைண்டிங் செய்யும் வயரிங் மெசின் மின்சாரத்தில் இயங்கக்கூடியது விற்பனைக்கு உண்டு. தொடர்பு: **077- 6179047.** (46300)

சன்ரெல் தொலைபேசி, **P.IV** கொம்பியூட்டர் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: தாசன், 15/4, மத்தியூஸ் வீதி, 2ஆம் ஒழுங்கை, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். **T.P. 021 4590292, 077 9596675.** (46331)

## வீடுகள் விற்பனைக்கு

பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு, டிப்போவிற்கு அருகில் நவீன முறையில் புதிதாகக் கட்டப்பட்ட சகல வசதிகளுடன் அமைந்த வீடுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: **S.**கலைச்செல்வன், பலாலி றோட், இராமகிருஷ்ணா பாடசாலை வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். T.P.0773053063. (46076)

கோண்டாவில் கிழக்கு, பலாலி றோட்டிற்கு அருகில் புதிய வீடு 3 அறை, இணைந்த குளியலறை கொண்டது. முற்றிலும் (**Tiles**) பதிக்கப்பட்டது. சகல வசதிகளுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: **0773114791, 021 222 6379.** (46336)

## காணி விற்பனைக்கு

ஏழாலை தெற்கு, தோப்பில் எட்டுப் பரப்பு (8) காணி வான் பயிர்கள் வீட்டுடன் (வீட்டிற்கு பெறுமதி இல்லை) உடன் விற்பனைக்குண்டு. நியாயமான விலையில் பேசித் தீர்த்துக் கொள்ளலாம். விவரங்களுக்கு உடன் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி இல. **0777 316634, 077 3506451.**

(சி/47686)

## நாய்க்குட்டி விற்பனைக்கு

45 நாள்கள் நிரம்பிய அல்சேசன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. (பிறவுண், கறுப்பு) பூச்சி நீக்கப்பட்டது. தொடர்பு: P.கமலநாதன், கலையரசு வீதி, நவாலி தெற்கு, மானிப்பாய். (46333)

## வீடு வாடகைக்கு

கந்தர்மடத்தில் சகல வசதிகளும் உடைய (**Attached Bathroom**) வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு: **0776736871** (46332)

## வாகனங்கள் வாடகைக்கு

கார், வான், மோட்டார் சைக்கிள் என்பன **Self Drive** வாடகைக்கு வழங்கப்படும். அத்துடன், சாரதி அனுமதிப் பரீட்சைக்கான மோட்டார் சைக்கிள், திருமணக்கார் சேவைகளையும் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: 360, பிரதானவீதி (பஸ்தியன் சந்திக்கு அருகில்). **T.P.021 222 9154, 0777 593722 .**

(46335)

## தவறிவிட்டது

**Mr.S.** டஸ்சன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (851863850V) நாச்சிமார் கோயிலடியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு: சிவம், சபாபதி வீதி, கலட்டி, யாழ்ப்பாணம். (46338)

# கைதடி மத்தி மாணவருக்கு கற்றல் உபகரணங்கள்

கைதடி,பெப்.4

கைதடி மத்தி வளர்மதி கல்விக் கழகம் வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்களை வழங்க உள்ளது.

இதுதொடர்பான நிகழ்வு இன்று மாலை 5 மணிக்கு நிலைய முன்றிலில் வளர்மதி சனசமூக நிலையத் தலைவர் சி.கந்தசாமி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத் திட்ட இணைப்பாளர் தே.தேவானந்த் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

இன்றையதினம் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளதாகக் கூறப்பட்டது.

(எ-75)

## மணமக்கள் தேவை

ஆஸ்திரேலியாவில் பிரஜாவுரிமையுடைய 40 வயது எஞ்சினியருக்கு மணமகளும், 35 வயதுடைய **M.B.A.** பட்டதாரியும் கெமிக்கல் எஞ்சினியருமான மணமகளுக்கு மணமகனும் தேவை. விவரங்களுடன் தனித்தனி சாதகக்குறிப்பு அனுப்பவும். தகுதியுடைய, பொருத்தமானவர்கள் மட்டும் கடிதம் மூலம் தொடர்பு கொள்ளவும். தொடர்பிற்கு: ஸ்ரீலஸ்ரீ சு.சிவஷண்முகானந்தக்குருக்கள், கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை. **(46082)**

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்ப, 1977 ஆண்டு, நட்சத்திரம் பூரட்டாதி, கன்னியில் **MSC MIT** பெற்று பிரபல கொழும்பு நிறுவனத்தில் சிரேஷ்ட கணணி பொறியியலாளர் பதவி வகிப்பவருக்கு தகுந்த, நல்ல குடும்பத்தில் உள்ள, நற்குணமுள்ள, படித்த, அழகான பெண் தேவை. விளம்பர இல. 2798 மே/பா உதயன். (46308)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை தடுப்பு மருந்து போடப்பட்ட **Original Prima Broiler** குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் 06.02.2006 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை - நெல்லியடிக் கிளைகளிலும், சுட்டி பாம் - வட்டுக்கோட்டை, கரன் - ஆலடி, நல்லூர் பாம் சென்ரர் - 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (சி-47561)

## வகுப்புகள்

தமிழ்/ஆங்கில **Computer Typing**, தட்டெழுத்து, சுருக்கெழுத்து, **MS Office, Page Maker, Coreldraw, Photo- shop, Graphic Designing** தனிப்பட்ட கவனிப்பு. கற்கையை எக்காலத்திலும் ஆரம்பிக்கலாம். **STCA,** 149,(37), சிவன்பண்ணை, வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். (வைத்தீஸ்வராக் கல்லூரிக்கு அருகில்) (46305)




## கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூ.சங்கம், கரவெட்டி

வரையறுக்கப்பட்டது பதிவு இல.1553

### பகிரங்க அறிவித்தல் மூலம் கணக்குகளை உறுதிப்படுத்தலும் சீர்செய்தலும்

கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ.சங்கம் கணக்குப் புத்தகங்களில் நீண்டகாலமாக (10 வருடங்களுக்கு மேல்) கோரப்படாததும், விவரமற்றதுமான செல்மதி வருமதி மீதிகள் சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. மேற்படி வருமதி செல்மதிகளுடன் தொடர்புடையவர்கள் சங்கத்தில் எதிர்வரும் 2006 பெப்ரவரி 24ஆம் திகதிக்கு முன்னர் தொடர்பு கொள்ளவும். தொடர்புகொண்டு செல்மதி வருமதிகளை உறுதிப்படுத்தாத விடத்து இம் மீதிகளைச் சங்கப் புத்தகங்களில் சீர்செய்வதற்கு வேண்டிய தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை இதன் மூலம் அறியத்தருகின்றேன்.

- **பொதுமுகாமையாளர்.**

(சி/47664)(26-21.15.19

## 21 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 03 - 04 - 1920



மறைவு 04 - 02 - 1985

### அமரர் நாராயணசாமி இராமசாமி

*இருபத்தொரு ஆண்டுகள் பறந்தோடிப் போனாலும்*
*பசுமை நினைவுகள் மட்டும் மறையவே மாட்டாது*

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

கேதீஸ்வரன் ஸ்டோர்ஸ், 119, 39/2, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

ஆலங்கா மில்ச்சர், பலாலி வீதி, திருநெல்வேலி.

(46330)(26.19.21.45)

# திருமண வாழ்த்து

இறைவன் திருவருள் துணைகொண்டு இன்று 04.02.2006 சனிக்கிழமை திருமண பந்தத்தில் இணையும்




தம்பதியினரை பல்லாண்டுகாலம் சிறப்புடன் வாழ மனமார வாழத்துகின்றோம்.

வாணிரெக்ஸ் குடும்பத்தினர், யாழ்ப்பாணம், சாவகச்சேரி.

## இரத்த தானம்

யாழ்ப்பாணம்,பெப்.4

வண்ணை ஸ்ரீ காமாட்சி சனசமூக நிலையத்தில் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு இரத்த தான நிகழ்வு இடம் பெறவுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியின் அனுசரணையுடன் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் இரத்த தானம்செய்ய விரும்புவோர் இங்கு வருகைதந்து இரத்த தானம் செய்யமுடியும் என்று ஸ்ரீ காமாட்சி சனசமூக நிலையத்தினர் அறிவித்துள்ளனர்.

(எ-203)

## 58ஆவது பிறந்த நாள் வாழ்த்து



**லயன்**
**எஸ்.நித்தியானந்தன்**
J.P
(தலைவர், தீவக லயன்ஸ் கழகம் - ஊர்காவற்றுறை)
(உரிமையாளர் - நியூகல்யாணி ஜூவல்லர்ஸ்)

அகவை ஐம்பத்தெட்டில் அடியெடுத்து
வைக்கும் லயன் நித்தியானந்தனே!
தன்னலம் கருதா பெரியோனாக
தீவக லயன் தலைவராக
அவனியெலாம் போற்றவும்
வட பிரதேச இந்துப் பேரவையின் தலைவராகவும்
சமூக நலன் காக்க
அகில இலங்கை சமாதான நீதவானாகவும்
வாழ்வியல் பாதுகாப்பின் எயிட்ஸ், கான்சர் தடுப்புச்சங்க
உறுப்பினராகவும் இருந்து, தொண்டு பல புரிந்து
அக மகிழ்ந்து நாராயணன் அருளோடு
அகவை பல கண்டு நீடூழி வாழ்க! (46325)(21.19.45)

உறுப்பினர்கள்,
தீவக லயன்ஸ்கழகம் - ஊர்காவற்றுறை,
வடபிரதேச இந்துப் பேரவை, யாழ்ப்பாணம்.

## பாராட்டி வாழ்த்துகிறோம்

01.02.2006 புதன்கிழமை யாழ்.மாவட்ட சமாதான நீதவானாகப் பட்டம்பெற்ற
டாக்டர்
**திரு. கந்தையா நவரெத்தினம்**
J.P
(D.A.M & R.I.M.P (Cey.)
(நடன முருகன் வைத்திய நிலையம்)



அவர்களை நல்லவர் உள்ளம் போற்ற
நலம்பல பெற்று சேவையால் உயர்ந்து வாழ
வாழ்த்துகின்றோம்

திரு. திருமதி தில்லைநாதர்,
டாக்டர் க.சோதிதாசன்
குடும்பத்தினர்.

கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

(46296)(21.19.45)

## THE HALO TRUST — VACANCY: Post of Interpreter

- An Excellent Command in English. Sinhala and Tamil
- Healthy
- Must have a valid driving license
- Must be prepared to work unsupervised
- Previous experience required preferably with International NGO
- Must be prepared to work long hours in our Jaffna Office

The selected person should be prepared to visit Mine Fields, to carry on interpretaion work. on full time basis

Salary Negotiable

Please send your bio data with contact Telephone Nunbers withd in seven days

To
**The Programme Manager**
**The HALO Trust**
**655, Navalar Road,**
**Nallur, Jaffna** (46322)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழகத் தேர்தல் களம் சூடு பிடிக்கிறது!

# பிரதான கட்சிகளின் வாக்குகளை உடைக்கும் சக்தியாக விஜயகாந்!

சென்னை,பெப்.4

இம்முறை தமிழகத்தின் சட்ட சபைத் தேர்தலில் தி.மு.க. மற்றும் அ.தி.மு.கவின் வாக்குகளைப் பிரிக்கும் பிரதான சக்தியாக விஜயகாந் இருப்பார் என்று அரசியல் நிபுணர்கள் எடைபோட்டுள்ளனர்.

அதற்கேற்ப விஜயகாந்ந் தனது ரசிகர் படையை தேர்தல் பணிகளில் களமிறக்கியுள்ளார். விஜயகாந் குறித்து தி.மு.க.வினரோ, அ.தி.மு.கவினரோ வாய் திறக்காமல் இருந்தாலும் வாக்குகளைப் பிரிக்கும் முக்கிய சக்தியாக விஜயகாந்த் இருப்பார் என்பதில் இரு பிரதான கட்சிகளுக்குமே உள்ளூர ஜுரம் ஏற்பட்டுள்ளது.

இருப்பினும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் அந்தக் கட்சித் தொண்டர்கள் தேர்தல் பணிகளில் களமிறங்கிவிட்டனர்.

கடந்த சட்டசபைத் தேர்தலில் அ.தி.மு.க வேட்பாளர் மற்றும் தி.மு.க. வேட்பாளர் இடையேயான வாக்கு வித்தியாசம் வெறும் 3.5 சதவீதம் முதல் 4.5 சதவீதம் மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது.

அனுதாப அலை வீசும் காலங்களில் இந்த வாக்குகளின் எண்ணிக்கையில் மாற்றம் ஏற்படுவது வேறு விஷயம் அனுதாப அலை எதுவும் இல்லாத கால கட்டங்களில் வெற்றிக்கும் தோல்விக்கும் இடையே உள்ள வித்தியாசம் மிகக் குறைவாகவே இருந்து வந்துள்ளது. இந்த முறை நடைபெறவுள்ள சட்ட சபைத் தேர்தலிலும் இதே நிலை ஏற்படும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

சமீபத்தில் விஜயகாந்தின் 'கஜேந்திரா' திரைப்படத்தை வெளியிடவிடாமல் பா.ம.கவினர் தாக்குதல் நடத்திய சம்பவமும் அவரது அணுகுமுறைக்கான பின்னணி என்று கூறப்படுகிறது. தேர்தல் நேரத்தில் பா.ம.கவினருக்கும் பாடம் புகட்ட வேண்டும் என்று விஜயகாந் கங்கணம் கட்டிக்கொண்டு ரசிகர் படைகளை களமிறக்கியுள்ளார் என்றும் கூறப்படுகிறது.


திருச்சி வடக்கு, பெரம்பலூர், சேலம், தர்மபுரி வட ஆற்காடு, கடலூர், திண்டிவனம், திருவண்ணாமலை, செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூரில் வன்னியர் சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் பெரும்பான்மையாக உள்ளனர். இங்கு வன்னியர் சமுதாயத்தைச் சேர்ந்த இளைஞர்கள் பலர் விஜயகாந்தின் ரசிகர்களாக உள்ளனர். இந்தப் பகுதிகளில் தொகுதிக்கு 20முதல் 25 ஆயிரம் வாக்குகள் விஜயகாந்திற்கு ஆதர வாக விழும் என்று அவரது ரசிகர்கள் நடத்திய கணிப்பு தெரிவித்துள் ளது.

மாநிலம் முழுவதும் வன்னியர் அல்லாத தொகுதிகளிலும் இளைஞர்கள் மத்தியில் விஜயகாந்துக்கு செல்வாக்கு உள்ளது. வரும் சட்டசபைத் தேர்தலில் முதல் முறையாக வாக்குப் போட வரும் 18 வயது பூர்த்தி யடைந்துள்ள புதிய வாக்களார்கள் அனைவரும் அ.தி.மு.க., தி.மு.கவைவிட விஜயகாந்தையே விரும்புவார்கள் என்று தெரிகிறது.



விஜயகாந் தனித்து நின்று வாக்குகளைப் பிரித்தால் அது அ.தி.மு.க.விற்குச் சாதகமாக அமையும் என்று அதி.மு.க.மேலிடம் கணக்குப் போட்டுள் ளது. அதேநேரம் விஜயகாந்தும் அ.தி.மு.க.விற்கு ஆதரவாகப் பேசி வருகிறார். பொதுக் கூட்டங்களில் பேசும்போது விஜய காந்த் தி.மு.க.வினரை சரமாரியாகத் தாக்கி வருகிறார். ஆனால், அ.தி.மு.க.வினரைப் பற்றி விஜயகாந் செய்யும் விமர்சனம் குறைவு. இதனால் தேர்தலுக்குப் பிறகு விஜயகாந்தை தங்கள் பக்கம் இழுத்துவிடலாம் என்று அ.தி. மு.க. கணக்குப் போட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

தேர்தலில் நின்று எவ்வளவு சட்டசபைத் தொகுதிகளை விஜயகாந் பிடிப்பார் என் பதை விட வாக்குகளைப் பிரிக்கும் மிகப் பெரிய சக்தியாக விஜயகாந் இருப்பார் என்பதை அனைத்துத் தரப்பினரும் உறுதியாகக் கணிக்கின்றனர். (த)



சீனாவின் லியோனிங் மாநிலம் ஷென்யாங் பகுதியில் இருக்கும் உல்லாச பூங்கா ஒன்றில் பனியினால் அமைக்கப்பட்டிருக்கும் பிரமாண்டமான கோபுரத்தையே இங்கு காண்கிறீர்கள்.

உலக அரங்கில்

## சுயேச்சையாகக் களம் இறங்குகிறார் 'விடுதலைச் சிறுத்தைகள்' திருமாவளவன்

சென்னை,பெப்.4



சட்டப் பேரவைத் தேர்தலில் விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் சுயேச்சை சின்னத்தில் போட்டியிடுவார் என்று அதன் அமைப்பாளர் தொல். திருமாவளவன் வேலூரில் செய்தியாளர்களுக்கு தெரிவித்துள்ளார்.

தேர்தலில் பா.ம.க. உறவு பாதிக்காத வகையில் விடுதலைச் சிறுத்தைகள் கூட்டணி அமை யும். எங்கள் கட்சிக்கு தேர்தல் ஆணையக அங்கீகாரம் கிடைக்கும் வகையில் கூட்டணியில் சேருவோம். மூன்றாவது அணி அமைய வாய்ப்பில்லை. அவ்வாறு அணி அமைய விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பு முயற்சிக்காது. தமிழகத்தில் கூட்டணி ஆட்சி அமைய இரண்டு பெரிய திராவிடக் கட்சிகளுக்கும் பொருந்தன்மையான அணுகுமுறை இல்லை என்றும் திருமாவளவன் கூறினார். (த)

## இந்தியா - பாகிஸ்தான் கூட்டமைப்பு இன்னும் 50 ஆண்டுகளில் உருவாகும்!

### ஜனாதிபதி அப்துல் கலாம் நம்பிக்கை

சிங்கப்பூர்,பெப்.4

இன்னும் 50 ஆண்டுகளில் இந்தியா - பாகிஸ்தான் இடையே கூட்டமைப்பு போன்றதொரு சூழ்நிலை ஏற்படலாம் என இந்திய ஜனாதிபதி அப்துல் கலாம் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அப்துல் கலாம் சிங்கப்பூரில் உள்ள பாரதிய வித்யா பவன் சர்வதேச பள்ளி மாணவ மாணவிகளுடன் கலந்துரையாடலை மேற்கொண்டார். அப்போது ஒரு மாணவர் இந்தியா மற்றும் பாகிஸ்தான் நாடுகள் மீண்டும் ஒன்றிணையுமா என்ற கேள்வியை எழுப்பினார்.

அதற்குப் பதில் அளித்த அப்துல் கலாம் ஒரு காலத்தில்வல்லரசு நாடுகளாக திகழ்ந்த அணு ஆயுதங்களை வைத்துள்ள அமெரிக்காவும் ரஷ்யாவுமே இப்போது நட்பு நாடுகளாக உள்ளன.பிரிந்து இருந்த ஜேர்மனியின் இரண்டு பகுதிகளும் தற்போது ஒன்றாகிவிட்டன.அதுபோல் இன்னும் 50 ஆண்டுகளில் இந்தியா மற்றும் பாகிஸ்தான் இடையே கூட்டமைப்பு போன்றதொரு சூழ்நிலை ஏற்படலாம் இரு நாட்டு இளைஞர்கள் முயன்றால் கூட்டமைப்பு சாத்தியம். ஆனால், இரண்டு நாடுகளும் ஒருங்கிணையுமா என்பது சந்தேகம் என்றார்.

இந்தியா ஏன் அணு ஆயுதத்தை தயாரித்துள்ளது என்று மற்றுமொரு மாணவன் எழுப்பிய கேள்விக்கு ஜனாதிபதி அப்துல் கலாம் இந்தத் துணைக் கண்டத்தில் ஏற் கனவே சில நாடுகள் (சீனா, பாகிஸ்தான்) அணு ஆயுதங்களை வைத்துள்ளன. இந்தியா வின் மூன்றாயிரம் ஆண்டு கால வரலாற்றில் பல நாட்டு மன்னர்களின் படையெடுப்பும் நூற்றாண்டுக் கணக்கில் அவர்கள் இந்தியாவை அடிமைப்படுத்தி வந்ததும் உண்டு. இதனால் தான் இந்தியா அணு ஆயுதம் வைத்துள்ள நாடாக உருவெடுத்துள்ளது.

எனினும் முதலில் நாங்கள் அணு ஆயுதத்தை பயன்படுத்தமாட்டோம் என்ற வாக்குறுதியை இந்தியாஅளித்துள்ளது.மற்றநாடுகள்அணு ஆயுதத்தை கைவிட்டால் இந்தி யாவும் அந்தப் பாதையில் செல்லும் என்றார். (த)

## திருப்பதி ஏழுமலையானுக்கு சென்னையிலும் கோயில்!

சென்னை,பெப்.4

திருப்பதி ஏழுமலையானுக்கு சென்னையில் பிரமாண்டமான கோயில் எழுப் பப்பட -வுள்ளது. இதற்காக மகாவல்லிபுரம் சாலையில் பல ஏக்கர் நிலம் தெரிவு செய் யப்பட்டுள்ளது.

அரசு ஒப்புதலுக்காக தமிழக அரசிடம் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

அரசு ஒப்புதல் அளித்து வாஸ்து நிபுணர்களும் பார்வையிட்டு விட்டால் விரைவில் கட்டுமானப் பணிகள் தொடங்கும் என்று திருமலை திருப்பதி தேவஸ்தான வட்டாரங்கள் உறுதிப்படுத்தியுள்ளன.

இந்தக் கோயில் கட்டுமானப் பணிகளுக்காக 100 கோடி ரூபாய் திட்ட மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. வாஸ்து முறைப்படி பெரிய அளவில் இந்தக் கோயில் கட்டப்படும். ஒரே நேரத்தில் பல ஆயிரம் பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்யும் வகையில் சந்நிதானம் மிகப் பிரமாண்டமாகவும் அதி நவீன வசதிகளுடனும் அமைக்கப்படவுள்ளது. (த)




அணுசக்தி தொடர்பான சர்வதேச வாக்கெடுப்பு

## ஈரானுக்கு எதிராக வாக்களிக்குமாறு இந்தியாவைக் கோருகிறது அமெரிக்கா

வாஷிங்ரன்,பெப்.4

ஈரானின் அணுசக்தி ஆராய்ச்சித் திட்டம் தொடர்பாக சர்வதேச அணுசக்தி ஏஜென்ஸி கூட்டத்தில் வாக்கெடுப்பு நடக்கவுள்ளது. அதில் அமெரிக்காவுடன் சேர்ந்து ஈரானுக்கு எதிராக இந்தியா வாக்களிக்கவேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். அவ்வாறு வாக்களிக்குமாறு இந்தியாவை நாங்கள் ஊக்கிவிப்போம்.எனினும் அப் பிரச்சினையில் இறுதி முடிவு எடுப்பது இந்தியாவின் கையில் தான் உள்ளது என்று அமெரிக்கா கூறியுள்ளது.

அணு குண்டைத் தயாரிக்கும் முயற்சியில் ஈரான் ஈடுபட்டுள்ளது.அது தொடர்பான ஆராய்ச்சியில் அது ஈடுபட்டுள்ளது என்று அமெரிக்கா குற்றஞ்சாட்டுகிறது.

அத் திட்டங்களை ஈரான் கைவிட வேண்டும் இல்லையெனில் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலுக்கு அப் பிரச்சினையைக் கொண்டு சென்று ஈரானுக்கு எதிராக ஐ.நா. மூலம் தடைகள் விதிக்கப்பட வேண்டும் என்று அமெரிக்கா வலியுறுத்தி வருகிறது.

அணுமின் திட்டம் தொடர்பாக அமெரிக்காவுடன் இந்தியா தனியே உடன்பாடு செய்துகொண்டிருக்கிறது. அதன்படி அமெரிக்காவின் உதவிகள் இந்தியாவுக்குக் கிடைக்க வேண்டுமானால் ஈரானுக்கு எதிராக இந்தியா வாக்களிக்கவேண்டும் என்று அமெரிக்கா நிர்ப்பந்தம் கொடுத்துவருகிறது. அது இந்திய அரசியலில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில் ஈரான் தொடர்பான முக்கிய வாக்கெடுப்பு சர்வதேச அணுசக்தி ஏஜென்ஸியின் கூட்டத்தில் நடைபெறவுள்ளது.

இது குறித்து அமெரிக்கா அரசின் செய்தித் தொடர்பாளர் சீன் மெக்கர்மார்க் கூறியதாவது:-

செப்ரெம்பரில் நடந்த சர்வதேச அணுசக்தி ஏஜென்ஸி கூட்டத்தில் ஈரானுக்கு எதிராக இந்தியா வாக்களித்தது. தற்போது வாக்கெடுப்பில் வரும் தீர்மானத்திலும் ஈரானுக்கு எதிராக இந்தியா வாக்களிக்கவேண்டும் என அமெரிக்கா விரும்புகிறது. எனினும் இறையாண்மை உடைய நாடு இந்தியா.எனவே, அப்பிரச்சினையில் எப்படி வாக்களிக்க வேண்டும் என்பதை இந்திய அரசு தான் முடிவு செய்ய வேண்டும்- என்றார். (த)

## இந்தோனேஷியாவில் நிலநடுக்கம்

ஜகார்தா,பெப்.4

இந்தோனேஷியாவின் கிழக்குப்பகுதியில் கடந்த புதன்கிழமை நிலநடுக்கம் ஏற்பட்டது .ரிச்சர் அளவுமானியில் அது 5.2 அலகாகபதிவாகி இருந்தது.

உயிர் மற்றும் பொருள் சேதம்பற்றி உடனடியாகத் தகவல் இல்லை.இலங்கை நேரப்படி 7.40 மணிக்கு இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. (த)



சென்னை புற நகரில் உள்ள பஞ்செட்டி வேலம்மாள் மெட்ரிகுலேசன் பாடசாலையின் ஆண்டு விழாவில் விஷ்ணுப்பிரியா என்ற மாணவி தனது வயிற்றில் கயிறு கட்டி வான் ஒன்றை இழுத்துச் சென்று அனைவரையும் பிரமிக்க வைத்த காட்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானிப்பாயில் மருந்தகம் அமைக்க காணி எழுத்து மூலம் கையளிக்கப்பட்டது

குருநகர், பெப்.4

மானிப்பாய் மத்திய மருந்தகம் அமைப்பதற்கான காணியை மானிப்பாய் மத்திய மருந்தக மகப்பேற்றுச் சபை, யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்திடம் எழுத்துமூலம் ஒப்படைத்துள்ளது.

யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் இதனைத் தெரிவித்தார்.

காணி உறுதி ஒப்படைக்கப்பட்டதையடுத்து மத்திய மருந்தகம் அமைப்பதற்கான திட்ட முன்மொழிவு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் - அவர் கூறினார். (ஒ-51)

# கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் ஒருங்கிணைப்புக் கூட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.4

மாதகல் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் ஒருங்கிணைப்புக் கூட்டம் எதிர்வரும் திங்கட்கிழமை மாதகல் புனித தோமையர் மண்டபத்தில் முற்பகல் 10.30 மணியளவில் யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர்களின் சமாசங்களின் சம்மேளனத் தலைவர் என்.தவரட்ணம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இதில் கடற்றொழில் அதிகாரிகள், கடற்றொழிலாளர்களின் கூட்டுறவுத் தொழில் அதிகாரிகள் ஆகியோரைக் கலந்து கொள்ளுமாறு மாவட்டச் சம்மேளனம் கேட்டுள்ளது. (ஒ-14)


## Vacancy for immediate appointment

**Documentation officer,**

30 - 40 years old, with Degree in Human Rights Law or Diploma in Human Rights from open University.

**Main Activities**

- Leading and Motivating Groups
- Creating and developing a computer based Documenting System of Human Rights Violations
- Conducting and Organizing Seminars on Human Rights
- Conducting Field Interviews to collect data of the Human Rights Violation
- Scanning and Clipping News Paper Articles

**Extra requirements:**

- English
- Computer
- Working Experience in this field

**Salary:** Negotiable

Applications with telephone number until 10th of February, Interview: 13th of February.

**Centre for Peace & Reconciliation**
**8 Grousseault Road, Jaffna.**
**Tel./Fax 021 222 8131.**

(C/47692)



**FORUT** Compaign for Development & Solidarity

An organization promoting alcohol, drug and smoke free environment

## Vacancy - Documentation cum Field Coordinator

FORUT, an in international NGO Working in Sri Lanka since 1982, is inviting applications from qualified personnel to work with the poor and affected population to uplift their living status, by adopting participatory working methods. The candidate is expected to be a team worker, who could work with the project teams to increase the efficiency and effectiveness. The position primarily handles documentation work, and to some extent also field work! Priority is given to qualification background for documentation!

| | |
|---|---|
| **Minimum Requirements** | ◆ Graduate in English or excellent proven command of English and Tamil<br>◆ G.C.E (A/L/O/L) With 5/10 years NGO work in social mobilisation<br>◆ Excellent proven computer skills<br>◆ Ability to gather and transmit information and information management<br>◆ Valid mo-bike riding license<br>◆ Age 25 - 60 |
| **Tasks** | ◆ Networking, record keeping and data base management<br>◆ Produce monthly/quarterly/half yearly/annual reports<br>◆ Document workshops, seminars and reviews<br>◆ Capacity build CBOs /Partners and indentified vulnerable people with appropriate support |

Vacancy exists in Jaffna field Office in **Kayts**. Applicants should be prepared to devote time in field under difficult conditions.

Only short listed candidates will be called fo an interview.

Application should be forwarded to reach **Programme Manager, FORUT, 52, Temple Road, Jaffna** on or before **09 th February, 2006**

(C/47694)


## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி

## கேள்வி அறிவித்தல் - 2006

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையால் கீழ்க் குறிப்பிடப்படும் வேலைக்கான கேள்வி கோரப்படுகின்றது.

1. கேள்விப் பத்திரங்கள் 10.02.2006 ஆம் திகதி பி.ப.2 மணி வரை நிர்மாணிப் பயிற்சி நிறுவனத்தில் (இக்ராட்) பதிவு செய்யப்பட்டவர்கள் கீழ்க் குறிப்பிடப்பட்ட தொகையை செலுத்தி கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
2. கேள்விப் பத்திரத்தின் ஒரு பிரதியை கடித உறையிலிட்டு, அரக்கு முத்திரை வைத்து *செயலாளர், வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி* என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அல்லது தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியிலும் இரண்டாம் பிரதியை *பிராந்திய உள்ளூராட்சி உதவிஆணையாளர், யாழ்ப்பாணம்* என்ற முகவரிக்கும் 13.02.2006ஆம் திகதி மு.ப. 11 மணிக்கு முன்னதாகக் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும்.
3. கேள்விகள் 13.02.2006ஆம் திகதி பி.ப.2 மணிக்கு திறந்து பரிசீலிக்கப்படும். அச்சமயம் கேள்வி சமர்ப்பித்தவர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.
4. மேலதிக விவரங்களை வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

| வேலையின் பெயர் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் ரூபா | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் ரூபா | மீளளிக்கப்படாத பெறுமதி சேர்வரி ரூபா |
|---|---|---|---|
| 01. அல்வாய் தெற்கு அல்வாய்வடக்கு இணைப்பு வீதி அமைத்தலும், மதகு அமைத்தலும் | 10,000.00 | 1,000.00 | 150.00 |

திரு.சி.வே.குலநாயகம்,
செயலாளர்,
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி.
02.02.2006.

(சி/47693)(32-15-34)


# ஜயோதா

## உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 7409987 முதல் 7420220 வரை. சீட்டிழுப்பு இல. 208 திகதி 02-02-2006

## வெற்றி எண்கள்

**4 8 9 2 4 5** சுப்பர் எண் **15**

ஜக்பொட் பரிசு ரூ. **16,757,350/-** வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | 0 | 16,757,350/= | - |
| இடது பக்கமிருந்து முதல் 6 எண்கள் | 01 | 1,000,000/= | 1,000,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 5 எண்கள் | 09 | 50,000/= | 450,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 4 எண்கள் | 89 | 5,000/= | 445,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 3 எண்கள் | 889 | 500/= | 444,500/= |
| இடது பக்கமிருந்து முதல் 2 எண்கள் | 8897 | 50/= | 444,850/= |
| இடது பக்கமிருந்து முதல் 1 எண் | 88164 | 10/= | 881,640/= |
| வலது பக்கமிருந்து முதல் 5 எண்கள் | 09 | 5,000/= | 45,000/= |
| வலது பக்கமிருந்து முதல் 4 எண்கள் | 89 | 1,000/= | 89,000/= |
| வலது பக்கமிருந்து முதல் 3 எண்கள் | 886 | 100/= | 88,600/= |
| வலது பக்கமிருந்து முதல் 2 எண்கள் | 8814 | 20/= | 176,280/= |
| | | மொத்தம் ரூ. | **4,064,870/=** |
| மோட்டார் சைக்கிள்களின் பெறுமதி | 08 | 75,325/= | 602,600/= |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை **4,667,470/-**

ரூ. 75,325/- பெறுமதியான எட்டு மோட்டார் சைக்கிள்களை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| கேகாலை | 7417404-6-77 |
| அம்பாந்தோட்டை | 7413051-9-54 |
| கொழும்பு | 7419060-1-47 |
| குருணாகல் | 7411846-3-32 |
| கண்டி | 7415178-6-28 |
| இரத்தினபுரி | 7416345-7-39 |
| மாத்தளை | 7413456-9-84 |
| அம்பாறை | 7414238-6-53 |

எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட்

ரூ. **17,004,725/-**

தொடர் இல. 6497795 க்கு மேற்பட்ட மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2006 பெப்ரவரி 06 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை

33, சென் மைக்கல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.


## 31ஆம் நாள் நினைவஞ்சலி



செல்வி

**கோமதர்சினி பரமேஸ்வரன்**

(சிந்து)

(யா/ச/சிவப்பிரகாச மகா வித்தியாலய 2007 கலைப்பிரிவு மாணவி)

அன்னைமடியில்
1988-10-05

ஆண்டவன் அடியில்
2006-01-05

கல்விக் கடலுக்கு இன்று முப்பத்தோராம் நினைவு நாளாம்!
என்னென்று சிந்து முப்பத்தொரு நாள் - சென்றதம்மா!
சொந்தங்கள் கதறிஅழ பெற்றோர் பரிதவிக்க
அன்பு அக்காவும் தங்கையும் அழுது உருக்குலைய
உன் உடன் பிறவா அண்ணன் சோகத்தில் மூழ்கிடவே
உனது மாமன் புலம்பெயர் நாட்டில் நிழற்படப் பிரதியிலே
உன் படத்தைப் பார்த்துப் பார்த்து அழுதிடவே!
பள்ளிப்படிப்பு முடித்து பல்கலைக்கழகம் செல்வாயென
உன் பெற்றோரும் உறவுகளும் பெருமையுடன் பேசிடவே!
எம்மையெல்லாம் விட்டுவிட்டு எங்கம்மா சென்றுவிட்டாய்?
பூப்போன்ற உன் வதனத்தை எம் இதயத்தில் சுமக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

என்றும் உன் நினைவுடன்:
அன்பு அப்பா, அம்மா, அக்காமார், அண்ணன்மார், தங்கைமார், தம்பிமார், சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், மாமிமார், மச்சான், மச்சாள்மார், குட்டி மாமா குடும்பம் (U.K.).

நிரந்தர முகவரி:
நகுலேஸ்வரா வீதி,
கீரிமலை.

தற்காலிக முகவரி:
வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு.

(46352) (24-32-34-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓராண்டு நினைவஞ்சலி



மண்ணில் 07 - 12 - 1971

விண்ணில் 16 - 01 - 2005

**அமரர் கதிர்காமநாதன் ஆனந்தகுமரன்**


*(வெள்ளவத்தை - சூட்டி)*

திதி: ஷப்தமி — திகதி: 04.02.2006

*வாழ்க்கைப் பாதையிலே*
*தென்றல் வீசும் வேளையிலே*
*தென்றலே புயலாக மாறி வேரோடு*
*சாய்த்ததுவோ?*
*போய் வருகிறேன் என*
*சிரித்துக்கொண்டு சென்றாய்*
*இன்று ஒரு வருடமாகியும்*
*நீ வரவே இல்லையடா.*
*உன் வரவுக்காய் ஏங்கும்*
*உன் குடும்பத்தினர்.*

சிறுப்பிட்டி வடக்கு,
நீர்வேலி (புத்தூர்). (25-11-34) **-குடும்பத்தினர்.** (46337)(32)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 17 - 01 - 1949

இறப்பு 17 - 01 - 2005

**அமரர் ஆறுமுகம் மகாலிங்கம்**

***ஜேர்மனியில் அமரத்துவம் அடைந்த ஆறுமுகம் மகாலிங்கம் அவர்களின் ஓராண்டு நினைவில் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.***

குறிப்பு: அன்னாரின் நினைவாக இன்று 04.02.2006 திருநெல்வேலி பத்திரகாளி அம்மன் ஆலயத்தில் அன்னதானம் வழங்கப்படும். அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

காளி கோயிலடி,
திருநெல்வேலி. (46358) (25-11-34) **சகோதரர்கள்.**

## யா/யூனியன் கல்லூரி - தெல்லிப்பழை

*வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி - 2006*

**தலைவர்:** *திரு.சு.புண்ணியசீலன் (அதிபர்)*
**காலம்:** *05.02.2006 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி*
**இடம்:** *கல்லூரி மைதானம்*

*பிரதம விருந்தினர்:*
**திரு.க.நாகமணி**
**(முன்னாள் யாழ்.மாவட்ட உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர், வருகைதரு விரிவுரையாளர் - யாழ்.பல்கலைக்கழகம்)**
*சிறப்பு விருந்தினர்*
**திரு.ச.கைலாசநாதன்**
**(உதவிக் கல்விப் பணிப்பாளர், தெல்லிப்பழைக் கோட்டம்)**

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*
பழைய மாணவர்கள் இதனை தனிப்பட்ட அழைப்பாக கருதுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

*தெல்லிப்பழை.* **- யூனியன் கல்லூரிச் சமூகம்.** (46368) (25-11-34)

# மரண அறிவித்தல்

## திருமதி கணேசன் பத்மாவதி



புன்னாலைக்கட்டுவன்வடக்கைப் பிறப்பிடமாகவும் கல்வியங்காடு, ஆட்டுப்பட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட கணேசன் பத்மாவதிஅவர்கள் 02.02.2006 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகரத்தினம் கணேசனின் (விக்கினேஸ்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற தில்லையம்பலம் - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் கமலாவதி,லீலாவதி, சரஸ்வதி,பூவதி,புஸ்பவதி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் அருந்தவச்செல்வி (தவம்-ஜேர்மனி), பார்த்தீபன், சிசுபாலன் ஆகியோரின் பாசமிகு தாயும் அன்ரன் ரவீந்திரன்(அசோக்-ஜேர்மனி), பவானி, ரேவதி ஆகியோரின் அன்பு மாமியும் நிரோஜன், மாதுன்யா, லாவன்யா (ஜேர்மனி), ஆதித்தியன், சாருஜா, அபிராம், யதுர்ஷன், பானுச்ஷன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(04.02.2006) சனிக்கிழமை பிற்பகல் ஒருமணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று,பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*டச்சு றோட்,*
*கல்வியங்காடு.* (46340) (25-11-34) **பிள்ளைகள்,மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

# கூட்டம்

தென்மராட்சி கிழக்கு,பெப்.4

மாசேரி கிராம அபிவிருதிச் சங்கத்தின் கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு சங்க மண்டபத்தில் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. தென்மராட்சி பிரதேச கிராமிய அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம உத்தியோகத்தர் ஆகியோர் இதில் கலந்துகொள்ளவுள்ளனர் (ஓ-122)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி நாகலிங்கம் தங்கச்சியம்மா

நயினாதீவு,5ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த நாகலிங்கம் தங்கச்சியம்மா அவர்கள் 03.02.2006 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-செல்லாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான முத்தர் தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற முத்தர் நாகலிங்கத்தின் அன்பு மனைவியும் கமலாம்பிகை, சாம்பசிவம், சிவக்கொழுந்து, சிவப்பிரகாசம், சிவபாக்கியம் ஆகியோரின் பாசமிகு தாயும் காலஞ்சென்றவர்களான நவரெத்தினம், இராசபூரணி மற்றும் நடராசா,சோமசுந்தரம், விஜயகுமாரி ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.02.2006) சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு நயினாதீவிலுள்ள சல்லிப் பரவை மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*5ஆம் வட்டாரம்,*
*நயினாதீவு.* (46360) **நா.சாம்பசிவம் (மகன்).** (25-11-34)

## அருட்திரு. S.N.அருள்நேசன் (அ.ம.தி)

சில்லாலைப் பங்கிலே பிறந்து, அமலமரித்தியாகிகள் சபையிலே சேர்ந்து குருவாக அரும்பணியாற்றிய அருட்திரு. S.N.அருள்நேசன் (அ.ம.தி) அவர்கள் நேற்று (03.02.2006) வெள்ளிக்கிழமை கொழும்பில் தனது 93ஆவது வயதில் காலமானார்.

அருட்திரு S.N.அருள்நேசன் (அ.ம.தி) அடிகள் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி, யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரிகளின் அதிபராகவும், கண்டி அமலமரித்தியாகிகளின் பெரிய குருமட அதிபராகவும், இந்திய அமலமரித்தியாகிகளின் உருவாக்குநராகவும் அரும்பணியாற்றினார்.

அதைத்தொடர்ந்து 20 வருடங்களாக அபுதாபியிலே ஆயர் பேனாட் கிறமொலி ஆண்டகை அவர்களின் செயலாளராகவும் பணியாற்றினார்.

அருட்தந்தையின் நல்லடக்கம் எதிர்வரும் திங்கட்கிழமை (06.02.2006) அன்று மருதானை புனித பத்திமா அன்னையின் ஆலயத்தில் ஆன்ம இளைப்பாற்றி திருப்பலியின் பின்னர் கனத்தை மயானத்தில் இடம்பெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

தகவல்:
**அருட்திரு. S.M.செல்வரட்ணம் (அ.ம.தி)**
*அமலமரித்தியாகிகள் மகாண முதல்வர், யாழ்ப்பாணம்.* (46375) (25-11-34)















# மரண அறிவித்தல்கள்

## சுப்பிரமணியம் கிருஷ்ணமூர்த்தி



மாதகல் கிழக்கைப் பிறப்பிடமாகவும் மாதகல், நாவலர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் நேற்று (03.02.2006) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் தம்பதியரின் புதல்வனும் காலஞ்சென்ற சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகனும் சாரதாவின் ஆருயிர்க் கணவனும் சிவதர்சினி, தர்மரூபன், பத்மரூபன், சிவறாஜினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் வேதநாயகம் (கனடா), சோமசுந்தரம் (மன்னார்), மகாலட்சுமி (லண்டன்), பரமேஸ்வரி, யோகேஸ்வரி, வசந்தகுமாரி (லண்டன்) ஆகியோரின் சகோதரனும் கிருஸ்ணராஜா, லீலாவதி, பாலசுப்பிரமணியம் (இத்தாலி), பாலன் (கனடா), இராஜகுமாரி (இத்தாலி), புவனா (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.02.2006) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக காலை 9 மணியளவில் மாதகல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*நாவலர் வீதி,*
*மாதகல்.* (46354) (25-11-34) **மனைவி, பிள்ளைகள்.**

## இராசையா செல்வத்துரை (R.M.P)

காரைநகரைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட இராசையா செல்வத்துரை 03.02.2006 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மலேயன் பென்சனியர் இராசையா-சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற திரு.திருமதி க.கு.கந்தையாபிள்ளையின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற வாலாம்பிகையின் அன்புக் கணவரும், இரத்தினராசா, பத்மராணி (இந்தியா), வரலட்சுமி (U.K.), இராசலட்சுமி, விக்கினேஸ்வரன் (M.P.C.S., யாழ்.), நாகேஸ்வரன் (U.K.) ஆகியோரின் தந்தையும் பொன்னம்பலம், காலஞ்சென்றவர்களான கமலாம்பிகை, மகாதேவன் ஆகியோரின் சகோதரரும் இராசபூபதி, நடராசா (S.V.M), பாலசுந்தரம் (U.K.), அருந்தவச்செல்வி (இருபாலை), கணேசமூர்த்தி (அச்சுவேலி) ஆகியோரின் மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (03.02.2006) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றது.

தகவல்:
*புதுறோட்,*
*காரைநகர்.* (46355) (25-11-34) **பிள்ளைகள்.**

## பொன்னையா அப்பாக்குட்டி

ஏழாலை வடக்கு, ஏழாலையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா அப்பாக்குட்டி 31.01.2006 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா - பொன்னு தம்பதியரின் அன்பு மகனும் செல்லையா - சோதிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகனும் காலஞ்சென்ற செல்வரத்தினத்தின் அன்புக் கணவரும் அற்புத செல்வராணி (நீர்கொழும்பு), அற்புதசெல்வராஜா (கனடா), அற்புதசெல்வநாயகம் (ஏழாலை), அற்புதசெல்வநாயகி (ஜேர்மனி) காலஞ்சென்ற ஞானரூபன், மோகனரூபன் (கனடா), ஞானரூபி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற பத்மநாதன், தனலட்சுமி (கனடா), றஞ்சிதமலர் (ஏழாலை), செல்வலிங்கம் (ஜேர்மனி), லதா (கனடா), றஞ்சினி (கனடா), ராஜேந்திரம் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனுளம் காலஞ்சென்ற ரத்தினம், காலஞ்சென்ற சற்குணம் இராசையா (ஏழாலை), காலஞ்சென்ற இராமலிங்கம், காலஞ்சென்ற மார்க்கண்டு நாகம்மா (ஏழாலை), ஞானம்மா (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் பத்மராதிகா (நீர்கொழும்பு), சுகந்தன் (பிரான்ஸ்) காலஞ்சென்ற பத்மதர்ஷிகா, சகானா (கனடா), தனேஷ் (கனடா), ஜெனோஷன் (ஏழாலை), ஜெஷிந்தன் (ஏழாலை), ஜெபராஜிதன் (ஏழாலை), ஜெனா (ஜேர்மனி), ஜெனிஷா (ஜேர்மனி), சஜிந்தா (கனடா), துஷிக்கா (கனடா), மிதுலா (கனடா), அனுஷன் (கனடா), கவின் (கனடா), சஜீத் (கனடா), நிரோஸ் (கனடா), மேனுஷா (கனடா), சனோஷன் (கனடா) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.02.2006) சனிக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**- குடும்பத்தினர்.**

தகவல்:
**பேரன் ப.சுகந்தன் (பிரான்ஸ்),**
**பேர்த்தி ப.ராதிகா (நீர்கொழும்பு),**
**பேரன் அ.ஜெனோஷன் (ஏழாலை).** (சி-47698) (25-11-34)

## முத்துராசா மகேஸ்வரி



உரும்பிராயைப் பிறப்பிடமாகவும், பாரதி வீதி, நாயன்மார்கட்டை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துராசா மகேஸ்வரி அவர்கள் 02.02.2006 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் மார்க்கண்டு மூத்துராசாவின் அன்பு மனைவியும், அகிலன் (சுதன்), நிர்மலன் (பிலிப்பு), வக்சலா ஆகியோரின் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.02.2006) சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*பாரதி வீதி,*
*நாயன்மார்கட்டு.* (46357) (25-11-34) **குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒட்டுக்குழுக்களை விரட்டப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வில் இடம்பெற இருப்பது படைத்தரப்பினர் களது நெருக்குவாரங்களை நிறுத்தும் என தமிழ் மக்கள் எதிர்பார்த்தனர். இந்த எதிர்பார்ப்புக்கு மதிப்பளிக்கும் வகையிலேயே ஸ்ரீலங்காப் படையினருக்கு எதிரான எமது தாக்குதல் களை நிறுத்தியிருந்தோம். சிங்களப் பேரின மானது எவ்வகையிலும் இதயசுத்தியுடன் பேச்சுவார்த்தைக்கான சுமுகமான பின்புலனை உருவாக்குமா? அல்லது தமிழ் மக்கள் மீதான நெருக்குவாரங்களை அதிகரிக்குமா? என்ற ஐயம் எழவே செய்தது. என்றாலும், எமது நல்லெண்ண வெளிப்பாட்டிற்கு ஸ்ரீலங்கா படைத்தரப்போ அல்லது ஈ.பி.டி.பி. உட்பட்ட துணை இராணுவக் குழுக்களோ எவ்வித நல்லெண்ணப் பிரதிபலிப்புக்களையும் மேற் கொள்ளவில்லை.

சிங்களப் பேரினவாத அரசியலாளர் இரா ணுவ நிலைப்பட்ட தங்கள் சிங்கள மேலா திக்கவாதத்திலிருந்து விடுபட்டு ஆக்கபூர்வ மான-முற்போக்கான-போர்நிறுத்த செயற் பாடுகளை எடுப்பதற்கு சிறிதளவும் கூட முயலவில்லை. மாறாக கால இழுத்தடிப்புகள், கபடத்தனமான சொற்சிலம்பாட்டம் கொண்ட நம்பகத்தன்மையற்ற அறிக்கைகளை அள்ளித் தெளித்துக் கொண்டு இராணுவ நெருக்குவாரங் களை மிக இறுக்கமாக அதிகரித்துவருகின்ற னர். உக்கிரமடைந்துவரும் நேருக்குவாரங்க ளால் தமிழ் மக்களது எதிர்பார்ப்புகள் கானல் நிராகிவிட்டன.

சுற்றிவளைப்புக்கள், தேடுதல்கள், அப் பாவிமக்கள், தொண்டர்சேவை நிறுவன உறுப்பினர்கள் கடத்தல்கள், காணாமற்போதல் கள், அப்பாவிகள் மீதான தாக்குதல்கள். பெண் களை அவமானப்படுத்துதல் என அச்சுறுத் தல்களும் வன்முறைகளும் தடையற்ற அன்றாட நிகழ்வுகளாகிவிட்டன. மானிப்பாய், ஊரெழு படைமுகாம்களில் பெண்களது அவலக் கதறல்கள் இரவுகளில் கேட்கின்றன. கைது செய்யப்படுவோர் சித்திரவதைக் கூடங் களுக்கு இழுத்துச் செல்லப்பட்டு உள்ளமும், உட லும் தெறிபட வதைபடுகின்றனர். மனித உரிமைகள் சித்திரவதைக்கூட சுவர்களில் மோதப்பட்டு உதிரம் கக்கி பலியாகின்றது. மனித உரிமைகள் முற்றாக மறுக்கப்பட்டு அரசியல் அபிலாசைகள், வாழ்வுரிமைகள் காலில் மிதிபடும் பொழுது அமைதியும், நிம்ம தியும் தூரத்தே விலகிப்போய்விடுகின்றன.

இனியும் கைகட்டி, மௌனித்து நாம் நிற் கப் போவதில்லை. தமிழர்களுக்கு முன்னால் இப்போது ஒரேயொரு தெரிவுதான் உள்ளது. அது தற்காத்துக்கொள்ளுதல் எனும் மறுக்க முடியாத - மனித உரிமைகள் பாற்பட்ட - தெரி வேயாகும்.

ஸ்ரீலங்காப் பேரினவாதத்தின் முன்கூட்டிய நயவஞ்சகத் திட்டமிடலுடன், ஸ்ரீலங்காப் படைத்தரப்பினது பாதுகாப்புக் குடைக்குள் பதுங்கியிருந்து கோழைத்தனமான தமிழ் மக்கள் விரோத கொடூரங்களை இழைக்கும் ஈ.பி.டி.பி. உட்பட துணை இராணுவ ஒட்டுக் குழுக்களை எமது மண்ணிலிருந்து உடனடி யாக அகற்றுவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளோம்.

மனிதத்தின்மீது கொண்டுள்ள அக்கறை யின் பேரால் இலங்கைத் தீவில் சமாதானத்தை விதைத்துவிட ஆர்வமுடன் முயலும் சர்வதேச சமூகத்தின் எண்ணங்களைத் தூக்கியெறிந்தும், விடுதலைப் புலிகளின் பேச்சுக்கான சமிக்ஞை களை அவகௌரவப்படுத்தி நிற்கும் ஸ்ரீலங் காப் படைகளும், அவர்களின் பாதுகாப்புடன் மனிதத்துக்கு எதிரான தமது நடவடிக்கையை நிகழ்ச்சி நிரலாகக்கொண்டுள்ள ஈ.பி.டி.பி. உட்பட துணை இராணுவக்குழுக்களையும் எமது மண்ணில் இருந்து வெளியேற்றியே தீருவோம். நாளாந்தம் எமது மக்கள் கொல் லப்படுவதையும், பாதிக்கப்படுவதையும் பார்த்துக்கொண்டிருக்க முடியாது - ஆகவே, நாம் தொடர்ந்தும் பொறுமைகாப்பது சாத்திய மற்றது. எனவே சர்வதேச சமூகத்திடமும், விடுதலைப் புலிகளிடமும் எம்மை மன்னிக்க வேண்டுகின்றோம். எமது அன்புக்கினிய யாழ். குடாநாட்டு உறவுகளே!

தொடரும் இராணுவத்தினருக்கும், துணைக் குழுக்களுக்கும் எதிராக நாங்கள் எடுக்கப் போகும் நடவடிக்கைகளுக்கு பூரண பங்களிப்பு வழங்கும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-12-190)

# விடுவிக்கப்பட்ட பெண்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுமுன்தினம் பிற்பகல் புனர்வாழ்வுக் கழக அதிகாரிகள், சட்டத்தரணிகள் சகிதம் இந்த இருமுன்பள்ளி ஆசிரியைகளும் மட் டக்களப்பு பொலீஸ் நிலையத்தில் ஆஜராகினர்.

அன்றையதினம் மாலைவரை குற்றப் புலனாய்வுப் பொலீஸார் இந்த இருவரின் வாக்குமூலங்களையும் பதிவுசெய்தனர்.

வாக்குமூலம் பதிவுசெய்த பின்னர் இவர் கள் இருவரையும் வீடுசெல்ல பொலீஸார் அனுமதிக்கவில்லை.

மேலும் சில புலனாய்வாளர்கள் விசாரிக்க இருப்பதாகக் கூறி பொலீஸ் நிலையத்திலேயே இவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். இவர்கள் இருவரையும் பொலீஸ் நிலையத் துக்கு அழைத்துவந்த தமிழர் புனர்வாழ்வுக் கழக அதிகாரிகள் மற்றும் சட்டத்தரணிகளை பொலீஸார் திருப்பி அனுப்பியிருந்தனர். நேற்று அதிகாலை 3 மணியளவில் பொலீஸ் உயர் அதிகாரிகள் சிலர் வந்து இவர்கள் இருவரையும் விசாரணை செய்தனர். அப் போது இவர்கள் மிரட்டப்பட்டு ஏற்கனவே இவர்கள் கொடுத்த வாக்குமூலங்களில் திருத் தம் செய்யப்பட்டு கையொப்பம் பெறப்பட் டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பின்பு மட்டக்களப்பு வைத்தியசாலைக் குப் பொலீஸாரினால் கொண்டுசெல்லப்பட்டு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபின் நேற் றுப்பகல் மட்டக்களப்பு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டனர்.

தமது பெண் பணியாளர்கள் இருவர் இர விரவாகப் பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது குறித்தும், அவர்களிட மிருந்து மீண்டும் வாக்குமூலம் பெறப்பட் டமை குறித்தும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் விசனம் தெரிவித்துள்ளது.

இந்த இருவரும் இன்று கொழும்பில் பத் திரிகையாளர் மாநாடு ஒன்றில் தோற்றலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(ஐ-க-12)

# அரசு - புலிகள்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திகதிகள்) பிரேரிக்கப்பட்டிருக்கின்றன என் பது உண்மைதான். ஆனால், அந்தத் திகதி எதையும் எமது தரப்பு (புலிகள் தரப்பு) இன் னும் ஏற்கவோ, உறுதிப்படுத்தவோ இல்லை. அரச புலனாய்வுத்துறையின் வழி காட்டலில் இயங்கும் கருணா குழுவினரால் கடத்தப்பட் டிருக்கும் எட்டு சமூக சேவையாளர்களையும் விடுவிப்பதற்கு ஆக்கபூர்வமான நடவ டிக்கை ஏதும் எடுக்கப்படாத நிலையில் பேச் சுக்கான திகதி குறித்து ஆராய்வதோ, தீர்மா னிப்பதோ சாத்தியம் அல்ல'' - என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இதேவேளை -

இது தொடர்பாக விடுதலைப் புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் கூறியதாவது:-

எங்களது அரசியல் ஆலோசகரும் எமது பேச்சுக்குழுவிற்குத் தலைமை வகிப்பவரு மான அன்ரன் பாலசிங்கம், அனுசரணையா ளர்களுடன் இது தொடர்பாக நாளாந்தம் பேசி வருகின்றார். ஆனால், பேச்சுக்கான நாள் இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை.

சிறீலங்கா இராணுவ ஆக்கிரமிப்பி லுள்ள தமிழர் தாயகத்தில் தேடுதல்களும் சுற்றிவளைப்புக்களும் தொடர்கின்றன. மக்கள் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு வருகின்றனர்.

இன்று (வெள்ளி) கூட அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் நடத்திய மக்கள்மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. பேச்சு களுக்கான இயல்பு நிலைமையை உரு வாக்க வேண்டும் என்று நாங்கள் கோரியிருந் தோம். நிலைமை இன்னமும் அப் படி யேதான் இருக்கின் றது என்றார், புலித் தேவன். (ஐ-க-12)

காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ளுங்கள்
4ஆம் பக்கம் பார்க்க

# அம்பாறையில் ஹர்த்தால்.. ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகுதியில் வைத்து அரச படையினருடன் சேர்ந்தியங்கும் ஒட்டுப்படையினரால் கடத் தப்பட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பணியாளர்களை விடுவிக்கக்கோரி ஆலை யடிவேம்பு, திருக்கோவில், தம்பிலுவில் ஆகிய பகுதிகளில் நேற்று முழு அளவிலான ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

அச்சமயம் திருக்கோவில் பிரதான வீதி யின் ஊடாக விசேட அதிரடிப்படையினர் சைக்கிள்களிலும், டிராக்டர்களிலும் வந்தனர். வீதிக்குக் குறுக்கே தென்னங்குற்றிகள் போடப் பட்ட வீதித்தடைகளை அகற்ற விசேட அதிர டிப்படையினர் முற்பட்டுள்ளனர்.

வீதியில்நின்ற மற்றும் வீதியால் வந்த பொது மக்களைப் பிடித்து, அவர்களின் உதவி யுடன் வீதித்தடைகளை அகற்றமுற்பட்டனர். ஆனால், மக்கள் முடியாது எனக்கூறி இடத் தைவிட்டு அகலமுற்பட்டபோது அவர்களை நோக்கி அதிரடிப்படையினர் துப்பாக்கிப் பிர யோகம் செய்தனர்.

இதனால், சிலருக்குச் சிறுசிறு காயங்கள் ஏற்பட்டுள்ளன. அதேவேளை, துப்பாக்கிச் சூட்டுக்குப் பயந்து ஓடிய பொதுமக்களில் சிலர் இடறிவீழ்ந்ததாலும் அவர்களின் சைக் கிள்கள் ஒன்றோடொன்று மோதியதாலும் மக்களுக்குக் காயங்கள் ஏற்பட்டன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

சுமார் அரைமணிநேரம் அதிரடிப்படை யினரின் அட்டகாசம் நிலைத்து நின்றது. அதன் பின் அவர்கள் வீதித்தடைகளை அகற்றாமல் ஒருவாறு அவற்றைக் கடந்து சென்றுவிட்ட னர்.

இந்த ஹர்த்தால் காரணமாக அக்கரைப்பற் றில் பல தமிழ்ப்பிரதேசங்களின் செயற்பாடு கள் முடங்கின. தனியார் வர்த்தக நிலையங் கள் மற்றும் அரச நிறுவனங்கள் முற்றாக இயங்கவில்லை. போக்குவரத்தும் முற்றாகத் தடைப்பட்டது.

வீதி எங்கிலும் தென்னங்குற்றிகள் போடப் பட்டும், ரயர்கள் போட்டு எரிக்கப்பட்டும் வீதித்தடைகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

கடத்தப்பட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழ கப் பணியாளர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கக் கோரி அம்பாறை மாவட்டத்தில் உள்ள பல அமைப்புகள் ஜனாதிபதி ராஜபக்ஷ வுக்கும், செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மற் றும் மனித உரிமை ஆணைக்குழு போன்ற வற்றுக்கும் மகஜர்களை அனுப்பிவைத்துள் ளனர். (ஐ-க-12)

# கடத்தப்பட்டோரில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியான மட்டக்களப்பு செங்கலடியில் உள்ள உற வினர்களிடம் சென்று சேர்ந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடத்தப்பட்டவர்களில் இரண்டு பெண் கள் ஏற்கனவே விடுவிக்கப்பட்டிருந்தனர். இவர் மூன்றாவது நபர் ஆவார். ஏனைய ஏழு பேரினதும் கதி தெரியவில்லை.

(ஐ-12)

# உள்ளூராட்சித் தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதி மக்கள் வாக் களிப்பதற்காக கொத்தணி வாக்குச்சாவடிகளை நிறுவுவது தொடர்பாகவும் இம்மாநாட்டில் விவாதிக்கப்படவுள்ளன.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை எதிர் வரும் மார்ச் மாதத்தில நடத்துவதற்கான ஏற் பாடுகளைத் தேர்தல் செயலகம் மேற்கொண் டுள்ளது. வாக்காளர்களுக்கான வாக்காளர் அட்டைகள் யாவும் ஏற்கனவே சம்பந் தப் பட்ட மாவட்ட செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளன.

இம்மாதம் 9ஆம் திகதி தொடக்கம் 16 ஆம் திகதி வரை வேட்பு மனுக்கள் ஏற் றுக்கொள்ளப் பட வுள்ளன. 15 ஆம் திகதி நண் பகல் 12 மவரை சுயேச்சைக் குழுவினர் தமது கட் டுப் பணத் தைச் செலுத்த முடி யும். தபால்மூலம் வாக் களிப்பதற்காக இம் மாதம் 6 ஆம் திகதி வரை விண்ணப் பிக்க முடியும் என்று தேர்தல்கள் செய லகம் அறிவித்துள் ளது. (ஐ-க)

# செங்கடலில் பயணிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாலை சவூதி அரேபியாவின் டுபா துறைமுகத்தில் இருந்து எகிப்தின் சபரா நோக்கி 1,400 பயணிகளுடன் புறப்பட்டுச் சென்றது.

அது புறப்பட்டு 100 கிலோ மீற்றர் தூரம் பயணம்செய்த நிலையில் மோசமான வானிலை காரணமாக அது விபத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதில் கடலில் மூழ்கி ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது. பல சடலங்களை மீட்புக் குழுவினர் மீட்டுள்ளனர். பல சடலங்கள் கடலில் மிதந்து வருவதாக மீட்புப் பணியாளர்கள் தெரிவிக்கின்றனர். இதில் பெரும்பாலானோர் எகிப்தைச் சேர்ந்தவர் கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சவூதியில் தொழிலாளர்களாகப் பணிபுரிந்த வர்களும், மக்காவுக்கு புனித பயணம் மேற் கொண்டவர்களுமே இந்தக் கப்பலில் பய ணித்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மீட்பு அணிகள் விரைந்துள்ளன என அதி காரிகள் தெரிவித்தனர்.

இந்தக் கப்பல் 30 வருடங்கள் பழைமையான தாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-12)

# மரண அறிவித்தல்கள்

## வைத்திலிங்கம் பரராஜசிங்கம்

(பிரதம பரிசோதகர், யாழ். தபால் திணைக்களம்I.P.R.)



யாழ். கச்சேரியைப் பிறப்பிடமாகவும் மின் சார நிலைய வீதியை வசிப்பிடமாகவும் தற் போது உரும்பிராய் தெற்கில் வசித்தவரு மான வைத்திலிங்கம் பரராஜசிங்கம் அவர் கள் 02.02.2006 வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி வைத்திலிங்கம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சிவக்கொழுந்தின் அன்புக் கணவ ரும் ருக்குமணியின் சகோதரனும் காலஞ்சென்ற இந்திரரூப சிங்கம் மற்றும் கமலவேணி (திருகோணமலை), மகேந்திரா, பவளராணி (யாழ்ப்பாணம்), கமலாம்பிகை (ஜேர்மனி) ஆகி யோரின் தந்தையும் சந்திரபோஸ்,சந்திரா, தேவகி, பத்மரூபன் ஆகியோரின் மாமனும் பிரசாந்த், சுபானி, ருஜானி, துஜாந்தி, சத்தியேந்திரா, யுகேந்திரா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.02.2006) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வேம்பன் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.* (46366) (54-11-34) தகவல்: மகேந்திரா (மகன்).

## ஐயன் கந்தசாமி (ராசு)



கோண்டாவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஐயன் கந்தசாமி (ராசு) அவர்கள் 01.02.2006 அன்று காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயன்-வள்ளி தம்பதியரின் அன்பு மகனும் தேவியின் அன்புக் கணவரும் நடேசன், நாகரத்தினம், காலஞ் சென்றவர்களான பாக்கியம், மயில்வாகனம், சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதர ரும் மோகனசேகரம், கோடீஸ்வரன், சுபாசினி, சாந்தினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் லூஆனந், டென்சியா, றமேஸ்வரன், மனோ ஆகியோரின் மாமனும் ரம்மியா, அபர்ணா ஆகியோரின் பேரனு மாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.02.2006) சனிக் கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியை களுக்காக கோண்டாவில் கோட்டைக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வீரபத்திரர் வீதி, கோண்டாவில் வடக்கு.* (46374) (54-11-34) தகவல்: குடும்பத்தினர்.

கும்பலில் கோவிந்தாவிற்கு இது இடமல்ல
4ஆம் பக்கம் பார்க்க

## 45ஆம் நாள் நினைவஞ்சலி

### அமரர் கிருஷ்ணன் நவரட்ணம்



(திருவள்ளுவர் சனசமூகநிலைய செயலாளரும் சமாதான நீதிவானும்)

ஏணியாய் நீர் இருந்து எம்மை ஏற்றத்தில்
ஏற்றிவிட்டு எங்கு சென்றீரோ!
நீ இவ்வுலகை விட்டு போகலாம் - ஆனால்
உன் சேவைகள் எம் உள்ளத்தை விட்டுப்
போகாது!
என்றும் உங்கள் நினைவோடு
ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

*432/2, மடம் வீதி, யாழ்ப்பாணம்.* (46373) (54-11-34) திருவள்ளுவர் சனசமூக நிலையமும் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கமும்.

SKY COMPUTERS (Pvt) Ltd.
No. 89, Kandy Road, Chunnikulam, Jaffna.
Tel No 012 4590325
E-mail: skycom@wow.lk
On Line Courses
Affiliated with Irish International University (U.K)
MS OFFICE XP 2 MONTHS 2000/=
DESK TOP PUBLISHING
HARDWARE TECHNOLOGY
COMPUTERIZED ACCOUNTING (ACCPAC, MYOB, Quick books)
KID'S PROGRAM சிறுவர்களுக்கான பயிற்சி நெறி
CERTIFICATE COURSES DURATION 1 MONTH
INTERNET & E-MAIL 2 WEEKS
MS-WORD
MS-EXCEL
MS-ACCESS
MS-POWER POINT
PHOTOSHOP 8.0
PAGEMAKER 7.0
CORELDRAW 12
(யாழ் கச்சேரிக்கு அருகில்)
Today you learn Tomorrow you lead

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் [illegible] ம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.02.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org